# கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்



க. தங்கேஸ்வரி

# கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்

## தங்கேஸ்வரி

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
Website : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | *கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்* |
| ஆசிரியர் | **தங்கேஸ்வரி** |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2008 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | 192 |
| அட்டைப்பட ஓவியம் | ஓவியர் ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | தையல் |
| வெளியிட்டோர் | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |

நூலின் இந்திய விலை **ரூ. 55.00**


விலை ₹50/-

# பொருளடக்கம்


1. விநாயகர் வணக்கம் ........................................ 5
2. திருப்படைக் கோயில்கள் ........................................ 22
3. மண்டூர் முருகன் கோயில் ........................................ 33
4. சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம் .............. 40
5. உகந்தை முருகன் ஆலயம் ........................................ 45
6. விநாயக வணக்கம் ........................................ 50
7. முருக தத்துவமும் முருக வழிபாடும் .............. 59
8. மட்டக்களப்பில் முருக வணக்கம் .................... 70
9. புராதன ஈழத்தில் இந்து மதம் ........................... 105
10. சித்தர்கள் வாழ்வும் வழிகாட்டுதலும் ................ 123
11. சுவாமி விவேகானந்தரின் சமய சமத்துவம் .. 132
12. சுவாமி விவேகானந்தரின் உலகப் பொதுமறைக் கருத்துகள் ......... 142
13. அன்னை சாரதாதேவியார் ........................................ 153
14. ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்கள் ........................................ 169

# கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள்

# என்னுரை

கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்களில்—

அ. விநாயக வணக்கம், ஆ. முருகவணக்கம், இ. கண்ணகி வணக்கம், ஈ.ஸ்ரீராமகிருஷ்ண வணக்கம், உ. சிறு தெய்வ வணக்கம் என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. இவை பற்றிய கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.

சில கட்டுரைகள் ஒரே பொருளில் அமைந்தாலும், அவை வித்தியாசமான தகவல்களைக் கொண்டுள்ளன.

மேலும், சிறுதெய்வ வணக்கம் என்பது சிவன், சக்தி வணக்கத்தின் மறுவடிவமே என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் கிழக்கிலங்கையின் ஒவ்வொரு கிராமத்திலும், இவ்வணக்கங்களுக்கான கோயில்கள் அமைந்துள்ளன.

இக்கிராமத்து மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தாலும், கோயில், உற்சவம், சடங்கு என வரும்போது அவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி இவற்றுக்காகப் பணம் செலவழிக் கின்றனர். நேர்த்திக்கடன் வைக்கின்றனர். இந்நேர்த்திக் கடன் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. அவற்றுள் காவடி எடுத்தல், பிரதட்சனை செய்தல், பூசைப்பெட்டி கொடுத்தல்,

குழந்தையை விற்று வாங்குதல், தீச்சட்டி எடுத்தல் முதலியன சிலவாகும்.

இவற்றைப் பார்க்கும்போது இந்துக்கள் அல்லாதவர் களுக்கு இவை விநோதமாகத் தோன்றும், ஆனால் ஒவ்வொரு சமயத்திலும் விநோதமான செயற்பாடுகள் இருக்கின்றன என்பதையும் அவை, நம்பிக்கை மட்டுமல்லாது, பயபக்தியின் அடிப்படையில் அமைந்தன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் புனிதமாகக் கொள்வதற்கு தலை வணங்கி மரியாதை செய்யுங்கள் என்றார் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர். இந்த அடிப்படை உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேணடும்.

ஸ்ரீராமகிருஷ்ண இயக்கத்தில் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவி ஆகிய மூவரும் முதன்மை பெறுகின்றனர். இவர்களது வழிபாடு ஆன்மீகத்திற்கப்பாற்பட்டது. தியானம், இவ்வணக்க முறையின் அடிப்படை. இன்று உலகெங்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் பரவி இருப்பது இதன் முக்கியத்துவத்துக்குச் சான்றாகும்.

**க. தங்கேஸ்வரி**
**பாராளுமன்ற உறுப்பினர்**

**மட்டக்களப்பு**
**10.8.2008**

தீக்வாபி, சலகுதந்த முதலிய இடங்களுக்குச் சென்று ஆதாரச்சான்றுகளைச் சேகரித்துள்ளார்.

ஏற்கனவே இவரது 1. விபுலானந்தரின் தொல்லியல் ஆய்வு, 2. குளக்கோட்டன் தரிசனம், 3. மாகோன் வரலாறு ஆகிய மூன்று வரலாற்று ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன.

தற்போது 1. மட்டக்களப்புக் கலைவனம், 2. கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு, 3. கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம் பரியங்கள் ஆகிய 3 நூல்களும் சென்னை மணிமேகலைப் பிரசுர வெளியீடாக ஒருசேர வெளிவருகின்றன.

கிழக்கிலங்கை பற்றி அறிய விரும்புவோருக்கு இந்நூல்கள் பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை

**– இரா.நாகலிங்கம்**
**(அன்புமணி)**
**தலைவர், அன்பு வெளியீடு**

**மட்டக்களப்பு**
**10.8.2008**

# அணிந்துரை

செல்வி. தங்கேஸ்வரி பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பு (2004) கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றியவர். தனது சொந்தப் பெயரிலும் மற்றும் தமிழ்ச் செல்வி, கலைச்செல்வி, அருட்செல்வி என்ற புனைப் பெயர்களிலும், இலக்கியம், கலை, சமயம் தொடர்பான கட்டுரைகளை எழுதி வந்தார். இக்கட்டுரைகள் பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க அவ்வப் போது எழுதப்பட்ட சிறப்புக் கட்டுரைகளாகும்.

இவர் கணனிப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் சிறப்புப் பட்டதாரி. அதனால் ஏனையோர் எழுதும் கட்டுரைகளை விட ஆதாரச் சான்றுகள் கொண்டதாக இக்கட்டுரைகள் அமைந்திருக்கும். உசாத்துணை நூல்களுக்கு மேலாக, களநிலை ஆய்வுச் சான்றுகளையும் கொண்டிருக்கும்.

ஆலய சம்பந்தமான கட்டுரைகளை எழுதும் பொழுது அந்தந்த ஆலயங்களுக்கு நேரில் சென்று ஆதாரச் சான்றுகளைச் சேகரிப்பார் அந்த வகையில் திருக்கோணேஸ் வரம், கொக்கட்டிச் சோலை, தாந்தாமலை, பெரிய போரதிவு, மண்டூர் திருக்கோயில், உகந்தை முதலிய ஆலயங்களுக்கு நேரில் சென்று தகவல்களைச் சேகரித்துள்ளார்.

வரலாற்றுக் கட்டுரைகளை எழுதும்போது, மொட்டையகல,



# விநாயகர் வணக்கம்

## 1. ஒரே இறைவன் பல்வேறு வடிவங்கள்

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்பது இந்து தத்துவம். 'ஏகம் சத் - விபரா பஹாதா வதந்தி" - உண்மைப் பொருள் ஒன்றே. பக்தர்கள் அதைப் பலவாறாகக் காண்கிறார்கள். அதனால் தான் "ஒரு நாமம் ஒரு உருவம் இல்லாதவராக ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டோமோ" என்பார் மணிவாசகர். உருவம் அற்ற இறைவனை உருவமாகவும், அருவுருவற்ற நிலையிலும் இறைவனாகக் காண்பது இந்துத் தத்துவம். ஒருவனாகிய இறைவனை பல்வேறு நாமரூபங்களில் வழிபடுவதும் இந்துத் தத்துவமே. ஏன் இந்த முரண்பாடு?

ஆழ்ந்து சிந்தித்தால் இதில் முரண்பாடே இல்லை என அறியலாம். அவ்வாறு சிந்தித்த ஆத்மஞானிகள், இவை ஒவ்வொன்றிற்கும் தகுந்த விளக்கம் அளித்துள்ளனர். ஒரே பொருள், வெவ்வேறு நிலையில், வெவ்வேறு விதமாகத் தோன்றும் என்பது இன்றைய விஞ்ஞானம். அவ்வாறு ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு

குறியீடு வழங்குவதும் விஞ்ஞானம். (உ+ம் : நீர் "$H_2O$" என்னும் குறியீட்டால் குறிக்கப்படும்.)

ஒரே நபர் வெவ்வேறு நிலையில், வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுவார் என்பதற்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், உதாரணம் தந்து விளக்கமளித்துள்ளார். (உ+ம் : ராமநாதன் என்பவர், வீட்டில் தந்தையாக, கணவனாக, தாத்தாவாக அழைக்கப்படுவார். அலுவலகத்தில் மனேச்சராக, ஆலய நிர்வாக சபையில் அறங்காவலராக, றோட்டரி கிளப்பில் தலைவராக அழைக்கப்படுவார்.)

இவ்வாறே ஒரே இறைவனை பல்வேறு நாம, ரூபங்களிலும் பல்வேறு வடிவங்களிலும், பல்வேறு உருவங்களிலும் வழிபாடு செய்யும் முறை இந்து சமயத்தில் உள்ளது. இதில் எவ்வித முரண்பாடும் இல்லை.

## 2. காணபத்தியமும் கணபதியும்

இத்தகைய இந்து சமயத்தை ஆதிசங்கரர், சன்மதங்களாக (ஆறு) வகுத்தார். அவை -

அ. சைவம் (சிவனை முழுமுதற்கடவுளாக வணங்குதல்).

ஆ. சாக்தம் (சக்தியை முழுமுதற்கடவுளாக வணங்குதல்).

இ. வைஷ்ணவம் (விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வணங்குதல்).

ஈ. காணபத்தியம் (விநாயகரை முழுமுதற் கடவுளாக வணங்குதல்).

உ. கௌமாரம் (முருகனை முழுமுதற் கடவுளாக வணங்குதல்).

ஊ. சௌரம் (சூரியனை முழுமுதற் கடவுளாக வணங்குதல்).

(இதன் விரிவான விளக்கத்தை சுவாமி சித்பவானந்தர் எழுதிய "கடவுளின் வடிவங்கள்" என்ற நூலில் காணலாம்.)

இந்நூலில் "விநாயகர்" பற்றி சித்பவானந்தர் பின்வருமாறு கூறுகிறார் :

"...மஹாகணபதி என்பவன் பூரணன். அவன் முழுமுதற் பொருள் ஆகிறான். நிர்க்குண பிரம்மமாயிருப்பவனும் அவனே; வேதாந்தம் பகரும் சகுண பிரம்மம் அல்லது ஈஸ்வரன் மஹாகணபதியுடன் ஒன்றித்து விடுகிறான். பிரணவப் பொருள் அல்லது ஓங்கார மூர்த்தி எனவும் அவன் அழைக்கப்படுகிறான். பெரிய வீட்டு நாயகனை இவனை உபாசிப்பவர்கள் இகத்தில் யோக ஷேமத்தையும் பரத்தில் முத்தியையும் பெறுகின்றனர்.

(கடவுளின் வடிவங்கள், பக். 82)

தெய்வமூர்த்தங்கள் விக்கிரங்களாக உருவாக்கப் பட்டபோது, அத்தெய்வ மூர்த்தங்களின் தத்துவங்கள் உட்பொருளாக அமைந்தன. சிவன், பார்வதி, விஷ்ணு,

கணபதி, முருகன் முதலிய ஒவ்வொரு தெய்வமூர்த்தமும் இவ்வாறானதே. அந்தவகையில் விநாயகரின் உருவம் பின்வரும் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. அங்குசம், பாசம் இரண்டும் படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றைக் குறிக்கும். அபயகரம் அருளல், மறைத்தல் ஆகியவற்றைக் குறிக்கும். பேழைவயிறு பிரபஞ்சத்தைக் குறிக்கும், யானைமுகம் ஓங்காரத்தைக் குறிக்கும். எலி வாகனம் ஆசையை அடக்குதல் என்பதைக் குறிக்கும்.

(இவற்றிற்கு வேறுவகையான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன).

## 3. ஓங்கார வடிவினன்

விநாயகரை முதற்பொருள் என்பார்கள். அதற்குக் காரணம், இப்பிரபஞ்ச இயக்கத்தின் ஆதார சுருதியின் 'ஓம்' என்னும் வடிவில் அவர் உருவகப்படுத்தப் பட்டிருப்பது தான். ஓம் என்னும் ஒலி எப்படி இப்பிரபஞ்ச இயக்கத்தின் ஆதார சுருதியாகும்? அதற்கான விளக்கம் வருமாறு :

"...பிரணவத்தின் ஒலி அலைகள் எல்லா இடத்திலும் பரந்து விரிந்திருக்கின்றன. பிரணவம் எதிலிருந்து உருவாயிற்று? அது பரமாணுவிலிருந்து உருவாயிற்று. இந்தப் பரமாணுவத்தைத் தாண்டி வேறெந்தப் பொருளையும் இவ்வுலகில் காணமுடியாது. இதனைப் புரிந்து கொள்ள ஏது வழி? "கணநாதா" இதனைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பலவற்றைக் கண்டறிய முயற்சித்திருக்கிறார். கடைசியில் இது மட்டுமே ஆதார

சுருதி, ஆதாரமான ஒலி என்ற முடிவுக்கு வந்தார். அதுவே முதல் சப்தம். அதன் பிறகுதான் மற்றவை உருவாயின (பகவான் சத்ய சாயிபாபா 24.7.2002ல் அளித்த அருட்செய்தி, பார்க்க "ஸனாதனஸாரதி", ஆகஸ்ட் 2002, பக். 3).

இந்த ஓங்காரம் பற்றி ஏற்கனவே பல ஞானியர் விளக்கிக் கூறியுள்ளனர். "ஓம்" என்பது மூலமந்திரம். சகல மந்திரங்களும் இதனை ஆதாரமாகக் கொண்டே உருவாயின; உச்சரிக்கப்படுகின்றன.

மேலே குறிப்பிட்ட அணு, பரமாணு என்பன அளப்பரிய ஆற்றல் கொண்டவை. அணுச்சேர்க்கை (Nuclear fusion) அணுப்பிளவு (Nuclear fission) என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே அணுக்குண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிக்கப்பட்டன. கண்ணுக்குப் புலப்படாத அணுவுக்குள் இடம்பெறும் அதே இயக்கமே மனதால் கிரகிக்க முடியாத அண்டத்திலும் இடம்பெறுகின்றது என்பது விஞ்ஞானிகள் கண்டறிந்த உண்மை.

"அனேரணியான் மஹதோ மஹீயான் (அணுவிலும் கூடத் தெய்வமே உள்ளது.) பரமாணுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இணைந்து கடினமான பொருளாக மாறின. இங்ஙனம் இணைந்தபோது வெப்பம் உருவாயிற்று. இந்த வெப்பத்தினால் பிரமாண்டமான ஒலி கேட்டது... அப்போது ஏற்பட்ட முதல் சப்தமே பிரணவம். அதுவே முதல் ஒலி. அதுவே ஓங்காரம். (பகவான் சத்ய சாயிபாபா)

## 4. விக்ன விநாயகன்

ஓம் கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பு பலசார பட்சிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

*விநாயகப் பெருமானின் பண்புகள் இச்சுலோகத்தில் சொல்லப்படுகின்றன. யானைவடிவினன், பூதகணங்களால் (பஞ்சபூதங்கள்) பூஜிக்கப்படுபவன். நாவற்பழம் முதலிய பழவர்க்கங்களை உண்பவன். உமையின் மைந்தன், சோகத்தைப் போக்குபவன். அத்தகைய விக்னேஸ்வரப் பெருமானுடைய பாதகமலங்களை பூஜிப்போம்.*

*இதில் சோக விநாசகாரணம், என்னும் பண்பு முக்கியமானது. துன்பத்தைப் போக்குபவன், இடர் களைபவன், விக்கினங்கள் நேராமல் காப்பவன். இதுவே விநாயகனின் தனித்துவம். இதன் காரணமாகவே, முதல் வணக்கம் விநாயகருக்குரியதாகிறது. நூல்களிலும், விநாயக வணக்கம் காப்புச் செய்யுளாக இடம்பெறுகிறது. விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்தாது சென்ற சிவன் பட்ட பாட்டை "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைபரதம், அச்சது பொடி செய்த அதிதீரா" என அருணகிரிநாதர் பாடுவார். இவ்வாறே முருகன், விநாயகரைத் தொழாது வள்ளியிடம் சென்ற போது இடர்பட்டார் என்பது கந்த புராணக்கதை. முழுமுதற் பொருளான இறைவனைத் தொழுத பின்னரே நாம் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்க வேண்டும் என்பதை உணர்த்தவே இக்கதைகள் உருவாக்கப்பட்டன என்பதை நாம் இலகுவாக ஊகிக்கலாம்.*

*கலியுகத்தில் ஒவ்வொரு தெய்வமூர்த்தத்திற்கும் ஒவ்வொரு தனித்துவம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் விநாயகர் வினை தீர்க்கும் விநாயகராக கற்பிக்கப் பட்டிருக்கிறார்.*

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

## 5. விநாயக வழிபாட்டின் தொன்மை

*விநாயக வழிபாடு எப்போது ஆரம்பித்தது? இந்தக் கேள்வியே அபத்தமானது. "ஓம்" என்ற மந்திர உச்சாடனம் எப்போது ஆரம்பித்ததோ அப்போதே விநாயக வழிபாடு ஆரம்பித்துவிட்டது எனலாம். வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது தமிழர் நாகரிகம், ஆரியர் நாகரிகம் ஆகியவற்றுக்குரிய காலம் பின்வருமாறு, வரலாற்று ஆசிரியர்களால் வரையறுக்கப் பட்டுள்ளது.*

*1. சிந்துவெளி நாகரிகம் - கி.மு. 3750 - கி.மு. 2750*

*2. வேதகாலம் - கி.மு. 1500 - 600*

*சிந்துவெளி நாகரிகக் காலத்தில் லிங்க வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஏனைய தெய்வ மூர்த்தங்கள் பற்றி (விநாயகர் உட்பட) எவ்வித குறிப்புகளுக்குமில்லை. ஆனால் வேதகாலத்தில் விநாயகரைப் பற்றிய குறிப்பு வேதங்களில் இடம்*

பெறுகிறது. அ) யசுர் வேதத்தில் - சால, கடாப்கர், கூஷ்மான்ட, ராஜபுத்ர தேவயனார், உஸ்மிதல்; ஆ) இருக்கு வேதத்தில் - கணபதி.

மேலும் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குரியதெனக் கொள்ளப்படும் "கல்லாடம்" என்ற நிகண்டு நூலிலும் விநாயகரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன.

வியாசமுனிவர் மகாபாரதக் கதையை எழுதியபோது, வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார் என்று ஒரு 'கதை' உள்ளது. வியாசரையும் விநாயகரையும் இணைப்பது பொருத்தமற்றது. எனினும், அக்காலத்தில் அதாவது மகாபாரதம் இயற்றப்பெற்ற காலத்தில் 'விநாயகர்' என்ற பெயர் இருந்ததை இக்கதை உறுதி செய்கிறது.

## 6. தமிழகத்தில் விநாயகர் வழிபாடு

சாளுக்கிய மன்னன் புலிகேசிக்கும், பல்லவ மன்னன் நரசிம்மபல்லவனுக்கும் (மாமல்லன்) ஏற்பட்ட பெரும்போரில், வாதாபியை அழித்து வெற்றி கொண்ட பின் நாடு திரும்பும்போது, பல்லவ மன்னனின் தளபதியாக இருந்த பரஞ்சோதியார் (பின்னால் சிறுத்தொண்டநாயனார் எனப் பெயர் பெற்றவர்) அங்கிருந்து ஒரு பிள்ளையார் சிலையை தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து தனது சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடியில் பிரதிஷ்டை செய்தார் என ஒரு வரலாறு உண்டு.

இதன் பின்னர், விநாயக வழிபாடு தமிழ் நாட்டில் பரவியது. நரசிம்ம பல்லவனின் மகனான ராஜசிம்மன் காஞ்சியில் அமைத்த கைலாசநாதர் ஆலயத்தில் விநாயகர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக இக்காலத்தில் இயற்றப்பெற்ற தேவாரங்களிலும் பிற நூல்களின் காப்புச் செய்யுள்களிலும் விநாயகர் இடம்பெறுகிறார். பத்தாம் திருமுறையான திருமூலர் திருமந்திரத்தின் காப்புச் செய்யுள்,

இது,

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

அடுத்து விநாயகர் மகிமையைக் கூறும் மற்றொரு துதி வருமாறு :

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

## 7. கிழக்காசிய நாடுகளில் விநாயக வணக்கம்

கிழக்காசிய நாடுகள் பலவற்றில் விநாயக வணக்கம் பரவியிருப்பது ஆச்சரியமான செய்தி. ராஜேந்திர சோழன் காலத்திலோ அதற்கு முன்னரோ கிழக்காசிய நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் மூலம்

இவ்வழிபாடு வேரூன்றி இருக்கலாம். அதற்கு முன்னர் இவ்வழிபாடு அங்கு தோன்றியிருக்கவும் கூடும். ஆனால் சில நாடுகளைப் பொறுத்தவரை அதைத் திட்டவட்டமாகக் கூறுவதற்கான சான்றுகள் இல்லை.

விநாயக வழிபாடு நிலைத்துள்ள சில நாடுகளின் விபரம் பின்வருமாறு,

அ. **பர்மா :** பர்மாவில் (தற்போது மியன்மார்) "மகாபிள்ளே" என விநாயகர் அழைக்கப் படுகிறார். "மஹாகணபதி" என்னும் பெயர் இப்பெயருடன் ஒப்பு நோக்கத்தக்கது.)

ஆ. **ஜாவா :** இடையூறுகளை நீக்கும் கடவுள் என விநாயகர் இங்கு வழிபாடு செய்யப்படுகிறார். வினைதீர்க்கும் விநாயகன் அல்லது விக்னவிநாயகன் என்னும் பெயர் இதனுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

இ. **இந்தோனேஷியா :** ஈஸ்வரரோடு எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரை ஸ்ரீ விநாயகர் எனவும் ஏனைய தெய்வ மூர்த்தங்களோடு இங்கு வழிபடுகின்றனர்.

ஈ. **கம்போடியா :** 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட விநாயகர் சிலைகள் இன்றும் இந்நாட்டில் பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. எனவே இந்தியாவிலிருந்து தமிழர்கள் அங்கு செல்லுமுன்னரே விநாயக வணக்கம் இங்கு நிலை பெற்றிருந்தது எனலாம்.

உ. **மலேசியா :** இங்கும் விநாயக வழிபாடு பிரசித்தி பெற்றுள்ளது. இங்கு "கெடரக்" என்னுமிடத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது விநாயகர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. எனவே இங்கும் விநாயக வழிபாடு பூர்வீகமானது எனக் கொள்ளலாம்.

ஊ. **சீனா :** இங்கு 'யுன்குவான்' துங்குவான் என்னும் பிரதேசத்தில் உள்ள குகைக் கோயில்களில் 500க்கும் மேற்பட்ட பிள்ளையார் சிலைகள் உள்ளனவாம். இங்குள்ள பிள்ளையார் திரிசூலம் ஏந்தியவராகக் காணப்படுகிறார். 'தகுவான்கியிக்' என அழைக்கப்படுகிறார்.

எ. **யப்பான் :** இங்கு விநாயக்ஷா என விநாயகர் பெயர் பெற்றுள்ளார்.

## 8. பிற நாடுகளில் விநாயக வணக்கம்

அ. **எகிப்து :** இது ஒரு இஸ்லாமிய நாடு, ஆனால் இங்கும் விநாயகர் சிலைகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. எனவே, ஒரு காலத்தில் இங்கு விநாயகரை வணங்குவோர் இருந்தனர் எனக் கொள்ளலாம்.

ஆ. **நேபாளம் :** இது ஒரு இந்து சாம்ராஜ்யம். அசோக சக்கரவர்த்தி காலத்தில் அவனது புதல்வி மூலம் இங்கு விநாயகர் வழிபாடு ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள பிள்ளையார் "எதிர்முக கணேசன்" என

அழைக்கப்படுகிறார். (அசோகன் பௌத்த மதத்தைத் தழுவுமுன்னர் இது நிகழ்ந்திருக்க வேண்டும்.)

இ. **மங்கோலியா :** மங்கோலியாவில் விநாயகர் "தோக்கர்" எனவும் "அபுன்காகரம்" எனவும் அழைக்கப்படுகின்றார்.

**முக்கிய குறிப்பு :**

மேற்குறித்த கிழக்காசிய நாடுகளிலும் பிற நாடுகளிலும் பௌத்தமே பிரதான சமயமாக உள்ளது. இங்கெல்லாம், இந்து சமயம் நிலைத்திருந்தது. அதன் பின்னர் பௌத்தத்தோடு, இணைந்து இப்பிள்ளையார் வணக்கம் இலங்கையில் உள்ளது போல் தொடர்ந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

ஈ. **அமெரிக்கா :** வட அமெரிக்காவில், மெக்ஸிக்கோ என்னும் இடத்தில் அகழ்வாராய்ச்சி நடாத்தியவர்கள், அப்பகுதியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திராவிட நாகரிகம் நிலைத்திருந்ததெனக் கூறியுள்ளனர். இந்நாகரிகம் "மாயா நாகரிகம்" எனக் குறிப்பிடப்படுகிறது. இங்கு வெளிப்பட்ட கட்டடங்களும், நகர அமைப்பும் சிந்துவெளியில் அமைந்திருந்த கட்டடங்களை ஒத்ததாக உள்ளன. இங்கு தற்போது பல்வேறு விநாயக உருவங்களும் விநாயகர் ஆலயங்களும் உள்ளன. புலம்பெயர்ந்து சென்ற இந்துக்களால் விநாயக வழிபாடு சிறப்பாக நடந்து வருகிறது.

## 9. பௌத்தமும் விநாயக வழிபாடும்

இலங்கையில் பல பௌத்த விகாரைகளில், விஷ்ணு, முருகன், பிள்ளையார் முதலிய சிலைகள் காணப்படுகின்றன. பௌத்தர்கள் மத்தியில் இன்றும் இவ்வழிபாடு தொடர்கிறது. இவற்றுள் பிள்ளையார் "கணதெய்யோ" என அழைக்கப்படுகிறார்.

இந்நடைமுறை எவ்வாறு ஏற்பட்டிருக்கக்கூடும். இலங்கையில் பௌத்த சமயம் பரவுவதற்கு முன்னர் இங்கு ஒரு சமயம் இருந்ததென்றால் அது இந்து சமயமே. மலைக்குகைகளில் உள்ள, பிராமிக் கல்வெட்டுகள் மூலம் இது நிரூபணமாகிறது. எனவே அக்காலத்திலிருந்தே இந்து சமய வணக்க முறைகள், பௌத்த சமயம் பரவிய பின்னரும் தொடர்ந்திருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறில்லை. (கதிர்காமத்தில் முருக வணக்கம் பிரதானமாக இருப்பதை இங்கு நினைவு கூரலாம்.)

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் அமைக்கப் பட்டதாகச் சொல்லப்படும் மிஹிந்தலை கண்டக சைத்திய என்னும் விகாரையின் வடக்கு வாயிலின் கல்வெட்டிலே, யானை முகமும், மனித உடலும், கொண்ட உருவம் உள்ளது. யானை முகத்தில் ஒரு தந்தம் உடைபட்டுள்ளது. இவ்விநாயக வடிவம் அக்காலத்தில் நிலவிய விநாயக வழிபாட்டுக்குச் சான்று பகர்கிறது.

தெவி நுவர பிரதேசத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் இந்து சமயம் நிலைத்திருந்ததென்பதற்கான சான்றுகள் உள்ளன. திக்வெலைக்கு அண்மையில் "தொண்டிலே"

என ஒரு பிரதேசம் உள்ளது. இது 'தென்ட்றா' என அழைக்கப்படுகிறது. சிங்கள மொழியில் இப்படி ஒரு பதம் இல்லாததால், இச் சொல்லின் மூலவடிவம் "தென்திரம்" என இருந்திருக்கலாம். (ஆதாரம் : தினகரன் 9.6.2002 -எம். வை. சப்ரூகான்) இது ஒரு இந்துப் பிரதேசமாகும்.

## 10. பிற சான்றுகள்

தெவிநுவரவிற்கும், றுஹுணு பல்கலைக்கழகத்திற்கும் இடைப்பட்ட "வெல்லமடம்" என்னும் இடத்தில் பிள்ளையார் கோயில் ஒன்று இருந்ததாக "திசர சந்தேசய" "கோகில சந்தேசய" முதலிய சிங்கள நூல்கள் குறிப்பிடுகின்றன.

12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "சசதாவத" என்னும் சிங்கள நூலிலும் விநாயகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்டி உடுநுவர லங்காதிலக விகாரையில் விநாயகர் ஆலயம் ஒன்றுள்ளது. இவ்வாலயம் நாயக்கர் காலத்தில் அமைக்கப் பட்டதென்பர். அதற்காதாரமாக இவ்வாலயம் இந்து முறைப்படி அமைக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுவர். இது கண்டி ஆட்சியில் நாயக்க மன்னர்கள் வழிபட்ட ஆலயமாகும்.

இரண்டாம் ராஜசிங்கன், அவனது மகன் வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் முதலியோர், தென்னிந்தியாவில் இருந்து பெண் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இவர்கள் வழிபாடு

செய்வதற்கு இந்து ஆலயங்கள் அவசியமாக இருந்தன என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்த வகையில், விநாயகர் வழிபாடு உட்பட இந்து வழிபாட்டு முறைகள் பௌத்தர்களிடையேயும் பரவின எனலாம். கம்பளை, கோட்டை, கண்டி முதலிய நகரங்கள் இராசதானியாக இருந்த காலத்தில், விநாயகர் வழிபாடு சிங்கள பௌத்த மக்களிடையே தொற்றிக் கொண்டதுடன், அக்கால இலக்கியமான "சந்தேச காவ்ய" நூலிலும் விநாயக வழிபாடும் இடம் பெற்றதெனலாம். சோழர் ஆட்சிக் காலத்தில், பொலன்னறுவையில் பல இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவை சிவன் கோவில்களாக இருந்தன. விநாயக வழிபாடும் இங்கு இடம் பெற்றிருக்கலாம் என ஊகிப்பதில் தவறில்லை.

## 11. பல்வேறு விநாயக மூர்த்தங்கள்

இந்து சமயத்தில், சிவன், சக்தி, விஷ்ணு, முருகன், விநாயகர் முதலிய தெய்வமூர்த்தங்கள் ஒவ்வொன்றுக்கும் பல்வேறு வடிவங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் விநாயகருக்குப் பின்வரும் 32 வடிவங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. அவை -

பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சக்தி கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்கின கணபதி, சவிப்ர கணபதி, ஹேரம்ப கணபதி, லட்சுமி கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, மகாகணபதி, விஜய கணபதி,

ஏஹாசர கணபதி, வர கணபதி, திரயாக ஷர கணபதி, ககஷிப்ர கணபதி, ஹரித்ரா கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, கணமோகன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, மும்முக கணபதி, சம்ஹ கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, ஸங்கஷ்ட்ஹர கணபதி, என்பனவாம்.

பக்தர்கள் தமக்குப் பிடித்த வடிவில் விநாயகரை வழிபடலாம். இத்தனை வடிவங்களில் விநாயகர் இருந்தாலும் சில அவசர பூஜைகளின் போது விக்கிரகம் எதுவும் இல்லாமலே மஞ்சள் உருண்டையில் அருகம்புல்லைச் சொருகி பிள்ளையாராக வழிபடும் மரபு தொன்றுதொட்டு நடைமுறையில் உள்ளது.

தெய்வமூர்த்தங்களுக்குப் பிரமாண்டமான ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. ஆனால் பிள்ளையார் வழிப்பிள்ளையாராக வீதி ஓரங்களில் சர்வ சாதாரணமாகக் காட்சி அளிப்பார். ஆலமரத்தடியிலும் அரச மரத்தடியிலும் அமர்ந்திருப்பார். விநாயகர் எவ்வளவுக்கெவ்வளவு எளிமையாக இருக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு தெய்வ சாந்நித்தியம் உடையவராக இருக்கிறார். பக்தர் வேண்டும் வரங்களை அருள்கிறார். விநாயகருக்குரிய ''நேர்த்தியை'' நிறைவேற்றுவதாகத் திரளும் பக்தர் கூட்டங்களிலிருந்து இவ்வுண்மையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

**12. தோத்திரங்கள்**

விநாயகரைப் போற்றும் ஏராளமான பக்தி இலக்கியங்களில் முக்கியமான சிலவற்றை இங்கு நாம் நோக்கலாம்.

அ. விநாயகபுராணம் : இது விநாயகர் பற்றிய ஒரு புராணக்கதை ஆகும். இயற்றியவர் : கச்சியப்ப முனிவர். வடமொழியில் உள்ள விநாயக மாண்மியம் என்னும் முதல்நூலைக் கொண்டு இப்புராணம் ஆக்கப்பட்டதென்பர்.

ஆ. பிள்ளையார் கதை: சுன்னாகம் வரதபண்டிதர் அருளியது.

இ. விநாயக கவசம் : காசியப முனிவர் அருளியது.

ஈ. விநாயகர் அகவல்: ஔவையார் அருளியது.

அங்கிங்கெனாதப்படி எங்கும் பிரகாசமாய் ஆனந்த மூர்த்தியாகியும், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணத்துவமாகவும் இருக்கும் இறைவனை உருவகப்படுத்தி, உருவமாக்கி வழிபடும் முறை இந்துசமயத்திற்குரிய சிறப்பியல்பு. இதில் விநாயகர் என்ற உருவகம் மூலமுதற்பொருளின் உருவாகும். இறைவழிபாட்டில் பக்திமார்க்கத்தில் ஈடுபட்ட மக்களுக்கு இது ஒரு சிறந்த உபாயமாகும். இதன் பேரால் செய்யப்படும், பூசை, புனக்காரம், திருவிழா, அபிஷேகம், விரதம் அனைத்தும் அர்த்தமுடையனவே.

**வேழமுகத்து விநாயகனைத் தொழ**
**வாழ்வு மிகுத்துவரும்**
**வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ**
**துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே!**

*(குறுமண்வெளி சித்திவிநாயகர் ஆலய கும்பாபிஷேக மலர், 4.7.2004)*



# திருப்படைக் கோயில்கள்

தமிழகத்தில் அறுபடைவீடு என ஆறு பிரபல முருகத் தலங்கள் அழைக்கப் படுவதுபோல், மட்டக்களப்பில் முருகனின் திருப்படையான "வேல்" பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆறு முருகன் கோயில்கள் "திருப்படைக் கோயில்கள்" ஆகின. இவற்றுள் வெருகல் முருகன் ஆலயத்தில் பிற்காலத்தில் முருகன், வள்ளி, தெய்வானை விக்ரகங்கள் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

திருக்கோயில், உகந்தை, மண்டூர் ஆகிய கோயில்கள் பற்றிய புராணக்கதை ஒன்று பின்வருமாறு கூறுகிறது:

சூரபத்மனைக் கொன்ற முருகனது வேல் வாகூர மலையை இரு கூறுகளாகப் பிளந்து, கடலில் மூழ்கிய போது மூன்று பொறிகள் தோன்றின என்றும், அவை முறையே உகந்தைமலை உச்சியிலும், திருக்கோயிலில் வெள்ளை நாவல் மரத்தின் மீதும், மண்டூரில் தில்லை

மரத்தின்மீதும் தங்கின. அவற்றை ஆதாரமாகக் கொண்டு அவ்விடங்களில் முருகன் கோயில்கள் தோன்றின.

## வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம்

### 1. ஆலய அமைவு

திருக்கோணமலை மாவட்டத்தின் தென் எல்லையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வட எல்லையாகவும் அமைந்துள்ள இவ்வாலயம் மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. மாணிக்க கங்கைக் கரையில் அமைந்துள்ள கதிர்காமம் போல, இக்கங்கைக் கரையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் தெய்வ சாந்நித்தியம் நிறைந்த ஒரு இடமாகக் காட்சியளிக்கிறது.

இயற்கை அழகு வாய்க்கப் பெற்று மட்டக்களப்புக்குத் தெற்கே உகந்தைத் தலம் அமைந்துள்ளது போல மட்டக்களப்புக்கு வடக்கே வெருகல் தலம் அமைந்துள்ளது, கதிர்காமத்தை நினைவூட்டும் பல இடங்கள் இங்குள்ளன.

கதிர்காமத்தில் வள்ளிமலை, தெய்வானை மலை அமைந்திருப்பது போல, இங்கு வெருகல்மலை, படிவெட்டுமலை அமைந்துள்ளன. அங்கு மாணிக்க கங்கை அமைந்துள்ளது போல இங்கு வெருகல் ஆறு அமைந்துள்ளது. இவ்வாறு கதிர்காமத்தை நினைவூட்டும் இத்தலத்தை உபயகதிர்காமம் என்றும் அழைப்பர். இக்கதிர்காம ஒற்றுமை மிகவும் முக்கியமானது.

கதிர்காமத்துக்குப் பாதயாத்திரையாகச் செல்வோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவதாகத் தரிசித்துத் தங்கி, நின்று செல்லும் தலம் இதுவேயாகும். இந்த ஆலயத்தின் தல விருட்ஷமாக கடம்ப மரம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் மூலஸ்தானத்தில் வேல் மட்டுமே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இவ்வாலயத்தில் பிற்காலத்தில் வள்ளி தெய்வானை சமேத முருகனின் திருவுருவமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

குன்றுகளும், குளங்களும், காவுகளும், சோலைகளும் நிறைந்துள்ள இவ்வாலயத்தின் நிலப்பிரதேசம் குறிஞ்சியும், முல்லையும் கலந்த தோற்றத்தையுடையது.

## 2. கர்ண பரம்பரைக் கதை

இவ்வாலயத்தின் வரலாறு பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் இவ்வாலயத்தின் தொன்மையை எடுத்துக் காட்டுவதாக உள்ளன. இவ்வாறான ஒரு கதை வருமாறு:

இப்பிரதேசத்தில் இலங்கையின் ஆதிக்குடியைச் சேர்ந்த குவேனியின் வம்சத்து வேடர்கள் வாழ்ந்த காலத்தில் இவ்விடத்தில் இருந்த ஒரு ஆலமரப் பொந்தில் ஒரு வேல் இருந்தது என்று கூறப்படுகிறது. இந்த வேலுக்கு வேடர்கள் வழிபாடு செய்ததாகவும், இவ்வழியே கதிர்காம யாத்திரை செய்த ஒரு செட்டியார் இவ்வாலயத்தில் தங்கிய போது, கனவில் முருகன் தோன்றி, அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைக்கும்படி

கூறியதாகவும் அதன்படியே செட்டியார் இவ்வாலயம் அமைத்ததாகவும் கூறப்படுகிறது.

ஆலயம் அமைப்பதற்கான திரவியம் அங்குள்ள கல்மலை என்ற இடத்தில் இருப்பதாக இறையருளால் அறிந்து, செட்டியார் அம்மலையில் இருந்த திரவியத்தைப் பெற்றார். அத்திரவியம் இக்கோயில் அமைக்கப் பயன்பட்டது என்பர். இவ்வாறு ஆலயத்தை அமைத்தவர் நல்லநாதச் செட்டியார் எனவும் இக்கதையில் கூறப்படுகிறது.

இக்கதையைத் துருவி நோக்கி, இவ்வாலயம் ஒரு வணிகச் செட்டியாரால் அமைக்கப்பட்டது எனக் கொள்ளலாம். இக்கூற்றுக்கு அனுசரணையாக, இவ்வெருகல் பதிக்கு அண்மையிலே இலங்கைத்துறை முகத்துவாரம் அமைந்திருப்பதும், இத்துறைமுகத்தில் வணிகக் கப்பல்கள் வந்து செல்வதும் சான்றுகளாகின்றன.

காலத்துக்குக் காலம் இலங்கைத்துறைக்கு வந்த வணிகர்களால் இவ்வாலயம் பேணப்பட்டிருக்கலாம். இத்துறையை "இலங்கைத்துறை" என அழைப்பதால் அப்போது இது இலங்கையில் உள்ள மிகவும் முக்கியமான ஒரு துறையாக இருந்திருக்கலாம். அதன் காரணமாகவே ஆதியில் இத்துறைமுகம் லங்காப்பட்டினம் என்ற பெயரைப் பெற்றிருந்தது என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

## 3. வரலாறு

கலிங்க நாட்டிலிருந்து இலங்கை வந்து, பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு, 40

ஆண்டுகள் வரை மாகோண் என்னும் அரசன் (கி.பி. 1215-1255) ஆண்டான் என்பது வரலாறு. இவனுடன் உபராஜனாக வந்த சோழகங்கதேவன் குளக்கோட்டன் என்னும் பெயருடன் மாகோனின் ராஜப்பிரதிநிதியாகத் திருக்கோணமலைப் பிரதேசத்தை நிர்வகித்து வந்தான்.

குளக்கோட்டன் திருக்கோணமலைப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்களுக்கு வருமானம் கிடைப்பதற்காக கந்தளாய்க் குளத்தைக் கட்டி பல ஏக்கர் விஸ்தாரமுள்ள காணிகளுக்கு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தினான். இவ்வாறு அவன் 2700 அவணம் நெல் விளைச்சலைத் தரக்கூடிய காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்தான் என்பர். அப்போது இப்பிரதேசம் கொட்டியாரம் என அழைக்கப்பட்டது.

இவன் இதற்காக சிந்து நாட்டிலிருந்து குடிமக்களைக் கொண்டு வந்து தம்பலகாமம் முதல் வெருகல் வரை குடியமர்த்தினான். குளக்கோட்டனுடன் வந்த தனியுண்ணாப்பூபால வன்னியன் இப்பகுதியை மேற்பார்வை செய்தான். வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயத்தைப் பராமரிக்கும் பொறுப்பு இவனிடமே விடப்பட்டது. இவ்வண்ணிமையின் நிர்வாகத்தின் கீழ் மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு கங்குவேலி, திருமங்கலாய், இலங்கைத்துறை, கிளிவெட்டி, சம்பூர், தோப்பூர் முதலிய கிராமங்கள் இருந்தன. இவ்விடங்களிலும் அவன் ஆலயங்களை அமைத்தான்.

வெருகலுக்குத் தெற்கே கதிரவெளி முதலிய தொன்மை வாய்ந்த கிராமங்கள் உள்ளன. இப்பிரதேசங்களில் உள்ள கோயில்களிலும்

பூபாலவன்னியனின் திருப்பணிகள் இடம் பெற்றிருக்கலாம்.

சித்திரவேலாயுதர் ஆலயத்தின் தென்புறமாக கதிர்காமக் கந்தன்கோயில் அமைந்துள்ளது.

அதன் மூலஸ்தானத்தில் முருகன் திருவுருவமோ, வேலோ பிரதிஷ்டை செய்யப்படாது அட்சயமந்திரம் எழுதப்பெற்ற பேழை மட்டும் வைக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலுக்குச் சற்றுத் தூரத்தில் காவடிப் பிள்ளையார் கோயில் உள்ளது. கோயிலின் கிழக்குத் திசையில் வீரபத்திரர் கோயில், தாமரைக்குளம், சூரன்கோட்டை என்பன அமைந்துள்ளன. இவை எல்லாம் கதிர்காமத்தில் உள்ள முருகன் கோயிலின் அமைப்பை நினைவூட்டுவதாக உள்ளன.

## 1. கோயிற்போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம்

ஆலய அமைவிடம் மட்டக்களப்புக்குத் தெற்கே, மடுவான்கரையில் (வாவியின் மேற்குப் புறம்) 19 மைல் தூரத்தில், வயல்கள் நிறைந்த மருதநிலச் சூழலில், இயற்கை எழில் கொண்ட கிராமமாக அமைந்துள்ளது கோயில் போரதீவுக் கிராமம். இதன் அண்மையில் மட்டக்களப்பு வாவி மெல்லத் தவழ்ந்து செல்கிறது. ஏனைய முருகன் கோயில்கள் போலவே வானளாவ வளர்ந்த விருட்சங்களின் மத்தியில் இந்த ஆலயம் அமைந்துள்ளது. இங்கும் ஆலய முன்றலில் ஒரு பாரிய கடம்ப மரம் (வம்மி) சடைத்து நிழல் பரப்பி நிற்கிறது.

திருக்கோயில் பதியை வெள்ளைநாவற்பதி என அழைப்பது போலவே கோயில் போரதீவுப் பதியையும்

வெள்ளை நாவற்பதி எனச் சிலர் குறிப்பிடுகின்றனர். இதன் காரணம் அறியுமாறில்லை. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பும் கொண்டு இவ்வாலயம், மட்டக்களப்பு பிரதேசத்தின் திருப்படைக் கோவில்களில் ஒன்றாகவும் தேசத்துக் கோயிலாகவும் பெருமை பெற்றது.

இவ்வாலயம் மட்டக்களப்பு வாவியின் மேற்கில் (மடுவான் கரையில்) அமைந்துள்ளதால் கொக்கட்டிச் சோலைக்குச் செல்வதுபோல் அவ்வாவியைக் கடந்தே ஆலயத்துக்குச் செல்ல வேண்டும். ஆனால் பட்டிருப்பில் வாவிக்கு மேல் ஒரு பாலம் அமைக்கப்பட்டிருப்பதால் சிரமமின்றி வாகனங்கள் மூலமாக இவ்விடத்திற்குச் செல்ல முடியும்.

இப்பிரதேசத்தில் "பெரியபோரதீவு" என மற்றொரு கிராமமும் உண்டு. கோயில் போரதீவுப் பகுதியில் முற்காலத்தில் பிரசித்தி பெற்ற சித்திரவேலாயுதர் கோயில் அமைந்ததால் இவ்விடம் "கோயில் போரதீவு" எனப் பெயர் பெற்றது போலும். திருக்கோயில் பிரதேசம் அங்கு ஒரு பிரசித்தி பெற்ற சித்திர வேலாயுதர் ஆலயம் அமைந்ததால் திருக்கோயில் எனப் பெயர் பெற்றது இங்கு நினைவு கூரத்தக்கது.

**2. மட்டக்களப்பு மான்மியம் கூறுவது :**

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி மட்டக்களப்பின் வரலாறு கூறும் "மட்டக்களப்பின் மான்மியம்" என்னும் ஏட்டுப்பிரதி நூலில் பின்வரும் வரலாறு இடம்பெறுகிறது. அவ்வரலாறு வருமாறு :

ஆதிகாலத்தில் காலசேனன் என்னும் அரசன் பெரிய படைகளோடு வந்து, இப்பிரதேசத்தில் ஆட்சி செய்த மண்டுநாகனை வென்று, இரண்டு பெரிய ஆலயங்களையும் இடித்துத் தள்ளினான் (கோவில் போரதீவு, மண்டூர் ஆலயங்கள்). பிற்காலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்ற மதிசுதன் இவ்வாலயத்தைப் புனரமைத்து, தொண்டைநாட்டுச் சிற்பிகளை வரவழைத்து இவ்வாலயத்துக்கு 5 தட்டுகளைக் கொண்ட தூபியும் (தற்போதைய ஆலயத்தில் இத்தூபி இல்லை), கோபுரவாசல், வாகனவீடு ரதசாலை மூன்று சுற்றுமதில்கள், தங்கத் தகடு பூட்டிய கொடிக்கம்பம், தூபியின் மேல் தங்கக்குடம் முதலியனவும் அமைத்து அபிஷேகம் செய்வித்தான் (இவை எதுவும் தற்போதைய ஆலயத்தில் இல்லை).

இவன் மகன் நாதன் பெயரால் "நாதன் அணை"யைக் கட்டினான். நாதனுக்குப் பட்டம் கட்டும் வயது வந்ததும் தோப்பாவை (பொலன்னறுவையை) ஆண்ட மன்னன் விசுவாதாசனுடைய மகள் சித்திரேகை என்பவளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்து, ஆட்சிப் பொறுப்பையும் ஒப்படைத்தான். இவ்வரலாறு "மட்டக்களப்பு மான்மியத்தில்" உள்ளது.

"போர்முடை நாடு" என்பது போரதீவைக் குறிக்கிறது. அக்காலத்தில் இரு போரதீவுகள் இருக்கவில்லை என்றும், ஆலயம் அமைந்தபின் 'கோயில் போரதீவு' உருவாக, பிற்காலத்தில் போரதீவின் மீதிப்பிரதேசம் பெரிய போரதீவு என்னும் பெயரைப் பெற்றது என்றும் ஊகிக்கலாம்.

## 3. வரலாற்றுக் குறிப்புகள்

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் சோழர் ஆட்சி உச்சம் பெற்றது. ராஜராஜ சோழன் காலத்தில் (கி.பி. 985-1015) இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியது. அனுராதபுரம், பொலன்னறுவை முதலிய இடங்களில் இவன் காலத்தில் பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டன (அவற்றின் இடிபாடுகள் இன்றும் உள்ளன). அக்காலத்தில் இலங்கை சோழநாட்டின் ஒரு பகுதியாக "மும்முடிச் சோழ மண்டலம்" என்ற பெயருடன் சோழர்களால் ஆட்சி செய்யப்பட்டது. இக்காலத்தில் கிழக்கிலங்கையில் சோழர் பலர் சைவ ஆலயங்களைப் புனரமைப்பு செய்தனர். அவற்றில் ஒன்று கோயில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயமாகும் எனக் கூறப்படுகிறது.

இவ்வாலய அமைப்பிலும், கர்ப்பக்கிரக விமானத்திலும் சோழர்காலக் கட்டடக்கலை பிரதிபலிப்பதை இன்றும் அவதானிக்கலாம். கர்ப்பக்கிரக விமானம் இன்றும் பழைய அமைப்பிலேயே காணப்படுகிறது.

பிற்காலத்தில், மாகோன் (கி.பி. 1215-1255) இலங்கையில் கிழக்குப் பிரதேசத்தில் நிலையான ஆட்சியை நிறுவினான். இவன் காலத்தில் கிழக்கிலங்கையில் கொக்கட்டிச்சோலை, கோயில் போரதீவு, திருக்கோயில் முதலிய ஆலயங்களில் திருப்பணிகள் இடம்பெற்றன. ஆலய பரிபாலனத்துக்காக இவன் நிவந்தங்கள் வழங்கியதுடன் நிர்வாக

முறைகளையும், கட்டுக்கோப்பாக்கிச் சீரமைத்தான். அவ்வகையில் மாகோனால் திருப்பணி செய்யப்பட்ட பெருமையும் இவ்வாலயத்திற்கு உண்டு.

இவ்வாலயத்தில் ஆடம்பரமான கட்டடங்கள் எதுவும் இல்லை. ஆனாலும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்த மண்டபம் என நான்கு மண்டபங்கள் உள்ளன. ஆலயப் பராமரிப்பிற்காக 99 ஏக்கர் காணி தற்போது உள்ளது. முன்வாசல்கோபுரம் இல்லை. இதற்குமுன் கோபுரம் இருந்ததற்கான அடையாளங்களும் இல்லை.

## பூசைகளும் உற்சவங்களும்

ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் இவ்வாலயத்தில் திருவிழா நடைபெறுகிறது. 21 நாள்கள் திருவிழா நடைபெறும். இத்திருவிழாக்களைச் செய்வோரில் எல்லாச் சாதியினரும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது மனங்கொள்ளத்தக்கது. மாகோன் வன்னிமை வகுத்த ஆலயங்களில் சாதி வேற்றுமை பாராது தாழ்த்தப்பட்ட சாதியினர் உட்படச் சகலருக்கும் ஆலய நிர்வாகத்திலும், ஆலய உற்சவங்களிலும் இடமளித்திருப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இதிலிருந்து இன்னொரு சிந்தனை உதயமாகிறது.

மாகோன் காலத்தில், தொழில் ரீதியாக சாதிகள் வகுக்கப்பட்டனவே தவிர அவற்றுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்கவில்லை போலும். திருவிழா செய்வோரின் ஏனைய குடியினர் சிங்களக் குடி (1), கோப்பிகுடி (1), கச்சிலாகுடி (1), மாதவிகுடி (1), பெத்தன்குடி (1),

பணிக்கனார் குடி (3), படையாண்டகுடி (3), காலிங்காகுடி (2) ஆகியோர் இடம்பெறுகின்றனர். ஆரம்ப காலங்களில் 21 திருவிழாக்கள் நடைபெற்ற போதும் தற்போது வசதிக்குறைவினால் 10 திருவிழாக்கள் மட்டுமே நடைபெறுகின்றன என அறிகிறோம். ஏனைய ஆலயங்களைப் போல் இங்கும் மாதந்தோறும் சில விசேட பூஜைகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சித்ரா பௌர்ணமி (கச்சிலாகுடி), கார்த்திகை விளக்கீடு (எருவில் பணிக்கனார்குடி), திருவெம்பாவை (பெரியபோரதீவு பணிக்கர்குடி), திருவாதிரை (மகியூர் பணிக்கன்குடி)

இறுதிநாளான தீர்த்தோற்சவத் தினத்தில் வெருகல், சித்தாண்டி சித்திர வேலாயுதர் ஆலயங்களைப் போல தீமிதிப்பு வைபவம்; வேடரைத் தொடர்புபடுத்தும் நிகழ்வுகள் என்பன இக்கோயிலில் இடம்பெறாதது அவதானிக்கத்தக்கது.

1974ஆம் ஆண்டுக்குமுன் இவ்வாலயத்தில் தினசரி ஒரு நேரம், மதிய நேரப் பூஜை மட்டும் நடைபெற்றது. 1974இல் (ஆனி மாதம்) ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, 33 ஓமகுண்டங்களுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னரே தினசரி மூன்று நேரப்பூஜை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.





# மண்டூர் முருகன் கோயில்

## 1. ஆலய அமைவிடம்

மட்டக்களப்பிலிருந்து 20 மைல் தெற்கே மட்டக்களப்பு வாவியின் தென்புறமாக இயற்கையழகு கொழிக்கும் கிராமச் சூழ்நிலையில் அமைந்துள்ளது இப்பழம்பதி. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் கொண்டு பக்தர்களுக்கருளும் தெய்வ சாந்நித்யம் நிறைந்து விளங்கும் இத்தலம், நிழல்தரும் பாரிய விருட்சங்களின் மத்தியில் அமைந்துள்ளது. கோயிலின் முன்புறமாக மட்டுநகர் வாவி அமைதியாக நீண்டு பரந்திருக்க, மெல்லென வீசும் இளம் தென்றலில் மனதில் அமைதியும், சாந்தியும் நிறைக்கும் சூழலில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தைச் சுற்றி கடம்பு (வம்மி), ஆல் அரசு, கொங்கு முதலிய விருட்சங்கள் ஓங்கி உயர்ந்து

பரந்து வளர்ந்து நிழல் பரப்பி நிற்கின்றன. கடந்த 1978 நவம்பரில் வீசிய கடும்புயலில் எத்தனையோ பெரிய மரங்கள் பாறி வீழ்ந்தபோதும், இங்குள்ள பாரிய விருட்சங்கள் அவ்வாறு வீழ்ந்துவிடாமல் நிமிர்ந்து நிற்பது பெரும் அற்புதம் என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாலயம், பழைய காலத்தில் அமைக்கப்பட்ட அதே தோற்றத்தில், ஓட்டுக்கூரையைக் கொண்டதாய் இன்றும் காட்சியளிக்கின்றது. தெய்வத் திருவாக்கினால் இவ்வாலயத்தில் புனருத்தாரண வேலைகள் தவிர்க்கப் பட்டன என அறிகிறோம். பழமையான தோற்றத்தில் ஆலயம் காட்சியளித்தபோதும், இங்கு வரும் பக்தர்கள், பக்திப் பரவசத்தில் மூழ்கி மெய்சிலிர்த்து, மெய்மறந்து நிற்கும் தன்மையை இவ்வாலயம் ஏற்படுத்தத் தவறுவதில்லை.

## 2. கர்ண பரம்பரைக் கதைகள்

இவ்வாலயத்திற்கும் கதிர்காமத்திற்கும் பலவகையில் நெருங்கிய தொடர்புண்டு. முருகன் வள்ளியை மணந்த கதை முதல் திரைமூடி வாய்கட்டி மௌன பூசை நடைபெறுவது வரை, பல நிகழ்வுகள் கதிர்காமத்தைப் போலவே இங்கும் அமைந்துள்ளன. அதனால் சின்னக் கதிர்காமம் என்றே இத்தலம் அழைக்கப்படுகின்றது.

இவ்வாலயம் உருவானது தொடர்பாக மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு கர்ண பரம்பரைக் கதை உண்டு. அக்கதை வருமாறு :

சூரபத்மனை நோக்கி முருகன் ஏவிய வேலானது அவனைக் கொன்றழித்தபின் வாகூரமலையை இரு கூறாகப் பிளந்து, அப்படியும் உக்கிரம் தணியாமல் கடலில் மூழ்கியபோது அவ்வேலிலிருந்து மூன்று பொறிகள் தோன்றி வேல்களாக மாறின.

அவற்றில் ஒன்று வெள்ளை நாவற்பதியான திருக்கோயில் பிரதேசத்தில் உள்ள வெள்ளை நாவல் மரத்திலும் இன்னொன்று உகந்தைப் பிரதேசத்தில் உள்ள மலை உச்சியிலும், மற்றொன்று மண்டூர்ப் பிரதேசத்தில் உள்ள தில்லை மரத்திலும் தங்கின.

இவ்வேல்கள் தங்கிய இடங்களில் அங்கிருந்த வேடர்கள் கொத்துப்பந்தல் அமைத்து வேலை வழிபட்டு வந்தனர். காலக் கிரமத்தில் அவ்விடங்களில் ஆலயங்கள் எழுந்தன. அவ்வாறு எழுந்த கோயில்களில் ஒன்றே அருள் நிறைந்த மண்டூர் முருகன் ஆலயமாகும்.

இது ஒரு கதையாக இருந்தபோதும் கதிர்காமம், உகந்தை, மண்டூர் ஆகிய மூன்று தலங்களுக்கும் உள்ள தொடர்பையும் அருட்சக்தியையும் எடுத்துக் காட்டுவதற்காகவே இக்கதை உருவானது என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.

## 3. கதிர்காமத்தை ஒத்த வழிபாட்டுமுறை

மண்டூர் முருகன் பிரதான கோயில் முகப்பு கதிர்காம முருகன் கோயில் முகப்புப் போன்றே அமைந்துள்ளது. கதிர்காம ஆலயத்தின் அருகாமையில் மாணிக்க கங்கை ஓடுவது போல் இவ்வாலயத்தின் முன்புறம் கங்கையைப் போன்ற மட்டக்களப்பு வாவி பரந்திருக்கிறது.

பிரதான கோயிலின் உள்வீதியில் இருபுறமும் வள்ளி தெய்வானை கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றை அண்மியதாக பிள்ளையார், வைரவர், குமாரத்தன் கோயில்களும் உள்ளன. முருகன் ஆலயம், கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகியவற்றை மட்டும் கொண்டுள்ளது. முன்புறம் கோபுரம் எதுவும் இல்லை. கர்ப்பக்கிரகத்துக்கு மேல் விமானம் இல்லை. ஓட்டுக்கூரையும் அதன் உச்சியில் ஒரு கலசமும் மட்டுமே உள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் வேலோ, விக்கிரகங்களோ இல்லை. கதிர்காமத்தில் உள்ளது போல் திரை மூடியுள்ளது. உள்ளே யந்திரம் வரையப்பட்ட பேழை ஒன்று உள்ளது. இப்பேழையே உற்சவக் காலங்களில் வீதி உலாவின்போது எடுத்துச் செல்லப்படும்.

பூசை செய்யும் 'கஃபுகனார்' வெள்ளைச் சீலையால் வாய்கட்டி கதிர்காமத்தில் செய்வது போல் மௌன பூசை செய்வார். (பூசை செய்பவரை "பூசாரி" என்னாது கஃபுகனார் எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.)

திருவிழா உற்சவக் காலத்திலும் முருகன் பவனிவரும் ரதம் திரை மூடியபடியே இருக்கும். திருவிழா உற்சவத்தின்போது, கதிர்காமத்தில் நடைபெறுவது போலவே தினமும், சுவாமியானவர் வள்ளியம்மன் ஆலயத்துக்குச் சென்று திரும்புவார். இறுதிநாளில் தீர்த்தமாடிவிட்டு வரும்போது சுவாமியின் ஊர்வலம் தெய்வானை ஆலயத்தின் முன் தரித்து நிற்காது. இவ்வாறு தெய்வானையம்மன் ஆலயத்தைக் கடந்து செல்லுகையில் ஊர்வலத்தில் வரும் ஆலாத்திப் பெண்கள் மயங்கி வீழ்வர். இவர்கள் சுவாமி ஊர்வலத்துடன் வள்ளியம்மன் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படுவர். பல மணித்தியாலங்களுக்குப் பின்பே இவர்கள் மூச்சை தெளிவர்.

## 4. பூசைகளும் உற்சவங்களும்

ஆடிமாதம் பௌர்ணமியில் கதிர்காமத் தீர்த்தம் நடைபெறுகிறது. அத்தீர்த்தம் முடிந்து பத்துநாள் கழித்து மண்டூர் முருகன் கோயிலில் கொடியேற்றம் நடைபெறும். ஏனைய ஆலயங்களைப் போல மண்டூர் முருகன் கோயிலில் நிலையான கொடித்தம்பம் இல்லை. அதனால், இதற்கென்று உரிய முறைப்படி கொக்கட்டி மரத்திலிருந்து வெட்டிக் கொண்டுவரப்பட்ட தடியை மூலத்தானத் திரைச்சீலையின் பக்கமாக அதற்குரிய இடத்தில் நாட்டி அதைச் சுற்றி நெற்கதிர்களை வைத்துக் கட்டித் தினமும் பூசனை செய்து வருவர். இதுவே இங்கு கொடியேற்றமாகும். அதே போன்று கோயிலின்

நாற்திசைகளிலும் தெய்வானையம்மன் கோயிலிலும் திசைக்காவற் கொடிமரங்கள் நட்டுவைப்பர்.

கொடியேற்றத்தின் பின் இருபது நாள்கள் திருவிழா நடைபெறும். திருவிழாக்கள் முடிந்தபின் ஆவணி மாதப் பூரணையன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். சுவாமி தீர்த்தமாடும் இடம் வடபுறத்தே மூங்கிலாற்றின் சங்கமமாக முன்பு இருந்தது. அந்நதிப்படுகை திசைமாறியதால் இன்று கோயிலின் பின்புறம் சற்றுத் தூரத்தில் உள்ள (மட்டக்களப்பு) வாவியிலேயே தீர்த்தமாடுதல் நடைபெறுகிறது. தீர்த்தமாடியபின் சுவாமி, வள்ளியம்மன் ஆலயத்துக்குச் சென்று பிற்பகல் வரை தங்கியிருந்து பூசனை பெற்றுத் தனது ஆலயத்துக்குச் செல்வார். எனவே, அன்று மதியம் சுவாமி கோயிலில் பூசை நடைபெறுவதில்லை.

அன்று பிற்பகல் சுவாமி தனது கோயிலுக்கு வந்த பின்னர் பூசை நடைபெறும். அன்றிரவு கொடியிறக்கம் நடைபெறும். தீர்த்தோற்சவம் நிறைவுபெற்ற மூன்றாம் நாள், முருகன் கோயிலின் பின்புறமுள்ள குமாரன் கோயிலையடுத்து வேடர் பூசை என ஒரு விசேட பூசை நடைபெறும். அப்பூசையில், மான் இறைச்சி உட்பட பல மரக்கறி வகைகளும், பச்சரிசிப்புக்கையும் வேலனுக்கு மண்குடுக்கைகளிற் படைக்கப்படும்.

அன்றிரவு கோயிலின் பின்புறம், வெளிவீதியில் பெரிய பந்தல் அமைத்து அதில் பலவிதமான பலகார

வகைகளைக் குவித்து மடைவைத்து, வெறியாட்டு நடைபெறும். தெய்வமாடும் வேலன் இந்த ஆட்டத்தின் போது சன்னதம் கொண்டு அதன் உச்சகட்டத்தில் கட்டு (நிமித்தம்) கூறுவர். திருவிழாவின் நற்பலன்களையும் கூறுவர். இதை மக்கள் பயபக்தியோடு செவிமடுப்பர்.

இந்த நடைமுறைகள், பிரதான கோயிலுக்கு வெளியே கொடியிறக்கி 3ஆம் நாள் கழிந்து நடைபெறுவதும் அவதானிக்கத்தக்கது. இவையாவும், வேடர் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்தவை என்பது மனங்கொள்ளத்தக்கது.



# சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம்



## 1. ஆலய அமைவிடம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்குத் தெற்கே 46 மைல் தொலைவில் உள்ளது திருக்கோயில் என்னும் பழம்பதி. தொன்மைக்காலத்தில் இப்பதி "நாகர் முனை", "உன்னரசுகிரி", "வெள்ளைநாவற்பதி", "கண்டபாணந்துறை" முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இப்பெயர் ஒவ்வொன்றுக்குப் பின்னாலும் ஒரு வரலாறு உண்டு. இத்தலத்தில் "சித்திர வேலாயுதர்" ஆலயம் அமைந்த பின்னர் "திருக்கோயில்" என்னும் சிறப்புப் பெயர் இத்தலத்திற்கு உரியதாகி விட்டது.

வரலாற்றுப் புகழ்பெற்ற இவ்வாலயம் மாகோனால் திருப்பணி செய்யப்பெற்ற பெருமை உடையது. மாகோன் (1215-1255) காலத்தில் பொறிக்கப் பெற்ற இரு தூண் கல்வெட்டுகளும் ஒரு துண்டுக் கல்வெட்டும் இவ்வாலயத்தில் உள்ளன.

சமுத்திரக்கரை ஓரமாக, தமிழகத்துத் திருச்செந்தூரை நினைவூட்டும் வகையில் நீண்டு பரந்த பொன் மணற்பரப்பில் இவ்வாலயம் அமைந்துள்ளது. காவும், சோலையும் நிறைந்து இப்பதிக்கு ஒரு அமைதியான சூழலை ஏற்படுத்தி உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளும் கொண்ட இப்பதி தேசத்துக் கோயிலாகவும், திருப்படைக் கோயிலாகவும் புகழ்பெற்றது.

கதிர்காமத்தோடு தொடர்புடையது இவ்வாலயம். ஆண்டுதோறும் கால்நடையாகக் கதிர்காம யாத்திரை மேற்கொள்வோர் இவ்வாலயத்தில் தங்கியிருந்து முருகனைத் தரிசித்துச் செல்லுதல் வழக்கமாகும்.

கிழக்குப் பிரதேசத்தின் வடக்கேயுள்ள திருக்கோணேஸ்வர ஆலயத்துடனும் தெற்கேயுள்ள திருக்கோயில் ஆலயத்துடனும் இதிகாச புருஷனான இராவணன் சம்பந்தப்படுகிறார். இவன் ஒரு கற்பனைப் பாத்திரம் அல்ல. நிஜமாக வாழ்ந்த மன்னன் என்பது பிற்கால ஆய்வுகளால் நிறுவப்படுகிறது. வேறு வகையிலும் திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கோயிலுக்கும் தொடர்புகள் உள்ளன. மாகோனின் உபராஜனான குளக்கோட்டன் (சோழகன்) கூட இவ்விரு ஆலயங்களில் திருப்பணி செய்துள்ளான்.

## 2. கர்ண பரம்பரைக் கதைகள்

இவ்வாலயம் தொடர்பாகப் பற்பல கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. அவற்றுள் நாம்

ஏற்கனவே கூறியபடி, சூரனைக் கொல்வதற்காக முருகன் ஏவிய வேல் அவனைக் கொன்றபின் வாகூரமலையைப் பிளந்து, கடலில் மூழ்கியபோது அதிலிருந்து தோன்றிய 3 பொறிகள் வேலுருப்பெற்று, ஒன்று திருக்கோயில் பிரதேசத்தில் உள்ள வெள்ளை நாவல் மரத்தில் பாய்ந்து நிற்க, அதனைக் கண்டெடுத்த வேடர்கள், கொத்துப்பந்தல் ஆலயம் அமைத்து அவ்வேலை வழிபட்டனர் என்பது ஒரு கதை.

திருக்கோயிலுக்கு அருகாமையில் இராவணன் கோட்டை இருந்ததாகவும், திருக்கோயில் ஆலயம் அவனுடைய வழிபாட்டுத் தலமாக இருந்ததாகவும் மட்டக்களப்பின் பிற்கால வரலாறு எழுதிய திரு. எஸ்.ஓ. கனகரத்தினம் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இலங்காபுரி என்னும் நகர், இலங்கையின் கீழ்ப்பாகத்தில் இருந்தது எனவும் பிற்காலத்தில் கடலில் மூழ்கிய அந்நகரின் மாடமாளிகைகள், கடலின் நீர் மட்டத்திலிருந்து அதிக ஆழத்தில் இல்லாமையால் கப்பல்கள் அவற்றில் மோதாமல் இருக்க ஆங்கிலேயர் காலத்தில் அங்கு இரு கலங்கரை விளக்கங்கள் நிறுவினர் என்றும் அவை இப்போது திருக்கோயிலுக்கு எதிரே கடற்புறத்தே தோன்றுகின்றன எனவும் ஒரு கதை உண்டு.

இராவணன் ஆண்ட தென் இலங்காபுரி என்பது மட்டக்களப்புப் பிரதேசம் எனவும் இப்பிரதேசத்தில் திருக்கோயில் உகந்தை, மண்டூர், கொக்கட்டிச்சோலை, மாமாங்கேஸ்வரம் முதலிய புகழ்பெற்ற தலங்கள் இருந்தன என்றும் தொல்லியல் ஆய்வாளரான திருமதி

தனபாக்கியம் குணபாலசிங்கம் கூறுகிறார். இதில் குறிப்பிட்டுள்ள "மாமாங்கேஸ்வரம்" என்பது தற்போது மட்டக்களப்பின் வடபால் உள்ள விநாயகர் ஆலயம் என்பதும், இவ்வாலயத்துடன் இராவணனைச் சம்பந்தப்படுத்தும் கர்ண பரம்பரைக் கதைகள் உலவுகின்றன என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

## 3. சிவலிங்கக் கோயிலே சித்திரவேலாயுதர் கோயிலாக மாறியது


மட்டக்களப்புப் பிரதேசத்தில் சில கோயில்கள் ஆதியில் சிவலிங்கக் கோயிலாக இருந்து, பின்னர் பிள்ளையார் கோயிலாகவும், முருகன் கோயிலாகவும் மாறி உள்ளன.

அந்த வகையில் திருக்கோயில் ஆதியில் சிவலிங்கக் கோயிலாக இருந்தது. பின்னர் சித்திரவேலாயுதர் கோயிலாக மாறியது என்பர். அதற்கு ஆதாரமாக இராவணன் இக்கோயிலில் வழிபாடு செய்ததைக் குறிப்பிடலாம்.

இராவணன் (கி.மு. 6000) இலங்கையை ஆண்ட இயக்கர் குல மன்னன் என்பது மனங்கொள்ளத் தக்கது. இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் என்போர் கிழக்கிலங்கையில் செறிந்து வாழ்ந்துள்ளனர். திருக்கோயில் பிரதேசம் ஆதிகாலத்தில் "நாகர்முனை" எனப் பெயர் பெற்றிருந்தமை ஆதிக்குடிகளான நாகருக்கும் இப்பிரதேசத்துக்கும் இருந்த தொடர்பை எடுத்துக் காட்டுகிறது.

இராவணன் ஆட்சிக்காலத்தில் திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் (முன்பு சிவலிங்கக் கோயிலாக இருந்தது), உகந்தை, திருக்கோயில் முதலிய ஆலயங்களோடு இராவணனைத் தொடர்புபடுத்தும் பல கதைகள் உள்ளன. ஆனாலும் பிற்காலத்தில் இவ்வாலயம் நாகர்முனை சுப்பிரமணியர் ஆலயமாக மாறியுள்ளது. புவனேக கயபாகு, மதுநேய கயபாகு முதலியோர் திருப்பணி செய்த காலத்தில் இவ்வாலயம் இப்பெயரால் அழைக்கப்பட்டதை "மட்டக்களப்பு மான்மியம்" குறிப்பிடுகிறது. இக்காலம் கி.பி. 1ஆம் நூற்றாண்டு என்பது அந்நூலில் உள்ள காலக்கணிப்பு.

அதற்கும் பின்னரே இவ்வாலயம் சித்திரவேலாயுதர் ஆலயமாக மாறியுள்ளது. இதற்கான காரணங்கள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனாலும், கதிர்காமத் தொடர்பினாலும், வேடர்களின் பூசனையாலும் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கக்கூடும் என நாம் அனுமானிக்கலாம்.





# உகந்தை முருகன் ஆலயம்

## ஆலய அமைவிடம்

தமிழகத்தின் குன்றுதோறாடல் மலைக் கோயில்களை நினைவூட்டும் வகையில், குன்றுகளும், பாறைகளும் நிறைந்து அருகில் சமுத்திர அலைகள் தாலாட்ட பக்திமயமான சூழலில் உள்ள உகந்தை முருகன் ஆலயம் கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயிலாகவும், தேசக் கோயிலாகவும் சிறப்புப் பெற்ற தலமாகும்.

கதிர்காமத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட இத்தலம் இரண்டு பிரிவான மலைகளையுடையது. ஒரு மலை வன்னிமலை எனவும் மற்றது முருகன் மலை எனவும் அழைக்கப்படுகிறது. இயற்கையாகவே அமைந்த ஏழு நீர்ச்சுனைகளும் இத்தலத்தை அணி செய்கின்றன. கதிர்காம யாத்திரை செய்வோர் அனைவரும் இங்கு தங்கியிருந்து உகந்தை முருகனைத்

தரிசித்துச் செல்வார்கள். கதிர்காமத்து முருகனுக்கு உகந்தை மலை (உகந்தமலை) இது எனவும், அதனால் முருகன் இங்குத் தங்கியிருந்து ஓய்வெடுப்பதாகவும் ஐதீகம் உண்டு.

பொத்துவில் தாண்டி, பாணமையிலிருந்து கூமுனை செல்லும் காட்டுப் பாதையில் கடற்கரை ஓரமாக இத்தலம் அமைந்துள்ளது. இங்குள்ள கோயில்கள் திறந்தவெளிக் கோயில்களாக அமைந்திருப்பது மனங்கொள்ளத் தக்கது.

கதிர்காமத்துக்குச் சில மைல்கள் இப்பால் அமைந்துள்ள இத்தலச் சூரிய வழிபாடு நடந்த இடமாகவும் கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள 3 மலைக்கோயில்களாக தாந்தாமலை முருகன், சங்குமான் கண்டி முருகன், உகந்தை முருகன் ஆலயங்கள் அமைகின்றன. இவற்றுள் உகந்தைமலை முருகன் ஆலயமே மிகவும் பிரசித்தி பெற்றதாகும்.

இதன் மலையடிவாரத்தில் சிறிய பிள்ளையார் கோயில் ஒன்று உண்டு. கோயில் வீதிகள் எங்கும், பெரிய தேத்தாமரங்களும், ஆலமரங்களும் சடைத்து வளர்ந்து நிழல்பரப்பி, இவ்வாலயச் சூழலை மகிமைப் படுத்துகின்றன.

**கர்ண பரம்பரைக் கதை**

முருகன் விட்ட வேலானது சூரனைக் கொன்றபின் வாகூரமலையை இரண்டாகப் பிளந்து, கடலில் வீழ்ந்த

போது எழுந்த மூன்று பொறிகளுள் ஒன்று உகந்தை மலை உச்சியில் தங்கி வேலானது என்ற கதை ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வரலாறு கூறும் ஏட்டுப்பிரதி நூலான மட்டக்களப்பு மான்மியத்திலும் இத்தலம் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் இடம்பெறுகின்றன. அக்கதைகள் வருமாறு :

இலங்கையை ஆண்ட இராவணன், தச்சணகிரி (திருக்கோணேஸ்வரம்) உகந்தகிரி (உகந்தமலை) என்னும் இடங்களில் ஆலயம் இயற்றிப் பூசை செய்து வாழ்ந்தான். சீதையின் சாபத்தால் அவனது ஆட்சி ஒழிந்து, நாடு பாழடைந்தது. அதன்பின் சிங்க குமாரனது தந்தை, தட்சிணாகிரி ஆலயத்தைப் புனரமைத்து திருக்குளமும் கட்டுவித்துச் சிவபதமடைந்தார். இது ஒரு கட்டுக்கதை என்பதில் சந்தேகமில்லை. மற்றொரு கதை வருமாறு :

சிங்க குமாரன் மந்திரி பிரதானிகளுடன், உகந்தை மலைக்கு வந்து, மலையுச்சியில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகியோருக்கும் மலை அடிவாரத்தில் இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் என்னும் எண்மருக்கும் ஆலயங்கள் அமைத்தான். இவ்வாலயங்களுக்கு நெற்காணிகள் நிவந்தம் அளித்தான். மட்டக்களப்பு மன்னன் பிரசேதுவிடம் முகமன் கொண்டாடி, ஆடித்திங்கள், அமாவாசை ஆகிய தினங்களில் இராவணன் பேரில் உகந்தையில் ஒரு பெரிய தீபம் ஏற்றும்படியும் திட்டம் செய்தான்.

இதுவும் ஒரு கற்பனைக்கதை என்பது கண்கூடு. இக்கதைகளுக்கும், முருக வணக்கத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. உகந்தையின் பூர்வீகம் அறியாத பிற்காலத்தவர் இவ்வாறு கற்பனை மூட்டைகளை அவிழ்த்து விட்டனர். இவற்றை நிராகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இங்கே குறிப்பிட்டேன்.

## பூஜைகளும் உற்சவங்களும்

கதிர்காமத்தைப் போலவே இங்கும் ஆடிப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. அதற்கு முன்னதாகத் திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. முதல் மூன்று திருவிழாக்களின் போதும் சுவாமியை (வேலாயுதம்) தாம்பாளத்தில் வைத்து, பட்டுச் சீலையால் மூடி வீதிவலம் வருவார்கள். நான்கு முதல் 15ஆம் திருவிழா வரையிலான 12 நாட்களும் திறந்த தேரில், முருகப் பெருமாள் வேல் மயில் சகிதம் பவனி வருவார். வள்ளியம்மனோ, தெய்வானையம்மனோ இப்பவனியில் இடம்பெறுவதில்லை.

சுவாமி தீர்த்தமாடுவதற்கு முன்னரே, அன்று கொடி இறக்கப்படும். (இவ்வழக்கம் வேறெங்கும் இல்லை) அதனையும் சுவாமியுடன் (வேல்) தீர்த்தமாடக் கடலுக்கு எடுத்துச் செல்வர். தீர்த்தமாடச் செல்லும்போது சுவாமி பட்டுச்சீலைகளால் அலங்கரிக்கப்பட்டிருப்பதால் அவரைப் பட்டுச்சாமி என்றும் அழைப்பர்.

தீர்த்தமாடி முடிந்ததும் சுவாமி தனது கோயிலுக்குச் செல்லாமல் பக்கத்து மலைமீதிருக்கும்

வள்ளி நாச்சியாரின் கோயிலுக்குச் செல்வார். அங்குப் பொங்கல் பூசை இடம்பெறும். அதன்பின்னரே சுவாமி தனது கோயிலுக்கு எழுந்தருளுவார்.

திருவிழாக் காலங்களில், அடியார்கள் மலையடிவாரத்தில் உள்ள பிள்ளையாருக்கு எந்நேரமும் பொங்கிப் படைப்பார்கள். வள்ளிமலை எனப்படும் முதலாவது மலையில் கோயில்கள் அமைந்துள்ளன. ஆனாலும் மலையிலோ, அடிவாரத்திலோ தெய்வானை அம்மனுக்கு ஆலயமில்லை.

முதலாவது மலையில் வள்ளியம்மன் கோயிலும், தனியாக வேல் மட்டும் உள்ளன. 3 அடி உயரமான சிறிய கோயிலும் 7 நீர்ச்சுனைகளும் உண்டு. வள்ளியம்மன் கோயிலுக்கு முன்னுள்ள சுனையை சரவணப் பொய்கை என்பர். கடலில் நீராடிவிட்டு வரும் பக்தர்கள் இச்சுனைகளிலும் நீராடுவர். குறிப்பாக சரவணப் பொய்கை என்னும் சுனையில் நீராடுவர்.

வள்ளி அம்மன் கோயிலில், வள்ளியம்மன் விக்கிரகமும், பிள்ளையார் சிலையும் ஒருபுறமும், மறுபுறம் வேலாயுதம் ஒன்றும் உள்ளன. ஆரம்பத்தில் வேல் மட்டும் இருந்து பின்னர் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கலாம்.



# விநாயக வணக்கம்

**உருவகம்**

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் வடிவமாக, உருவமாக விநாயகர் வடிவம் அமைந்துள்ளது. பிரபஞ்ச இயக்கத்தின் ஆதார சுருதியாக அமைவது "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என இறைவனைப் பாடுவதிலிருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

ஓம் என்னும் நாதத்தின் உருவாய் அமைந்தவன்
ஒலி என்ற பேதத்தின் வடிவாய் இசைந்தவன்

எனப் பாடுகிறார் ஒரு கவிஞர்.

யானை முகம் (ஓம்), பேழை வயிறு (பிரபஞ்சம்), பாசாங்குசம் (மன ஒடுக்கம்) என விநாயகரின் தோற்றத்துக்குப் பல்வேறு தத்துவங்கள் கற்பிக்கப் பட்டுள்ளன. யானையின் உருவில் அமைந்த

விநாயகருக்குச் சின்னஞ் சிறு எலியை வாகனமாக அமைத்தற்கும் ஒரு தத்துவம் கற்பிக்கப்படுகிறது.

எலி ஆசாபாசங்களின் உருவம். அதை அடக்கி வைப்பது ஞானம், ஞானத்தின் வடிவம் கணபதி.

விநாயகரின் ஒரு கையில் உள்ள மோதகம், மறுகையில் உள்ள ஒற்றைக் கொம்பு முதலியவற்றுக்கும் தத்துவங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. மோதகத்தின் வெளித்தோற்றம் உலகம் எனவும் அதனுள் நிறைந்திருக்கும் பூரணம் பிரம்மம் என்றும் கூறுவர். ஒடித்த கொம்பு ஆணவ மலத்தின் உருவம். ஆணவத்தை அடக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

இவ்வாறு முழுமுதற் கடவுளாக அமைந்த விநாயகரைப் பின்னர் சிவன் - பார்வதியின் மகனாகக் கற்பித்து மகிழ்ந்தனர் பக்தர்கள். இதனை "ஏகம் சத். விப்ரா பகுதா வதந்தி" (உண்மைப் பொருள் ஒன்றே - ஞானியர் அதனைப் பல்வேறாகக் காண்கின்றனர்) எனலாம்.

**புராணக் கதைகள்**

விநாயகரைப் பற்றிய புராணம் ஒன்று உள்ளது. இதனை விநாயக புராணம் என்பர். இதன் கருத்தை உள்ளடக்கியதாகப் பின்னர் "பிள்ளையார் கதை" என்னும் நூல் தோன்றியது. இப்புராணங்களை ஆதாரமாகக் கொண்டு பல்வேறு கதைகள் பக்தி மார்க்கத்தில் உருவாகியுள்ளன அவை -

(அ) களிறும் பிடியும் கலவி செய்வதைக் கண்டு உணர்ச்சி வசப்பட்ட உமை சிவனுடன் கலந்ததால் பிறந்த பிள்ளை விநாயகர் என்பது;

ஆ) தேவர்களை வருத்திய கஜமுகாசுரனை வதம் செய்யச் சிவபெருமான் விநாயகரை ஏவினார். விநாயகர் தனது கொம்புகளில் ஒன்றை ஒடித்து, கஜமுகாசுரன் மேல் எறிந்து அவன் மார்பைப் பிளக்க அவன் மூஷிக (எலி) வடிவில் அடங்கி, விநாயகருக்கு வாகனமாகினான் என்பது;

இ) இராவணன் தவம் செய்து சர்வ வல்லமை படைத்த சிவலிங்கத்தைக் கீழே வைக்காது கொண்டு வருகையில், அவனுக்குச் சலக்கடுப்பை உண்டாக்கி, அவன் முன் பிராமணச் சிறுவனாகத் தோன்றி, அச்சிவலிங்கத்தை நிலத்தில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார் என்பது.

இவற்றைப் படிக்கும் பிற மதத்தவரும் நம்மவர்களிற் சிலரும் இவற்றை எள்ளி நகையாடினாலும், இக்கதைகள் இந்துக்கள் மத்தியில் அன்று முதல் இன்றுவரை இறைபக்தியை வளர்த்து வருகிறதேயன்றி அவர்களைக் கிஞ்சித்தும் தளம்ப விடவில்லை என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாறான புராணக் கதைகளும் (Mythology) கர்ண பரம்பரைக் கதைகளும் (Legends) தொன்மை வாய்ந்த சமூகங்களான கிரேக்கம், எகிப்து,

ரோமாபுரி, திபெத், யப்பான், சீனா போன்ற சமூகங்களில் இருப்பதும் அவை இன்றுவரை தொடர்ந்து நிலைத்திருப்பதும் மனங்கொள்ளத்தக்கன. இவை இவ்வழிபாட்டு முறைகளின் தொன்மைக்கு ஆதாரமாகின்றன.

**வரலாறு**

விநாயக வணக்கம் வேதகாலத்துக்கு முந்தியது என்றும், இந்து சமயத்தின் நான்கு வேதங்களில் ஒன்றான இருக்கு வேதத்தில் விநாயக வணக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகின்றது. இங்கு மட்டுமன்றி பர்மா, கம்போடியா, திபெத், சீனா, யப்பான் முதலிய நாடுகளிலும் விநாயக வணக்கம் தொன்மைக் காலத்தில் இடம் பெற்றிருந்தது எனக் கூறப்படுகிறது. பிற்காலத்தில் ஆதிசங்கராச்சாரியர் இந்து சமயத்தைச் சண் (ஆறு) பிரிவுகளாக வகுத்தபோது விநாயகர் வழிபாடு "காணபத்தியம்" என அழைக்கப் பட்டது.

வரலாற்று ரீதியாக கி.பி.6ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் சாளுக்கிய நாட்டின் வாதாபி நகரில் இருந்து விநாயகர் சிலை ஒன்று தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டது என அறிகிறோம். வாதபிப்புலிகேசிக்கு எதிராக நரசிம்மவர்மப் பல்லவன் நடாத்திய போரில் வெற்றி பெற்றபின், அவனது தளபதியான பரஞ்சோதியார், வாதாபியிலிருந்து ஒரு விநாயகர் சிலையைத் தன்னுடன் எடுத்து வந்தார். அதைத் தனது

ஊரான திருச்செங்காட்டாங்குடிக்கு எடுத்துச் சென்று அங்கே அவ்விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து வைத்தார். இவரே பின்னர் சிறுத்தொண்ட நாயனார் ஆகினார் என்பது வரலாறு.

இன்றும் சங்கீதக் கச்சேரிகளில் முதலில் "வாதாபி கணபதிம் பஜே" என்னும் விநாயக வணக்கம் இடம் பெறுவதை யாவரும் அறிவர்.

பிற நாடுகளில் விநாயக வணக்கம் இடம்பெறுவது, ஒரு காலத்தில் திராவிட நாகரிகம் (இந்து நாகரிகம்) அந்நாடுகளில் பரவியிருந்தது என்பதற்குச் சான்றாகிறது. சுவாமி விபுலானந்தர் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் சிந்துவெளி நாகரிகத்தில் இருந்தே எபிரேயம், எகிப்து, பாபிலோனியா முதலிய நாடுகளுக்கு இந்து நாகரிகம் பரவியது எனக் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத் தக்கது. இலங்கையில் சிங்களவர் மத்தியில் 'கணதெய்யோ' என விநாயக வணக்கம் இடம் பெறுவதும் மனங்கொள்ளத்தக்கது.

**வழிபாடு**

> விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
> விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
> விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
> கண்ணிற் பணிமின் கனிந்து.

என்னும் வரிகளினால் கர்மவினையைப் போக்குவது விநாயக வழிபாடு என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இதனையே நமது தேவாராசிரியரும் -

மண்ணுலத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.

எனப் பாடினார். ஆம் "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்" என்பதில் சந்தேகமில்லை. சமஸ்கிருதத்தில் ஒரு சுலோகம் விநாயக வணக்கத்தை இவ்வாறு குறிப்பிடுகிறது :

ஓம் கஜானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த ஜம்பு பலசார பட்சிதம்
உமா சுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

சமஸ்கிருதத்தில் ஏராளமான விநாயக தோத்திரங்கள் இருந்த போதும் மேற்படி சுலோகத்தை எல்லா ஆலயங்களிலும் பூசகர் கூறுவர். காரணம் விநாயகரை "பூத கணாதி சேவிதம்" செய்கின்றன. நமது "சோக விநாசகாரணமாக" அவர் இருக்கிறார்.

எந்த ஒரு நூலையும் ஆக்கும் போது, விநாயக வணக்கம் முதல் பாடலாக இடம்பெறும். அவை ஒவ்வொன்றும் நவில் தொறும், நவில் தொறும் நம்மைப் புல்லரிக்கச் செய்கின்றன. இவை எல்லாவற்றையும் விட "சீதக்களபச் செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பும் பல்விசைபாட" எனத் தொடங்கும் ஔவையார் அருளிச்

செய்த ''விநாயகர் அகவல்'' முக்கியமானது. ஔவையாரைக் கைலாயத்தில் இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்த இத்தோத்திரம் மனித குலத்துக்கு வழிபாட்டுத் தோத்திரமாகும்.

**பக்தர்களின் பரவசம்**

விநாயகன் (வி+நாயகன்) தனக்குமேல் ஒரு தலைவன் இல்லாதவன், நைஷ்டிய பிரம்மச்சாரி (நித்திய பிரம்மச்சாரி) ஆனாலும் அவரை சித்தி, புத்தி என்னும் இரு மனைவியர் உடையவராக வட இந்தியாவில் கற்பித்துள்ளனர். சித்தி, புத்தி என்பதும் ஞானத்தின் மறுபெயர்களே. சித்தம், புத்தி என்பன Mind, Intellect என்பவற்றைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இரு மனைவியர் விநாயகருக்கு இருப்பதற்கு ஆதாரமான புராணக் கதை இருந்தாலும், தமிழகத்திலும் நம் நாட்டிலும் அவரைப் பிரம்மச்சாரியாகவே கொள்கின்றனர். அதன் காரணமாகவே நமது திருமணங்கள் பெரும்பாலும் விநாயகர் ஆலயங்களிலே நடைபெறுகின்றன என்றும் கூறுவர்.

எல்லாம் வல்ல எம்பெருமானுக்கு ஆலயங்கள் தேவை இல்லை என்பதே போல், அவரை ஆற்றங்கரையிலும் அரச மரத்தடியிலும் உட்காரவைத்து விட்டார்கள் நமது பக்தர்கள். ஒரு நீண்ட பயணம் செய்யும்போது வழியில் நாம் காணும் பிள்ளையார்கள் பற்பல. அவரை வணங்காது சென்றால் பயணத்தில் இடர்வரும் என்பது பொதுவான ஒரு நம்பிக்கை. இது

மூடநம்பிக்கை அல்ல. பயணம் செய்வோர் இறைவனையும் நினைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு நினைவூட்டல் உத்தியே இது எனலாம்.

இன்னும் சில எளிதான முறைகள் பிள்ளையார் வணக்கத்தில் உள்ளன. பூஜைகளின் போது மஞ்சளில் அல்லது சாணத்தில் ஒரு உருண்டை செய்து அதில் அறுகம்புல்லைச் செருகிவிட்டால் பிள்ளையார் தயார். பிராமணர்கள் இப்படிச் செய்வதை நாம் அவதானிக்கலாம். (அறுகம்புல் தெய்வீக சக்தி வாய்ந்தது. அது சித்த வைத்தியத்தில் ஒரு முக்கிய மூலிகை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.)

**நைவேத்தியங்கள்**

இந்துக்களுக்கு விநாயக சதுர்த்தி விரதம் முக்கியம். அவ்வாறே பெருங்கதை என்னும் திருக்கார்த்திகை உற்சவம் தொடர்பான ஒரு விரதமும் முக்கியமானது. இவை ஒவ்வொன்றுக்கும் பின்னால் ஒரு புராணக் கதை உள்ளது. அவை இக்கட்டுரைக்கு முக்கியமல்ல.

விநாயகருடைய நைவேத்தியப் பொருள்களும் பிற தெய்வமூர்த்திகளுக்குரியவற்றை விட வித்தியாசமாக இருப்பது கண்கூடு. அப்பம், முப்பழம், அவல், பொரி முதலிய எளிய பொருட்களே விநாயகருக்கு ஏற்றதாகின்றன.

விநாயகருக்குரிய நைவேத்தியப் பொருட்கள் பற்றி அருணகிரிநாதர் பாடிய ஒரு பாடல் இவ்வாறு கூறுகிறது.

இக்கவரை நற்கனிகள் சர்க்கரை
பருப்புடன் நெய் எள் பொரியல்
துவரை, இளநீர், வண்டைச்சில்
பயறப் பவை, மிக்க அடிசிற் கடலை
முப்பழம் அப்பமும் நிகழ் பால் தேன்

இவை மிக எளிதான பொருள்கள் என்பதுடன், பூர்வீகக் குடிகளின் உணவு வகைகள் என்பதும் கண்கூடு. பக்தர்கள் தமக்கு மிக விருப்பமானவற்றை இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைப்பார்கள். விநாயக வணக்கத்தின் தொன்மையும் இங்கு மறைமுகமாக வெளிப்படுகிறது.

எல்லையற்ற பிரபஞ்சவெளியில், ஓங்கார நாதத்தில் உலகம் உருவானது என்ற உண்மையை உள்ளடக்கிய விநாயக வணக்கம் என்றும் மக்களின் விக்கினங்கள் தீர்த்து, வினைகடிந்து, அருள்பாலித்து வருவது கலியுகத்தில் நாம் கண்ட உண்மையாகும்.





# முருக தத்துவமும் முருக வழிபாடும்

## 1. இந்து சமய விளக்கம்

இந்து சமயம் (சைவ சமயம்) ஆழ்ந்த தத்துவங்களைக் கொண்டிருந்த போதும் அதிலுள்ள புராணக் கதைகளும் அவற்றின் அடிப்படையில் எழுந்த சமய அனுஷ்டானங்களும் அத்தத்துவங்கள் வெளிப்படையாகத் தெரியாமல் மறைந்துள்ளன.

உண்மையில் இந்து சமயம் இயற்கையோடு இணைந்த பௌதீக அடிப்படையில் அமைந்த விஞ்ஞான ரீதியான தத்துவங்களைக் கொண்டது. இத்தத்துவங்கள் நான்கு வேதங்களிலும் அவற்றின் சாரமான உபநிஷத்துகளிலும் அடங்கியுள்ளன. ஆனால் இவை சாதாரண மக்களுக்குப் புரியாது என்பதனால் பிற்காலத்தில் புராணங்களும் இதிகாசங்களும் தோன்றின.

இப்புராணங்களின் அடிப்படையில் கோயில் திருவிழாக்களும் பூசை புனஸ்காரங்களும், உற்சவங்களும், விரத அனுஷ்டானங்களும் எழுந்தன. இவை பாமர மக்களை வெகுவாகக் கவர்ந்தன. அவர்களைப் பக்தி மார்க்கத்தில் இட்டுச் சென்றன.

அதனால் போட்டி போட்டுக் கொண்டு திருவிழாக்களையும் பிற உற்சவங்களையும் சைவாலயங்களில் செய்கின்றனர். இவ்வாறு வெறும் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் ஊறிப்போன மக்கள் அதன் பின்னணியில் உள்ள தத்துவங்களைப் புரிந்து கொள்வதில்லை.

## 2. இந்து சமயத் தத்துவங்கள்
## வேத உபநிடதக் கருத்துகள்

இறைவனின் திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறுவதே புராணங்கள். இத்திருவிளையாடல்கள் யாவும் இந்து சமயத்தின் ஆழ்ந்த தத்துவங்களைப் பாமர மக்களும் விளங்கிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட உருவகக் கதைகள் என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

இருக்கு, யசுர், சாமம், அதர்வண என்ற நான்கு வேதங்களும் இந்து சமயத் தத்துவங்களை உள்ளடக்கி உள்ளன. ஆனால் இவற்றைப் பாமர மக்கள் எவரும் விளங்கிக் கொள்ள முடியாது என முன்னர் கூறியுள்ளோம். இந்த நான்கு வேதங்களின் சாரம் உபநிஷத்துகளில் இடம்பெறுகின்றன. இவற்றையும்

பாமரமக்கள் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாது என்பதையும் பார்த்தோம்.

எனவேதான் இவற்றின் உட்பொருளை உள்ளடக்கியதாக புராணங்கள் தோன்றின. இப்புராணங்கள் செம்பொருள், குறிப்புப் பொருள் ஆகியவற்றைக் கொண்டவை. செம்பொருள் என்பது இப்புராணங்களில் வெளிப்படையாகச் சொல்லப்படும் கதை என்றும், குறிப்புப் பொருள் என்பது அக்கதைகளினூடே பொதிந்துள்ள தத்துவங்களை உணர்த்துவது என்றும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக நெருப்பும் அதனூடே விரவி நிற்கும் சூடும் போல இரண்டறக் கலந்து நிற்பது திருவருட் சக்தி, புராணங்களில் இதை சிவன் சக்தி எனக்கூறும். இந்த இணைப்பை திருமணமாக உருவகித்து, சிவன் சக்தி ஆகியோரை கணவன் மனைவி எனக்கூறும் பெற்றோரின் ஆற்றல் பிள்ளைகளின் மூலம் வெளிப்படுவது நாம் அறிந்ததே. இவ்வாறே திருவருட் சக்தியின் செயற்பாடுகளை கணபதி, முருகன் என உருவகித்து அவர்கள் இறைவனின் குழந்தைகள் எனப் புராணங்கள் கூறுகின்றன.

### 3. முருக வணக்கம்

தமிழர் பண்பாடு வளர்ச்சி பெற்ற காலம் முதல் முருக வணக்கம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சங்ககால இலக்கியமான பரிபாடலில் "ஸ்கந்த" என முருகன்

குறிப்பிடப்படுகிறார். பதினெண் யாக புராணங்களில் முக்கியமானது "ஸ்கந்தபுராணம்." வேதவியாசர் எழுதியதாகக் கூறப்படும் இந்நூலின் மூன்றாவது பிரிவாகிய சங்கரசங்கிதையில் கந்தனது உற்பத்தித் தொடக்கம் உபதேசம் வரையிலான விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

ஐந்திணைகளிலும் குறிஞ்சித்திணை முருகனுக்கு உரியதாகின்றது. குறிஞ்சிக்குமரன் என முருகன் அழைக்கப்படுகின்றான். "கடம்பன்" எனக் கடம்ப மரத்தடியிலே முருகன் யந்திரமமைத்து வழிபடப் படுகிறான். வேலன் எனப்படும் பூசாரியின் பூசையும் நடைபெறுகிறது. நாம் வாழும் கலியுகத்துக்குரிய தெய்வமாகவும் முருகன் போற்றப்படுகின்றான்.

சங்க நூலான பரிபாடலிலே எட்டுச் செய்யுள்களிலே முருகன் பற்றிக் கூறப்படுகின்றது. "செருவேற்றுத்துணைச் செல்வ" (பரிபாடல் 18:54) செவ்வேள், (பரிபாடல் 5,57,62) சேயோன் (பரிபாடல் 19, 97-100) என்ற பெயர்களால் முருகன் அழைக்கப் படுகின்றான். பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் சேயோன் எனக் கூறுகின்றது. திருமுருகாற்றுப்படை "முருகு" என அழைக்கின்றது.

மதுரைக் காஞ்சியிலே கடம்ப, முருகு எனக் கூறப்படுகின்றான். (மதுரைக்காஞ்சி, பாடல் 613-615)

இவ்விதம் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, முதலாம் சங்க நூல்களில் எல்லாம் முருக வழிபாடு கூறப்பட்டுள்ளது.

கச்சியப்பரின் கந்தபுராணமும், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும் முருகன் புகழ் கூறுகின்றன. அருணகிரிநாதரின் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலிய அத்தனை நூல்களும் முருகனையே பாடுகின்றன. முருக தத்துவம் ஆழமானது அண்டமெங்கும் உள்ள உயிர்களெல்லாம் இறைவனிடமிருந்தே வந்தவை. அந்த உயிர்கள் அனைத்தும் மீண்டும் இறைவனையே சென்றடைகின்றன. அத்தகைய உயிர்களின் மலப்பிணிகளை நீக்கி அவ்வுயிர்களை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் எண்ணற்ற திருவிளையாடல்களை மேற்கொள்கிறான். இத்திருவிளையாடல்களை தொகுத்துக் கூறுவன புராணங்கள். இவ்வகையில் கந்தபுராணம் முக்கியமானது.

கந்தபுராணம் முருக மூர்த்தியான இறைவனின் திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறுகிறது. அதன் அடிப்படையில் எழுந்ததுதான் கந்தசஷ்டி விரதமும் சூரன் போர் உற்சவமும் அதனோடு இணைந்த அனுஷ்டானங்களும். இவற்றைப் பின்னால் பார்ப்போம்.

## 4. முருக தத்துவம்

அருவமும் உருவமுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு
ஒரு திரு முருகன் வந்தாங்கு உரித்தனன் உலகம் உய்ய

முருகனின் தோற்றம் பற்றிக் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் இவ்வாறு கூறியுள்ளார்

உருவமற்ற இறைவன் சோதிப் பிழம்பை மேனியாக்கி கருணை நிறைந்த ஆறுமுகங்களும் பன்னிரண்டு கரங்களும் கொண்டு முருகனாகத் தோன்றினான். எதற்காக? உலகத்தை உய்விப்பதற்காக. இந்த ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் எதைக் குறிக்கின்றன? சுவாமி சிற்பவனாந்தர் இதற்கொரு வித்தியாசமான விளக்கத்தைக் கொடுத்துள்ளார். மனிதன் உலக இன்பத்தைத் துய்ப்பதற்குக் காரணமாக இருப்பவை ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்களுமாகும். அதாவது ஐம்பொறிகளும் அவற்றினூடே வெளிப்படும் ஐம்புலன்களுமாகும். இவை ஐந்தும் ஆறாவது புலனான மனத்தோடு தொடர்புபட்டு உணர்ச்சிகளைத் தூண்டுகின்றன. இந்த ஐம்புலன்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன சுவை இன்பம், காட்சி இன்பம், ஸ்பரிச இன்பம், ஓசை இன்பம், வாச இன்பம், முதலியவற்றைத் தருகின்றன. இவற்றுக்கு ஆதாரமானது ஆறாவது புலனாகிய மனம் என்பது.

முருகனின் ஆறு முகங்களும் இந்த ஆறு புலன்களையும் குறிப்பதாயின் அவை இந்தப் பிரபஞ்சத்தின் வியாபகமாகவும் கொள்ளப்படுகின்றன. அவற்றை அடக்கி வைப்பது ஞானசக்தி. அதைக் குறிப்பது முருகனுடைய வேல். இதுவே அறுபடை வீடு (இன்பம்) எனவும் கொள்வர்.

இவ்வாறே முருகனுடைய பன்னிரண்டு கைகளுக்கும் தத்துவ விளக்கம் உள்ளது. முருகனின் ஒவ்வொரு கையிலும் ஒரு ஆயுதம் இருக்கிறது. அவை

ஒவ்வொன்றும் ஒரு சக்தியை குறிக்கின்றன. இந்த அண்டம் முழுவதையும் அடக்கிய ஆற்றலுள்ளவன் முருகன் என்பதை அக்காலங்கள் பன்னிரண்டும் குறிப்பிடுகின்றன.

ஐஸ்வரியம், வீர்யம், தேஜஸ், செல்வம், ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்களுமே முருகனுக்கு ஆறு முகங்களாக அமைந்தன எனக் கச்சியப்பர் கூறுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன் என்ற இறை தத்துவத்தை முருகனின் ஆறு முகங்களும் கரங்கள் பன்னிரண்டும் குறிக்கின்றன. சிவசொரூபம், சக்தி சொரூபம் இரண்டும் சேர்ந்து அமையப் பெற்றவர் சிவசுப்ரமணியனான முருகன், இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி மூன்றும் அவனுள் அடங்கும்.

## 5. கந்தபுராணமும் அதன் தத்துவங்களும்

கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் முருகனாய்த் தோற்றும் இறைவனின் திருவிளையாடல்களைக் கூறுகிறது. அசுரர் கொடுமைகளிலிருந்து தேவர்களைக் காப்பாற்ற இறைவன் முருகனைத் தோற்றுவித்தார். முருகன் ஆறு முகமும் பன்னிரண்டு கைகளும் உடையவன்; திணைப்புன வள்ளியைக் காதல் செய்து மணந்தவன்; சூரனுடன் போர் செய்து அவனை ஆட்கொண்ட பின் தேவயானையை மணந்தவன். இது கந்தபுராணம் கூறும் கதை.

## இதன் தத்துவம் என்ன?

இறைவன் உயிர்களை ஆட்கொள்ளும் வழிமுறைகளையே இக்கதை விளக்குகிறது. வள்ளியின் திருமணம் என்பது பக்குவப்படாத உயிர்களை இறைவன் தானே வலிந்து ஆட்கொள்ளும் முறையைக் குறிக்கும். சூரன் போர் என்பது உயிர்களை வருத்தும் பந்தங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதைக் குறிக்கும். தெய்வயானை திருமணம் என்பது பக்குவம் அடைந்த உயிர்கள் இறைவனைத் தேடிச் சென்று அவனுடன் இரண்டறக் கலப்பதைக் குறிக்கும். இதையே வேறு வகையில் கூறும் போது வள்ளியை இறைவனின் இச்சாசக்தியின் உருவமாகவும் தெய்வயானையை கிரியாசக்தியின் உருவமாகவும் கூறுவர்.

சூரன்போரில் இடம்பெறும் சூரன், தாரகன், சிங்கன் ஆகியோர் உயிர்களில் தெய்வாம்சத்தை மூடி மறைத்துள்ள மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை என்பதைக் குறிக்கும். முருகன் ஆறு நாள்கள் நடாத்தும் போர் என்பது மும்மலங்களின் வெளிப்பாடான காம, குரோத, கோப, மோக, மதமாச்சரியம் என்னும் ஆறு குணங்களையும் வெற்றி கொள்வதைக் குறிக்கும். இவ்வாறு உயிர்கள் அதாவது ஆன்மாக்கள் விடுவிக்கப்பட்டு தெய்வீக நிலை அடைந்ததும் அவை இறைவனுடன் கலக்கின்றன. இந்நிலையை அடைவதற்கு உயிர்களுக்கு மனஉறுதி, வைராக்கியம், ஏகாத்திர சிந்தை முதலியன அவசியம். இதையே விரதங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

## 6. முருக விரதங்களும், கந்தசஷ்டி விரதமும்

முருகனைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் மூன்று விரதங்கள் முக்கியமானவை. அவை காத்திகை விரதம், சுக்கிர வார விரதம், கந்தசஷ்டி விரதம் என்பன ஆகும். இவற்றுள் முக்கியம் பெறுவது கந்தசஷ்டி விரதமாகும். ஐப்பசித் தீபாவளி அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி ஈறாக உள்ள ஆறு நாள்கள் கந்தசஷ்டி விரத நாள்களாகும். முருக பக்தர்கள் இந்த ஆறு நாள்களிலும் முழுப்பட்டினியாக (உண்ணாவிரதம்) இருப்பர். முதல்நாள் அதிகாலை நீராடி தூய ஆடை அணிந்து முருகன் ஆலயம் சென்று, தண்ணீர் கூட அருந்தாது உபவாசம் இருந்து முருக வழிபாடு செய்வர். முதல் நாள் ஐயர் முன் அமர்ந்து சங்கல்பம் செய்து காப்புக்கட்டி தர்ப்பை அணிந்து விரதத்தை ஆரம்பித்து ஆறாம் நாள் அவற்றை ஐயரிடம் ஒப்படைத்து ஏழாம் நாள் அதிகாலை நீராடி பாரணை பூசை செய்து ஆகாரம் உட்கொள்வர்.

விரத நாள்களில் தினமும் ஆலயத்தில் கந்தபுராண படலம் நடக்கும். அதாவது ஒருவர் கந்தபுராணத்தை செய்யுளாக வாசிக்க மற்றொருவர் அதன் பொருள் சொல்லுவார். பக்தர்கள் அதைச் செவிமடுப்பர். ஆறாம் நாள் ஆலயத்தில் சூரன்போர் உற்சவம் நடக்கும். நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல முருகப் பெருமான் சூரனை வதம் செய்து சேவலும் மயிலுமாக ஏற்றுக் கொள்வர். ஆறுநாளும் உபவாசம் இருக்க

முடியாதவர்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை ஒரு பழம், ஒரு இளநீர் அல்லது ஒரு கிளாஸ் பால் அல்லது ஒரு வேளை உணவு உட்கொண்டு விரதம் அனுட்டிப்பர். ஆலயம் செல்ல முடியாதவர்கள் வீட்டிலிருந்தே அவ்விரதத்தை அனுட்டிப்பார்கள். விரதகாரர் உணவு உட்கொள்ளாவிட்டாலும் அன்றாட அலுவலகக் கடமைகளை ஒழுங்காகச் செய்வது ஆச்சரியமளிக்கும். இவ்விரத அனுட்டானத்தை கந்தபுராணம் பின்வருமாறு கூறுகிறது :

வெற்பொடும் அவுணன் தன்னை வீட்டியதனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்
சொற்படு துணையின் திங்கட் சுக்கில பட்சந்தன்னில்
முற்பகலர்தியாக மூவிரு வைகல் நோற்றார்

(கந்தபுராணம் - கந்தவிரதப்படலம்)

## 7. கந்தபுராணக் கலாச்சாரம்

புராணக்கதைகளில் பொருந்தியுள்ள தத்துவங்கள் புரியாமல் அவற்றை மூட நம்பிக்கை என்று சொல்வோரும் பகுத்தறிவுக் கொவ்வாத பல தெய்வங்களைக் கொண்டது இந்து சமயம் என்பாரும் இன்றும் நம்மிடையே உள்ளனர். இவர்கள் சமய தத்துவங்களை சரியாக அறிந்திருக்காத காரணத்தால் பிற சமயத்தவர் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் அளிக்கத் தெரியாமலும் இருக்கின்றனர். இத்தகைய அறிவிலிகளுக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சுவாமி விவேகானந்தர் சரியான விளக்கம் அளித்துள்ளார். ஒரு

நூற்றாண்டுக்கு முன் (1893) சிக்காகோவில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் உரையாற்றிய சுவாமி விவேகானந்தர் உலக சமயங்களுள் உன்னதமானது இந்துசமயமே என்பதை ஆணித்தரமாக பிற சமயத்தவர்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறுவினார். அது மட்டுமல்ல, அம்மாநாட்டைத் தொடர்ந்து பல்வேறு நாட்டவர்களின் வேண்டுகோளுக்கு அமைய மேலை நாடுகளில் பிரசங்க மழை பொழிந்தார். புராணங்களும் இதிகாசங்களும் தாம் இந்துக்களை பன்னெடுங்காலமாக, தலைமுறை தலைமுறையாக தர்ம நெறியில் வழிநடத்தி வருகின்றன என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்தார்.

அத்தகைய புராணங்களுள் தலையாயது கந்தபுராணம். ஆண்டுதோறும் இடம் பெறும் கந்தபுராணப்படலம் கந்தபுராணக் கலாச்சாரம் என்ற ஒரு மரபையே தோற்றுவித்துள்ளது. இந்தக் கந்தபுராணக் கலாச்சாரத்தின் மூலம் மக்கள் கலியுக வரதனான கந்தனிடம் பக்தி பூண்டு ஆண்டுதோறும் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டித்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் மூலம் தம்மை எதிர்கொள்ளும் துன்ப துயரங்களுக்கு மத்தியில் அமைதி கொள்கின்றனர். இதுவே புராண தத்துவங்கள் நமக்குப் போதிக்கும் அர்த்தமுள்ள போதனைகளாம்.

*(திருச்செந்தூர் முருகன் ஆலய கும்பாபிஷேக மலர், 1998)*



# மட்டக்களப்பில் முருக வணக்கம்

## 1. வேதகாலத்துக்கு முந்திய முருக வழிபாடு

முருக வழிபாடு பற்றி நாம் பெறும் முதல் தகவல் வேத காலத்தில் எழுந்த ஸ்கந்த புராணத்தில் கிடைக்கிறது.

ஆனாலும் அதற்கு முற்பட்ட காலங்களில் முருக வணக்கம் இருந்தது என்பதற்குப் பல்வேறு சான்றாதாரங்கள் உள. அவ்வணக்கம் வேல் வழிபாடு போன்று வெவ்வேறு வடிவங்களில் இருந்தது.

உலகம் தோன்றிய போது, முதலில் தோற்றம் பெற்றவை மலைகள் மலையக மக்கள் வழிபட்ட குறிஞ்சித் தெய்வம் முருகன் என்பர். கி.மு. 4000 ஆண்டளவில் தோன்றிய சுமேரிய நாகரிகத்தில் முருகவணக்கம் இடம் பெற்றிருந்தது. சுமேரிய நாகரிகத்துக்கும், திராவிட நாகரிகத்துக்கும் உள்ள ஒற்றுமை பல ஆய்வாளர்களால் நிறுவப்பட்டுள்ளது.

சுமேரியாவில் "சிகுறார்" என்னும் மலைகள் இருந்தன. இவர்கள் வணங்கிய மலைத்தெய்வம் முருகனே. சுமேரியர் உலகின் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தபோது அவர்களுடன் சேர்ந்த முருக வழிபாடும் அவர்கள் சென்ற இடங்களில் பரவியது எனலாம்.

இம்முருக வணக்கம் ஆதியில் லெமூரியாக் கண்ட மக்களிடையே இருந்து, சுமேரிய மக்களிடம் சென்றது என்பர். இந்த லெமூரியாக் கண்டமே தமிழ் இலக்கியங்களில் குமரிக்கண்டம் எனக் குறிப்பிடப் படுகிறது. எனவே முருக வணக்கம் குமரிக்கண்டக் காலத் தொன்மையுடையது எனக் கொள்ளலாம். இதற்கான சான்றுகள் பல உள.

## 2. தொல் பழங்கால வணக்க முறைகள்

தொல்பழங்காலத்தில் பொதுவாக பல இடங்களில் வேல் வழிபாடு, நாக வழிபாடு, சூரிய வழிபாடு முதலியன இருந்தன. இவை ஆதிக்குடிகளின் வணக்க முறைகள் என்பது ஆய்வாளர்கள் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வணக்க முறை இடைக் கற்காலத்தில் (Mesolithic) தோன்றியது என்பதற்கான ஆதாரங்களை ஆய்வாளர்கள் முன் வைத்துள்ளனர். இடைக்கற்காலத்தைத் தொடர்ந்து வந்த புதிய கற்காலத்திலும் (Neolithic) பெருங்கற்காலத்திலும் (Megalithic) முருகவழிபாடு தொடர்ந்து வந்துள்ளது.

இடைக்கற்காலத்தின் வேட்டுவ சமூகத்தினரும் அதன் பின்னர் வந்த புதிய கற்காலத்தின் விவசாய சமூகத்தினரும் அருகருகே வாழ்ந்த காரணத்தால், முருக

வழிபாடு இரு சாராரிடையேயும் பரவியது. இதற்கான பல தொல்லியல் சான்றுகள் உள.

தென்னிந்தியாவில் தக்காணத்தில் உள்ள குறவர், குறும்பர், கொல்லர் முதலியோரது வாழ்க்கை முறையை ஆய்வு செய்தவர்கள் வேட்டை ஆடுதலையே தொழிலாகக் கொண்ட இச்சமூகத்தினரின் தொடர்பால் விவசாய சமூகத்திலும் (புதிய கற்காலம்) தெய்வ மூர்த்தங்கள் இரு மனைவியர்களைக் கொண்டவர்களாக இருந்தனர் என்றும் அவர்களில் ஒருத்தி வேட்டுவ சமுதாயப் பெண் என்றும் குறிப்பிட்டுள்ளனர் (சி.க. சிற்றம்பலம், பண்டைய தமிழகம், பக்.51).

மேற்கூறிய தெய்வமூர்த்தம் குறிஞ்சிக் கடவுளான முருகனையே குறிக்கின்றது. முருகனின் ஒரு மனைவி வேட்டுவ குலத்தைச் சேர்ந்த "வள்ளி" என்பது ஸ்கந்த புராணத் தகவல் ஆகும்.

## 3. இயற்கை வழிபாட்டில் இருந்து தோன்றிய முருக வணக்கம்

ஆதியில் உலகெங்கணும் இயற்கை வழிபாடு நிலவியது. இவ்வழிபாட்டு முறை பின்னர் சிவன் முருக வழிபாடாகப் பரிணமித்தது. இது பற்றிய விளக்கம் வருமாறு :

ஆதிகால மரபுவழிபாட்டில், ஆல், கடம்பு, வில்வம், கொன்றை, வேம்பு போன்ற மரங்கள் முக்கிய இடம் பெற்றன. இம்மரவழிபாட்டு முறை (அ) கொடிநிலை (ஆ) கந்தழி (இ) வள்ளி என மருவி வந்தது.

கொடிநிலை - கொடியால் சூழப்பெற்ற கடவுள்மரம்.

கந்தழி - பட்டுப்போன மேற்படி மரத்தின் அடிப்பாகம்.

வள்ளி - மரம் பட்டுப்போன பின் தனியே நின்ற கொடி.

(கொடிநிலை, கந்தழி, வள்ளி மூன்றும் கடவுள் நிலையாகத் தொல்காப்பியரால் காட்டப்படுகின்றது.)

பட்டமரத்தின் அடியும் அழியும்போது அந்த இடத்தில் ஒரு கல் வைக்கப்பட்டது. அக்கல் வணக்கம் பின்னர் லிங்க வழிபாடாக மாறியது என டாக்டர் க.ப. அறவாணன் குறிப்பிடுகிறார் (மரவழிபாடு - க.ப. அறவாணன், பக். 104-105).

இம்மரத்தின் அடியில் சில சமயங்களில் ஒரு பலிபீடம் அமைத்து அதில் ஒரு வேல் நாட்டப்பட்டு, அதுவும் வணக்கத்துக்குரியதாகியது.

இவ்வகையான வழிபாடுகள், இடைக் கற்காலத்தில் ஏற்பட்டன. பிந்திய காலகட்டத்தில், மரவழிபாடு இல்லாமல், கற்களை மட்டும் (நடுகல்) வைத்து வழிபாடு செய்யும் வழக்கம் ஏற்பட்டது. பிற்காலத்தில் அக்கல் ஒரு உருவமாகச் செதுக்கப்பட்டு அதற்கு ஒரு கோயில் அமைத்து வழிபடும் முறை ஏற்பட்டது.

## 4. உலக நாடுகளில் மரவழிபாடு

எகிப்து, பாபிலோனியா, சுமேரியா, பாஸ்தீனம் முதலிய நாடுகளில், நாகவணக்கம், சூரியவணக்கம், மரவணக்கம், நதிவணக்கம் என்பன இடம்பெற்றிருந்தன. இயற்கை நிகழ்வுகள் ஏற்படுத்திய அச்சத்தால் இவ்வழிபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆல், அரசு போன்ற பாரிய விருட்சங்கள் ஆதிமனிதனுக்கு வதிவிடங்களாகப் பயன்பட்டன. மரத்தின் பட்டையும், இலைகளும் அவனுக்கு உடைகளாகப் பயன்பட்டன. ம்ரத்தடி குழுவினர் கூடும் பொது இடமாகப் பயன்பட்டது. எனவே மரவழிபாடே ஆதிமனிதனின் முதல் வழிபாடாக இருந்தது என்பதில் ஆச்சரியம் இல்லை.

வழிபாட்டு மரபில், மலையும், மலை சார்ந்த இடங்களிலும் வாழ்ந்த குறிஞ்சிக் குறவர்கள் கடம்ப மரவழிபாட்டினை கைக்கொண்டனர். அவ்வகையில் மலையும் மலைசார்ந்த இடமும் கடம்ப மரவழிபாட்டுத் தலங்களாகின. இவ்வணக்க முறை பின்வரும் வகையில் மாற்றம் பெற்றது.

அ. கடம்பமரம் வழிபாடு செய்யப்பட்டது.

ஆ. கடம்ப மர அடியில் வேல் ஒன்று நடப்பட்டது.

இ. மரத்தின் அடிப்பாகத்தில் ஒரு பலிபீடம் அமைக்கப்பட்டது.

ஈ. இவ்வழிபாட்டில் பூசாரியின் (வேலன்) ஆட்டம் இடம்பெற்று, அது வெறியாட்டு எனப்பட்டது.

உ. பலிபீடத்தில் யந்திரம் வரைந்து பூசாரி (வேலன்) பூசை செய்தான்.

ஊ. வேல் மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பட்டது.

எ. காலக்கிரமத்தில் இவ்வணக்க முறை முருக வணக்கமாகியது.

இவை அனைத்தும் இடைக்கற்காலம் முதல் தொடர்ந்து வந்த நடைமுறைகள் ஆகும்.

## 5. வேட இனத்தவர் ஆய்வு

புதிய கற்கால மனிதன் இறந்தவர்களை ஈமத் தாழிகளில் வைத்து புதைத்து அடக்கம் செய்தான். இதற்கான சான்றுகள், வட இந்தியாவிலே ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், குஜராத் ஆகிய மாநிலங்களில் கிடைத்துள்ளன. இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை மானிடவியலாளர்கள் "வேடொய்ட் (Verddoid) என இனம் கண்டுள்ளனர். (வேட இனத்தவரின் எலும்புக் கூடுகள்) இவர்கள் பேசிய மொழி "ஒஸ்ரிக்" மொழி என்பர்.

மேற்குறித்த இடைக்கற்கால "வேடொயிட்" அல்லது "ஒஸ்ரலோயிட்" இனமக்களே ஈழத்திலே வாழ்ந்த வேடர்கள் என இவர்கள் குறிப்பிட்டுள்ளனர் (பண்டையத் தமிழகம், சி.க. சிற்றம்பலம், பக்.3).

தமிழக, கேரள, ஈழப்பிரதேசம் ஒரு காலத்தில் ஒரே பிரதேசமாக இருந்தது என்பதையும் இவ்வாய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இடைக்

கற்காலத்தின் பிற்பகுதியில் தொடங்கிய இறந்தோரைப் புதைக்கும் வழக்கமானது புதிய கற்காலத்திலும் தொடர்ந்தது.

புதிய கற்காலத்தில் இறந்தவர்களின் உடல்களை மிருகங்களுக்கு இரையாகக் கொடுத்து எஞ்சிய எலும்புகளையும் மேற்படி உடல்களையும் எரித்து எஞ்சிய எலும்புகளையும் புதைக்கும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. இந்த எலும்புகளுடன் பலவிதமான பொருட்களையும் சேர்த்துப் புதைத்தனர். இப்பொருட்களில் "வேல்" முக்கிய பொருளாக இடம்பெற்றது. (இவ்வேல் இறந்தவனைக் காக்கும் என்ற நம்பிக்கை போலும்.)

இவ்வாறு புதைக்கும் வழக்கம் பெருங் கற்காலத்துக்குரியது என்றாலும் புதிய கற்காலத்திலிருந்தே இவ்வழக்கம் ஆரம்பித்து விட்டது எனலாம். எகிப்து - சிரியா, பாலஸ்தீனம் போன்ற இடங்களிலும் இவ்வழக்கம் இருந்தது.

## 6. பெருங்கற்கால வேல் வழிபாடு

வட இந்திய, தென்னிந்தியப் பிரதேசங்களில் பெருங்கற்காலப் பண்பாடு பரந்து காணப்பட்டது. இதற்குச் சான்றாக, தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகளில் ஆடு, வேல், எருமை, புலி வடிவங்கள், சேவற்கொடி, காவடிக்குரிய வாய் அலகு செடில், பொன், வெண்கலமணிகள், ஒருதலைச் சூலம், முத்தலைச் சூலம்

முதலியன காணப்பட்டன. இவை முருக வணக்கத்தின் சின்னங்கள் என்பதை இலகுவாக ஊகிக்கலாம்.

புதிய கற்காலத்தில் "எருது" சிவனது வாகனமாகக் கொள்ளப்பட்டதுபோல ஒருதலை, முத்தலை சூலங்கள், முருகன், கொற்றவை, சிவன் ஆகிய தெய்வமூர்த்தங்களின் சின்னங்களாக கருதப்பட்டன. ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட காவடிச் செடில்கள் சூலம்(வேல்) என்பன பண்டைய பாலஸ்தீனத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஈமத்தாழிச் சின்னங்களை ஒத்திருந்தன. இவ்வழக்கத்துக்குரிய காலம் கி.மு. 1200 ஆண்டு ஆகும். எனவே, இச்சின்னங்கள் அந்நாட்டில் தங்கியிருந்து இறந்து போன இந்திய வணிகக் கூட்டத்தினரின் புதைகுழிகளுக்குரியவையாக இருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. அதற்குக் காரணம் பாண்டிய நாட்டின் செயற்கைத் துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைகுழிச்சின்னங்களும் இவ்வாறே இருந்தன என்பதாம்.

தொகுத்து நோக்கில் பெருங்கற்காலத்திலும் புதிய கற்காலத்திலும் ஆதிக்குடிகளிடம் முருகவணக்கம் வெவ்வேறு வடிவங்களில் இடம்பெற்றிருந்தது என்பது பெறப்படுகிறது.

## 7. சங்ககாலத்தில் முருக வழிபாடு (கி.பி. 500 - கி.பி. 200)

சங்ககால இலக்கியங்களில் முருக வணக்கம் பற்றிப் பல குறிப்புகள் காணப்படுகின்றன. பரிபாடல்,

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, திருமுருகாற்றுப்படை முதலிய சங்க நூல்களில் இக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இக்குறிப்புகளில் பின்வரும் கருத்துகள் இடம் பெறுகின்றன. முருகன் மலைப்பிரதேசத்தின் கடவுள். தேனையும் தினையையும் நைவேத்தியமாக வைத்து வேடர் முருகனை வழிபட்டனர். வெறியாட்டு, குரவைக்கூத்து என்பன முருக வணக்கத்தில் முக்கிய இடம் பெற்றன.

மலைப்பகுதியில் உள்ள வேட்டுவப் பெண் வள்ளியை முருகன் மணந்தான். பின்னர் திருப்பரங்குன்றத்தில் தெய்வானையை மணந்தான். முருகனுடைய வேல் ஞானசக்தியாக வணங்கப்படுகின்றது.

சங்க காலத்தில் முல்லைநிலத் தெய்வம் மாயோன், குறிஞ்சிநிலத் தெய்வம் சேயோன் (முருகன்), மருதநிலத் தெய்வம் வேந்தன், நெய்தல்நிலத் தெய்வம் வருணன் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

மிகப்பழம்பெரும் நூலான "தொல்காப்பியம்" பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

மாயோன் மேய காடுறை உலகமும்.
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால், சொல்லவும் படுமே.

## 8. சங்ககால வேல்வழிபாடு குறிக்கும் முருகவணக்கம்

முருக வழிபாட்டின் தோற்றமாக வேல் வணக்கம் கொள்ளப்படுகிறது. போர்க்களத்திலும் குரவைக் கூத்திலும் வேல் வழிபாடு இடம்பெறுகின்றது. "ஆடுகளம்" "வெறிக்களம்" எனச் சங்க இலக்கியங்கள் கூறும் போர்க்களத்தில் வேல் கொண்டு செல்லப் பட்டது. அவ்வேல் மயில் இறகு, பூமாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது (சி.க. சிற்றம்பலம், ஈழத்து இந்து சமய வரலாறு, பக். 184). நெடுநல்வாடை என்ற சங்கநூலில் இவ்விபரம் காணப்படுகிறது.

செந்நிற ஆடைகளினாலும் செந்நிறப் பூக்களினாலும் வேல் அலங்கரிக்கப்பட்டது.

இவ்வணங்கு (தெய்வம்) உறையும் இடங்களாக மலைகள், ஆறுகள் குறிக்கப்படுகின்றன. முருகன் உறையும் கருவியாக வேல் குறிப்பிடப்படுகின்றது.

சங்க காலத்தில் ஒரு இளம்பெண் நோயுற்ற போது பூசாரியாகிய வேலன் முருகனை அழைப்பதாகக் கூறப்படுகிறது. பூசாரி கடம்பு அணிந்து குறிஞ்சிமாலை சூடி வாத்தியங்கள் முழங்க வெறியாட்டு ஆடுவான். இந்த வேலன் (பூசாரி) மேல் உருவேறும் தெய்வம் முருகு எனக் குறிப்பிடப்பட்டது (குறுந்தொகை 362) ("முருகு அயர்ந்து வந்த முதுவாய்வேல்").

இந்த முருகனின் மனைவி "வள்ளி" என நற்றிணை குறிப்பிடுகின்றது (நற்றிணை 82:4 - முருகு புணர்ந்தது இயன்ற வள்ளிபோல்").

சங்க காலத்தில் பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. மேற்படி "வெறியாட்டு" நிகழ்வில் வேலன் (பூசாரி) சன்னதம் கொண்டு ஆடி, ஆட்டை வெட்டி நோயுண்ட பெண்ணின் நெற்றியில் அதன் குருதியைத் தடவுவான் (குறுந்தொகை 111 - 1,2) "மென் தோள் நெகிழ்ந்த செல்லல்வேலன்").

இதே நிகழ்வு மற்றொரு சங்கநூலான "மதுரைக்காஞ்சி" யிலும் காணப்படுகின்றது. (மதுரைக் காஞ்சி 613-615 "அருங்கடிவேலன் முருகொடு வளைஇ...).

"அகநானூறு பாடலும் (228-11) இந்நிகழ்வு பற்றிக் கூறுகிறது.

## 9. கந்தக் கடம்பன்

கடம்பமரம் முருகன் உறையும் தலவிருட்சமாகக் குறிப்பிடப்படுகின்றது. கடம்பு மற்றும் வேலன், பூசாரி, ஆகியோர் முருக வணக்கத்துடன் தொடர்புபடுவதை "பரிபாடல்" கூறுகின்றது (பாடல் 17:1-6). பாடல் வருமாறு:

தேம்படுமலர்குழை பூந்துகில வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் விரைகி
விடையரை யமைந்த வேலன் கடிமரம்
பரவின நரையொடு பண்ணிய விசையினர்
விரிமலர் மதுவின் மரதனை குன்றத்துக்
கோலெரி கொலை நறை புகைக்கொடி யொருங்கொடி

இப்பாடலில் கடம்ப மரத்தினை நோக்கி கோல், விளக்குகள், இசைக்கருவிகள், சந்தனம், நறுமணம்,

தூபம், கொடிகள் என்பவற்றோடு, மலர், தளிர், பூந்துகில் மணி, வேல், ஆகியவற்றைச் சுமந்து வந்து கடம்ப மரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வழிபாடு பற்றிக் கூறுகிறது.

இதே கருத்து "திருமுருகாற்றுப் படை"யிலும் இடம் பெறுகிறது (பாடல் 223-226).

காடுங்காவுங் காவின் பெறுதுருத்தியும்
யாறும் குளனும் வேறு பல்வைப்பு
சதுக்கமும் சாந்தியும் புதுப்பூங்கடம்பு
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்

பரிபாடலில் முருகன் பெயர் கடம்ப மரத்தொடு தொடர்புறும் பல பாடல்கள் உள.

கடம்பச் செல்வன் (18:126)

புலவரை அறியா புகழ்பூத்த கடம்பமர்ந்து (19:2)

கடம்பர் அணிநிலை பகர்ந்தோம் (19:104)

உருளிமைக் கடம்பின் நெடுவெட்டு (21:50)

## 10. கந்தழி வழிபாடும் முருகனும்

கந்தழி வழிபாடுபற்றி ஏற்கனவே கூறப்பட்டது. கொடிநிலை - கந்தழி - வள்ளி என்ற வணக்கமுறையை நினைவூட்டும் வகையில் இன்றைய ஆலயங்களில் கொடித்தம்பம் அதைச் சுற்றிக் கொடிச் சீலை, கொடிமரத்தின் அடியில் பலிபீடம் என்பன அமைந்திருப்பதைக் காணலாம்.

'கந்தழி' என்பதற்கு வேறொரு விளக்கம் கூறுகிறார் கோ. சுப்பிரமணியபிள்ளை. அவர் கூறுவது - கந்து என்றால் கட்டப்பட்ட அடிமரம். அடிமரம் அழிந்த பின்னர் அதற்குப் பதிலாக ஒரு கல் நடப்பட்டது (மரவழிபாடு, பக். 06).

எவ்வாறாயினும் இது மரவழிபாடு, மருவியது என்பதில் கருத்து வேறுபாடு இல்லை.

"கந்தழி" என்பது பல சங்க இலக்கியங்களில் இடம் பெறுகின்றது. சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

கந்துடைப் பொதியல் (பட்டினப்பாலை - 249)

கலி கெழ கடவுள் கந்தம் (புறநானூறு - 521)

மாத்தாட் கந்து (அகநானூறு - 287)

புதலியர் பொதியிற் கடவுட் போக்கிய கந்தாட்
கந்து (அக:307)

கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு, சிறப்பின் முதலான மூன்றுள்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (தொல்காப்பியம்)

இக்கூற்றுகளிலிருந்து கந்தழி வழிபாடு, இடைக்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம், சிந்துவெளிக் காலம், வேதகாலம், சங்ககாலம் ஊடாகத் தொடர்ந்து இன்று வேல் வணக்கம் முருக வணக்கத்தின் ஆரம்பம் என்பதுடன் அவ்வணக்க முறையே பிற்காலத்தில் முருக வணக்கமாக மாறியது என்பதும் தெளிவாகிறது.

## 11. வட இந்தியாவில் முருக வணக்கம்

கி.மு. 4ஆம் 3ஆம் நூற்றாண்டுகளில் அதாவது மௌரிய குஷாணர் காலத்தில் வட இந்தியாவில் முருக வணக்கம் இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு முருகன் 'விசாகன்', 'ஸ்கந்தன்' எனப் பெயர் பெற்றிருந்தான்.

குஷாண மன்னனது நாணயங்களில் விசாகன், ஸ்கந்தன், குமார, மகாசேன போன்ற பெயர்கள் ஒரு புறமும் 'மயிலின் மீது' அமர்ந்திருக்கும் முருகக் கடவுளின் உருவம் மறுபுறத்திலும் பொறிக்கப் பட்டிருந்தன.

அயோத்தி அரசின் நாணயங்களில் சேவற் சின்னம் உச்சியில் பொறிக்கப்பட்ட ஸ்தம்பம் உள்ளது. யவன தேயத்தவர்களது நாணயத்தில் "பாகவதோ சுவாமினோ பிரமணிய தேவஸ்ய குமரஸ்ய" என்ற வாசகம் உள்ளது.

வட இந்தியாவில் முருகன் ஆலயங்கள் பல இருந்தன என்பதற்கும் சான்றுகள் உள்ளன. தற்போதைய பாகிஸ்தானின் "அப்பொதாபாட்" என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு ஒன்றில் "குமாரஸ்தான" (குமரக்கோட்டம்) பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. நாகார்ஜுன்கொண்டா கல்வெட்டிலும் "கார்த்திகேய பிரசாத்" பற்றி குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.

இவ்வாறு தமிழ் நாட்டு முருகன் வடஇந்தியாவிலும் செல்வாக்குப் பெற்று ஸ்கந்த, குமார, விசாக, மகாசேன,

சுப்பிரமணிய, கார்த்திகேய எனப் பெயர் பெற்றிருந்தமை ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

## 12. தென்னிந்தியாவில் முருக வணக்கம்

சங்ககாலப் புலவராகிய நக்கீரர் பாடிய "திருமுருகாற்றுப்படை" தமிழகத்தில் நன்கு வேரூன்றிவிட்ட முருக வணக்கத்துக்குரிய ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். அறுபடைவீடு எனக் குறிப்பிடப் படும் பழநி, பழமுதிர்ச் சோலை, சுவாமிமலை (திருவேரகம்), திருத்தணிகை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் என்ற ஆறு முருகத் தலங்களும் பழம்பெரும் முருகத்தலங்கள் ஆகும். முருகன் குறிஞ்சித் தெய்வம் என்ற தொன்மைக் காலக் கோட்பாட்டுக்கு அமைய இத்தலங்கள் மலைகளில் அமைந்திருப்பதும் (திருச்செந்தூர் தவிர) 'படைவீடு' என முருகனின் வேற்படையைக் கொண்டு இத்தலங்கள் அழைக்கப்படுவதும் இத்தலங்களின் தொன்மைக்குச் சான்றுகளாகின்றன.

முருக வணக்கம் தொடர்பான பக்தி இலக்கியங்கள் தென்னிந்தியாவில் ஏராளமாகத் தோன்றியுள்ளன. அருணகிரிநாதரின் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, குமரகுருபரரின் முருகன் பிள்ளைத் தமிழ், பாம்பன் சுவாமிகள் பாடல்கள் முதலியன முருக தரிசனத்தின் பக்திப் பரவசத்தை மெய்யுருகக் கூறுகின்றன.

இந்த வகையில் இலங்கையில் உள்ள பழம்பெரும் முருகத்தலமான கதிர்காமம் வரலாற்றுத் தொன்மை கொண்டதுடன் தென்னிந்தியாவில் உள்ள முருகத்

தலங்களைப் போன்று தெய்வ சாந்நித்தியம் உடையது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது. அருணகிரிநாதரின் திருப்புகழிலும் இப்பதி இடம் பெறுவது மனங்கொள்ளத் தக்கது.

**ஸ்கந்தமுருக ஆய்வு**

பல மேல்நாட்டவர்களைக் கவர்ந்த கதிர்காமத்தலம் "ஸ்கந்த - முருக" பற்றிய சர்வதேச ஆய்வுக் கருத்தரங்குகளுக்கும் வழிவகுத்துள்ளது. 1972ஆம் ஆண்டு முதல் வருடம் தோறும் கதிர்காம யாத்திரை மேற்கொண்ட அமெரிக்கரான பற்றிக் ஹரிகன் என்பர் கதிர்காமத் தலத்தின் பக்தி நிலையால் ஈர்க்கப்பட்டு அண்மையில் சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் "ஸ்கந்த-முருக" என்ற தலைப்பில் 4 நாள்கள் நீடித்த ஒரு சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கை நடாத்தியுள்ளார். இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகள் 1998ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. மாநாடு 28.12.98 முதல் 31.12.98 வரை சென்னை ஆசியவியல் நிறுவனத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டின் பெறுபேறாக "ஸ்கந்த - முருக" அனைத்துலக ஆய்வு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த சர்வதேச ஆய்வு மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 13. கிழக்கிலங்கையின் தொன்மைக்கான சான்றாதாரங்கள்

கிழக்கிலங்கையின் தொன்மைக்கான சான்றாதாரங்கள் ஏராளமாக இருப்பினும், முக்கியமான

சிலவற்றை இக்கட்டுரையில் சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. அவை வருமாறு :

அ. The Early History of Ceylon or the Indian Period of Ceylon History, Calcutta, 1946, Page 40.

ஆ The Arya Kingdom in North Ceylon, JRASCB, Vol. VII, Part II, 1961, Pages 181-182.

இ. The History and Culture of Indian People by Majumdar and Pusalkar, Page 236.

ஈ. The Veddahs, by C.G. Seligmam and Brenda. Z. Seligman, Cambridge, 1911, Pages 419 - 420.

உ. Ancient Ceylon - An account of the Aboriginers and Part of the Early Civilisation, London, 1909, Page 15.

ஊ. Ancient Jaffna, by Mudliyar Rasanayagam, pages1 - 44.

எ. Veddahs in Transition, Colombo, 1964, Pages 16, 22.

மேற்கூறியவை தவிர கிழக்கிலங்கைப் பிரதேசம், புவியியல், மண்ணியல், தாவரவியல், விலங்கியல் அடிப்படையிலும் தொன்மை வாய்ந்த பிரதேசம் என்பதற்கு சான்றாதாரங்கள் உள்ளன.

இலங்கைத் தீவு கேம்பிரியனுக்கு முற்பட்ட தொல்காலப் பாறைகளைக் கொண்டது. இவற்றில் பெரும் பகுதி இலங்கையின் கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு ஆகிய பிரதேசங்களில் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் தமிழக, விந்திய, மலைப் பிரதேசத்தின் நெருங்கிய தொடர்புகள் தரைத்தோற்ற, தாவர அடிப்படையில் காணப்படுகின்றன என்பது ஆய்வாளர் கூற்று. அதற்கு ஆதாரமாக இப்பிரதேசத்தின் பாறைப் போக்குகள், பாறைகள், மண்வளம், இயற்கைத் தாவரங்கள், விலங்கினங்கள் என்பன எடுத்துக்காட்டப் படுகின்றன.

## 14. பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம்

1963ஆம் ஆண்டுக்கு முன் மட்டக்களப்பு தற்போதைய அம்பாரை மாவட்டத்தையும் உள்ளடக்கியிருந்தது. மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் முதல் தெற்கே கூமுனை (Kumana) வரை பரந்திருந்தது. 1963இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பகுதி (கல்முனை முதல் குமண வரையுள்ள பிரதேசம்) அம்பாரை மாவட்டம் எனத் தனியாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவினைக்கு முந்திய மட்டக்களப்பு மாவட்டமே இக்கட்டுரையில் இடம் பெறுகிறது.

திரு.எஸ். பரணவிதான (தொல்லியல் ஆணையாளர்) 1970இல் வெளியிட்ட "Inscription of Ceylon" என்னும் நூலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களாக வெருகல் முதல் பாணமை (குமணை) வரை உள்ள இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நூலில் மட்டக்களப்பில் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படும் பிரதேசங்களாக பின்வரும் இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கோறளைப்பற்று

(வாழைச்சேனை) ஏறாவூர்பற்று (ஏறாவூர்) விந்தனைப்பற்று (மகாஓயா) மண்முனைப்பற்று (மண்முனை) வேவகம்பற்று (இக்கினியா கலை) சம்மாந்துறைப்பற்று, அக்கரைப்பற்று, பாணமைப்பற்று.

எனவே இக்கட்டுரையில் பூர்வீக மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் முருகன் கோயில்களாக வெருகல் முதல் திருக்கோயில் வரை உள்ள கோயில்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை வருமாறு :

அ. வெருகல் சித்திரவேலாயுதர்

ஆ. சித்தாண்டி சித்திரவேலாயுதர்

இ. கோயில் போரதீவு சித்திரவேலாயுதர்

ஈ. மண்டூர் முருகன்

உ. திருக்கோயில் சித்திரவேலாயுதர்

ஊ. உகந்தை முருகன்

## 15. கிழக்கிலங்கையில் ஆதிக்குடிகளான வேடர்கள் வழிவந்த முருகவணக்கம்

இலங்கையின் ஆதிக்குடிகள் "ஒஸ்ரலோயிட்" இனத்தைச் சேர்ந்த வேடர்கள் ஆவர். இவர்கள் கிழக்கிலங்கையில் செறிந்து வாழ்ந்துள்ளனர். இவர்கள் மூலமாகவே முருகவணக்கம் கிழக்கிலங்கையில் வேரூன்றியுள்ளது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

இவை தவிர கிழக்கிலங்கை மிகவும் தொன்மையான நிலப்பகுதி என்பதற்கும் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு பழங்கற்கால இடைக்கற்கால புதிய கற்கால பெருங்கற்காலச் சின்னங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிழக்கிலங்கையில் உள்ள கதிரவெளி, மகியங்கனை, விந்தன, வெல்லச, தீகவாபி, உகனை, திச்மகறகம முதலிய இடங்களில் இச்சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பெருங்கற்கால ஆதிக்குடிகளின் வணக்க முறையான லிங்க வணக்கம், முருக வணக்கம், கொற்றவை வணக்கம் முதலியவை இன்றும் மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலைத்துள்ளன.

இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் இன மக்களை ராட்சசர்கள் எனவும் அமானுஷ்யர்கள் எனவும் மகாவம்சம் குறிப்பிட்டாலும் உண்மையில் இவர்கள் நாகரிகம் மிக்க திராவிட இன மக்கள் என்பது ஏற்கனவே பல ஆய்வாளர்களால் நிறுவப்பட்ட உண்மையாகும்.

கிழக்கிலங்கையில் உள்ள முருக ஆலயங்கள் பலவற்றில் இன்றும் வேடர் சம்பிரதாயங்கள் இடம் பெறுகின்றன. கதிர்காம ஆலயத்தில் வேட்டுவ இனப் பெண்கள் கன்னிப் பெண்களாக வருகின்றனர். மண்டூர் முருகன் கோயிலில் வேட்டுவ இனப் பெண்கள் கன்னிப் பெண்களாக வருவதுடன் வேடர்பூசையும் வேலன் வெறியாட்டும் இடம் பெறுகின்றன. சில முருகன் கோயில்களில் ஆதியில் இடம் பெற்றிருந்த வேடர் சம்பிரதாயங்கள் காலப்போக்கில் அருகி மறைந்துள்ளன.

## 16. மட்டக்களப்பின் பெருங்கற்கால (கி.மு. 10000-8000) சின்னங்களும் முருகவழிபாடும்

கதிர்காமம், திசமாறாமை (மாகம), உகந்தை, கதிரவெளி முதலிய இடங்களில் காணப்பட்ட பெருங்கற்காலச் சின்னங்கள் இடுகாடுகள், மற்றும் ஆதித்திராவிடர்க்குரிய வாழ்முறை என்பன முருக, லிங்க வழிபாட்டுக்காலத்துக்குரியனவாகும்.

தற்போது தீகவாபியில் உள்ள அரும்பொருள் காப்பகத்தில் (Museum) இப்பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள் உள்ளன. அவற்றில் முத்தலை சூலம், இருதலைச் சூலம், ஒருதலைச் சூலம் முதலியனவும் காணப்படுகின்றன. சூலம், சிவ வழிபாடு, லிங்க வழிபாடு, கொற்றவை வழிபாடு ஆகியவற்றின் சின்னங்கள் ஆகும். அவ்வாறே ஒருதலைச் சூலம் (வேல்) வேல்வழிபாட்டின் சின்னமாகும்.

கதிரவெளி முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலச் சின்னங்களுள் ஒருதலை, இருதலை, முத்தலை சூலங்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் குறிப்பிடத்தக்கவை. இவை முருக வணக்கத்தையும் சிவ வணக்கத்தையும் குறிக்கும் சின்னங்களாகும். கதிரவெளியில் பெருங்கற்காலத்துக்குரிய இடுகாடுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு இப்பிரதேசத்தின் தொன்மை பற்றியும், தொன்மைக்கால வணக்கமான முருக வணக்கம் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

உலகெங்கும் காணப்பட்ட ஆதிக்குடிகளின் வழிபாட்டில் முதலில் மரவழிபாடும், பின்பு லிங்க வழிபாடும், அதன் பின் வேல்வழிபாடு சூலவழிபாடு என்பனவும் இடம் பெற்றன. இவ்வழிபாட்டு முறைகள் கொடிநிலை (கொடியும் மரமும்) கந்தழி (மரத்தின் அடிப்பகுதி, வள்ளி (கொடி) என்ற முறையில் ஆரம்பித்துப் பின்னர் மேற்கண்டவாறு பரிணாம வளர்ச்சி பெற்றன என்பது தொல்லியலாய்வாளர் கூற்று ஆகும்.

## 17. கிழக்கிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் முருகவணக்கம் பற்றிய தகவல்கள்

கிழக்குப் பிரதேசத்தில் பிராமிக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இக்கல்வெட்டுகளில் காணப்படும் பெயர்களில், ஸ்கந்த குக, குமார, மகாசேன, சாமிந்தக, விசாக, கார்த்திகேய, வேல், வேலச, போன்ற சொல் மூலங்கள் காணப்படுகின்றன. இவை முருக வணக்கம் காரணமாக எழுந்த பெயர்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதிக அளவிலான பிராமிக் கல்வெட்டுகள், அம்பாரை உள்ளிட்ட கிழக்குப் பிரதேசத்திலும் இலங்கையின் வடபகுதியில் உள்ள தமிழ்ப் பிரதேசமான வவுனியா மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

'வெல' (வேல்) என்ற பதம் (வேலன்) என்ற பெயருடன் காணப்படும் நான்கு பிராமிக் கல்வெட்டுகள் சிங்களப் பிரதேசங்களான ஹந்தகல, (1125) ஒமுனுகம

(403) ஹபிடகல்கே (447) நிலகம (880) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டன.

அம்பாரை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் "பருமுக வேலனுடைய குகை" என்ற வாசகம் காணப்படுகிறது. பருமுக என்பதற்கு பிரமுகர் அல்லது பிராமணர் எனப் பெயர் கொள்வர்.

பொலனறுவையில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் 1. 286 - ஸ்வஸ்திக், சக்கரம், சூலம், முதலியன காணப்படுகின்றன. 2. 270 - சூலத்தின் சின்னம் காணப்படுகிறது. இவ்வாறு இன்னும் பற்பல சிவசின்னங்கள் காணப்படுகின்றன. இவற்றை Non Brahmi Symbols என திரு. பரணவிதான குறிப்பிடுகிறார். பிராமிக் கல்வெட்டுகளில் பிரமி அல்லாத சின்னங்கள் இடம் பெறுவது சாத்தியமில்லை. உண்மையில் இவை சிவசின்னங்கள் என்பதைக் குறிப்பிட அவர் விரும்பவில்லை என்பதை நாம் இலகுவாக ஊகிக்கலாம்.

## 18. மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்கள்

கிழக்கிலங்கையின் மிகத் தொன்மையானதும் புகழ்பெற்றதுமான கோயில்கள் திருப்படைக் கோயில்கள் அல்லது தேசக் கோயில்கள் என்று அழைக்கப்படுகின்றன. திருப்படைக்கோயில்கள் பெரும்பாலும் முருகன் கோயில்களையே குறிக்கின்றன. அந்தவகையில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வெருகல் முதல் திருக்கோயில் வரை உள்ள திருப்படைக்

கோயில்கள் (தான்தோன்றீஸ்வரம் என்ற சிவலிங்கக் கோயில் ஒன்றைத் தவிர) யாவும் முருகன் கோயில்களே.

முருகன் கோயிலைத் திருப்படைக்கோயில் என அழைப்பதற்கு மற்றொரு காரணம் இக்கோயிலில் முருகனுடைய ஆயுதமான வேல் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகும்.

பின்வரும் தொன்மை வாய்ந்த முருகன் கோயில்கள் ''சித்திரவேலாயுதர் கோயில்'' என அழைக்கப் படுகின்றன. அவை :

i. வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம்

ii. சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம்

iii. கோயில் போரதீவு சித்திரவேலாயுதர்

iv மண்டூர் முருகன் கோயில் (விதிவிலக்கு)

v. உகந்தை முருகன் கோயில் (விதிவிலக்கு)

vi. திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில்

தமிழகத்தில் அறுபடைவீடு என ஆறு பிரபல முருகத்தலங்கள் அழைக்கப்படுவது போல மட்டக்களப்பில் முருகனின் திருப்படையான ''வேல்'' பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்கள் ''திருப்படைக் கோயில்'' ஆகின. இவற்றுள் வெருகல் முருகன் ஆலயத்தில் பிற்காலத்தில் முருகன், வள்ளி, தெய்வானை, விக்கிரகங்கள் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

திருக்கோயில், உகந்தை, மண்டூர் ஆகிய மூன்று கோயில்கள் பற்றிய புராணக் கதை ஒன்று பின்வருமாறு கூறுகிறது. சூரபத்மனைக் கொன்ற முருகனது வேல் வாகூரமலையை இரு கூறுகளாகப் பிளந்து, கடலில் மூழ்கிய போது மூன்று பொறிகள் தோன்றின என்றும் அவை முறையே உகந்தை மலை உச்சியிலும் திருக்கோயில் வெள்ளை நாவல் மரத்தின் மீதும், மண்டூரில் தில்லை மரத்தின் மீதும் தங்கின. அவற்றை ஆதாரமாகக் கொண்டு அவ்விடங்களில் முருகன் கோயில்கள் தோன்றின.

## 19. வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம்

இப்பிரதேசத்தில் இலங்கையின் ஆதிக்குடியைச் சேர்ந்த குவேனியின் வம்சத்து வேடர்கள் வாழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. தற்போது இவ்வாலயம் இருக்குமிடத்திலே ஒரு ஆலமரம் இருந்தது எனவும் அம்மரப்பொந்திலே ஒரு வேல் இருந்ததாகவும் அதனை வேடர் வழிபாடு செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது. அவ்வழியே யாத்திரை செய்த செட்டியார் ஒருவர் இவ்விடத்தில் தங்கியபோது முருகன் கனவில் தோன்றி அவ்விடத்தில் ஒரு ஆலயம் அமைக்கும்படி கூற, அதன் படியே செட்டியார் இவ்வாலயத்தை அமைத்ததாகவும் கூறப்படுகிறது. ஆலயம் அமைப்பதற்கான திரவியமும் இம்மலைக்குகையில் இருந்ததாயும் அதனைப் பெற்றே செட்டியார் ஆலயம் அமைத்தார் எனவும் இக்கதை கூறுகிறது.

குவேனியின் வம்சத்து வேடர் வாழ்ந்த தலம் என்பதில் ஓர் உண்மை இழையோடுவதைக் காண முடிகிறது. வெருகலை அண்மிய சுற்றிவர உள்ள பிரதேசம் கதிரவெளி போன்ற இடங்கள் பெருங்கற்காலச் சின்னங்கள் காணப்பட்ட இடங்களாகும். இவை இன்றும் வேடர்களின் நிரந்தர இடங்களாகும்; பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுமிடங்களுமாகும். ஆகவே, ஆதிதிராவிட வாரிசுகளான வேடர்கள் வழிபட்ட இடத்தில் பின்பு செட்டியாரால் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

## 20. சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம்

கிழக்கிலங்கையில் வெருகலம்பதிக்கு அடுத்த படியாக பிரசித்தி பெற்ற முருகத்தலமாக சித்தாண்டி உள்ளது. இதுவும் ஒரு திருப்படைக் கோயில் என்பதால் தேசத்துக் கோயிலாயிற்று. கடம்பு (வம்மி) போன்ற பாரிய விருட்சங்களின் மத்தியில் ஆலயம் உள்ளது. அழகான கோபுரவாயிலுடனும் நான்கு மூலையிலும் நான்கு கிணறுகளுடனும் கோயிலின் தென்புறம் வள்ளியம்மன் கோயிலையும் வடபுறம் தெய்வானை அம்மன் கோயிலையும் கொண்டதாக அமைந்துள்ளது. ஆலயத்திற்கு அண்மையில் உப்பாறு என்னும் கங்கை ஓடுகிறது.

ஏனைய தலங்கள் போன்று இங்கும் வரலாறு பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் உலவுகின்றன. பழங்காலத்தில் இந்தியாவிலிருந்து கால்நடையாக

யாத்திரை மேற்கொண்ட சிகண்டி என்ற முனிவர் இவ்விடத்திற்கு வந்ததும் அங்கிருந்த அத்திமரநிழலின் கீழ் அமர்ந்து தவம் செய்தார். அப்பகுதியில் வசித்த வேடர்கள் முனிவரைக் கண்டு தொழுது வந்தனர். அம்மரத்தடியில் வேல் ஒன்றினை நட்டு அம்முனிவர் வழிபட்டு வந்தார். சிகண்டி முனிவர் ஒரு சித்தர். அவர் ஆண்டியாக அவ்விடத்திற்கு வந்ததால் சித்து + ஆண்டி என்னும் பொருள்பட சித்தாண்டி என்னும் பெயர் தோன்றிற்று என்பர்.

மட்டக்களப்பில் வன்னிமை ஆட்சி நிலவிய காலத்தில் இவ்வாலய நிர்வாக நடைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டன என்பதை இப்போது ஆலயத்தில் உள்ள நடைமுறைகளைக் கொண்டு அனுமானிக்க முடிகிறது.

## 21. கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம்

மட்டக்களப்பிற்கு தெற்கே படுவான் கரையில் மட்டக்களப்பு வாவியின் மேற்குப்புறத்தில் வயல்கள் நிறைந்த மருத மரச்சூழலில் கடம்ப மரநிழலிடையே அமைந்துள்ளது இவ்வாலயம். இதனை "வெள்ளை நாவற்பதி" எனச் சிலர் அழைப்பினும் இங்கு கூடம்பும் ஆலமரமுமே காட்சியளிக்கின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச்சிறப்பும் கொண்ட இத்தலம் மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகும். இதன் பண்டைய வ்ரலாறு பற்றி எதுவித கர்ணபரம்பரைக் கதைகளும் இல்லாவிட்டாலும் மட்டக்களப்பு மான்மியம் கூறும் ஒரு வரலாறு வருமாறு:

ஆதிகாலத்தில் "காலசேனன்" என்னும் அரசன் பெரிய படையோடு வந்து இப்பிரதேச மன்னன் மண்டு நாகனை வென்று ஆலயங்களை இடித்துத் தள்ளினான். பின்பு மதிசுதன் என்னும் மட்டக்களப்பு மன்னனின் காலத்தில் தொண்டை நாட்டு சிற்பிகளை வரவழைத்து அமைக்கப் பெற்றது என அறிகிறோம் (மட்டக்களப்பு மான்மியம் F.X.C. நடராசா பதிப்பு). போர்முடை நாடு என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுவது போரதீவு ஆகும்.

பின்பு சோழர் ஆட்சிக் காலத்தில் பல ஆலயங்கள் புனரமைப்பு செய்யப்பட்டபோது இதுவும் புனரமைப்பு செய்யப்பட்டது. கர்ப்பக்கிருகம் இன்றும் பழைய கட்டட அமைப்பிலே காணப்படுவது.

பிற்காலத்தில் கலிங்க மாகோன் இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் நிலையான ஆட்சியை நிறுவியபோது கொக்கட்டிச்சோலை, மண்டூர், போரதீவு போன்ற இடங்களில் திருப்பணிகள் இடம்பெற்றன. நிர்வாக நடைமுறையும் கட்டுக்கோப்பான முறையிலே ஏற்பட்டது. நாகன் வன்னிமையின் கீழ் இருந்தபோது தேசத்துக் கோயிலாக்கப்பட்டு பொதுமக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தீ மிதிப்பும் வேடர் தொடர்புறும் நிகழ்வுகளும் இங்கும் உள்ளன.

### 22. மண்டூர் முருகன் கோயில்

இவ்வாலயம் மட்டக்களப்பிலிருந்து 20 மைல் தெற்கே மட்டக் களப்பு வாவியின் தென்புறம் மூர்த்தி,

தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் அமைவுறப் பெற்று அமைந்துள்ளது. இத்தலம் 'தில்லை மண்டூர்' எனப்பட்டாலும் இத்தலத்தைச் சுற்றி கடம்பு, ஆல், அரசு, கொங்கு முதலிய விருட்சங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. பழைய காலத்தில் அமைக்கப் பெற்ற அதே தோற்றத்தில் ஓட்டுக் கூரை கொண்டதாக இன்றும் காட்சியளிக்கிறது இவ்வாலயம்.

இவ்வாலயம் உருவானது தொடர்பாக பிரசித்தி பெற்ற கர்ணபரம்பரைக்கதை ஒன்று உண்டு. அக்கதை வருமாறு : (ஏற்கனவே கூறப்பட்டது)

சூரபத்மனை நோக்கி முருகன் ஏவிய வேலானது அவனை அழித்த பின் வாகூரமலையை இரு கூறாகப் பிளந்து உக்கிரம் தணியாமல் கடலில் மூழ்கியபோது அவ்வேலிலிருந்து மூன்று பொறிகள் தோன்றி வேல்களாயின. அவற்றில் ஒன்று வெள்ளை நாவற்பதியாம் திருக்கோயில் பிரதேசத்தில் உள்ள வெள்ளை நாவல்மரத்திலும் இன்னொன்று உகந்தையிலுள்ள மலைஉச்சியின் நாவல் மரத்திலும் மற்றொன்று மண்டூர் பதியிலே தில்லை மரத்திலும் தங்கியதென்பர்.

இவ்வேலை வேடர்கள் கண்டு எடுத்துக் கொத்துப் பந்தலிட்டு வழிபட்டு வந்தனர். பின்பு கோயில் எழுந்தது எனப்படுகிறது. இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தபோதிலும் கதிர்காமம், உகந்தை, திருக்கோயில், மண்டூர் ஆகிய நான்கு தலங்களுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது.

கதிர்காமத்தை ஒத்த வழிபாடே இங்கு நடைபெறுகிறது. கதிர்காம முருகன் கோயில் முகப்பு போல அமைந்துள்ள இவ்வாலயத்தின் இருபுறமும் வள்ளி தெய்வானை கோயில்கள் உள்ளன. வைரவர், குமாரத்தன் கோயில்களும் உள்ளன.

## 23. திருக்கோயில் சித்திரவேலாயுதர் ஆலயம்

மட்டக்களப்புக்குத் தெற்கே 46 மைல் தொலைவில் திருக்கோயில் பதி அமைந்துள்ளது. நாகர்முனை, உன்னரசுகிரி, கண்டபாணந்துறை எனப் பல பெயர் கொண்ட இத்தலம் திருக்கோயில் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது.

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இவ்வாலயம் ஏழு பாண்டிய இளவரசரால் கட்டப்பெற்றது என்பர். மாகோன் காலத்தில் பொறிக்கப் பெற்ற தூண் கல்வெட்டும், துண்டுக் கல்வெட்டும் இங்குள்ளன. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் அமைந்த இக்கோயிலும் திருப்படைக்கோயிலாகவும் அமைந்துள்ளது.

கதிர்காமத்தோடு தொடர்புடைய இவ்வாலயத்தில் ஆண்டுதோறும் கால்நடையாகக் கதிர்காம யாத்திரை மேற்கொள்வோர் தங்கியிருந்து முருகனை தரிசித்துச் செல்வது வழக்கமாகும்.

திருக்கோயில் - திருக்கோணேஸ்வரம் இரண்டிலும் இதிகாச புருஷனாகிய இராவணன் சம்பந்தப்படுத்தப் படுகிறான். இவ்வாலயம் சோழ மன்னனாலும், மகோன், குளக்கோட்டன் ஆகியோராலும், திருப்பணி செய்யப்

பெற்றது. ஏர் பெருக பரதிகுலராசன் குளக்கோட்டன் திருப்பணி செய்தான் எனக் கோணேசர் கல்வெட்டு கூறும்.

## 24. உகந்தை முருகன் ஆலயம்

தமிழகத்தின் குன்றுதோறாடல் மலைக் கோயிலினை ஒத்த விதத்தில் குன்றும் பாறைகளும் கொண்டு அருகில் கடலும் தாலாட்ட அமைந்துள்ள பதி உகந்தையாகும். இதுவும் திருப்படைக் கோயிலாகவும் தேசத்துக் கோயிலாகவும் பேர் பெற்றது. கதிர்காமத்தோடு நெருங்கிய தொடர்புடைய இத்தலம் இரு பிரதான மலைகளையுடையது. வள்ளிமலை, முருகன் மலை, எனப்பெயர் பெறும் இருமலைகளும் வற்றாத சுனைகளும் இத்தலத்தை அழகு செய்கின்றன.

கதிர்காம யாத்திரை செய்வோர் இங்குள்ள முருகனை தரிசித்துச் செல்வர். கதிர்காமத்து முருகனுக்கு உகந்த மலை உகந்தை என்பர். அதனால் முருகன் இங்கு தங்கியிருந்து ஓய்வெடுப்பதாயும் ஐதீகம் உண்டு.

சூரிய வழிபாடு நடந்த இடமாகவும் இத்தலம் கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பு பிரதேசத்திலே மூன்று மலைக்கோயில்கள் சங்கமன்கண்டி, உகந்தை, தாந்தாமலை முருகன் ஆலயங்களாகும்.

மட்டக்களப்பு மான்மியத்திலே இத்தலம் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள் இடம்பெறுகின்றன.

இராவணன் தெட்சணாகிரி, உகந்தகிரி ஆகிய இடங்களில் ஆலயம் இயற்றி வழிபட்டதாகவும் பின் குருகுல நாகர் ஆண்டதாகவும் ஒரு கதை.

பின்பு சிங்ககுமாரன் பாழடைந்த ஆலயத்தைப் புனரமைத்ததாயும் மற்றொரு கதை. ஆனால் இப்பகுதியில் எடுக்கப் பெற்ற புதிய கற்கால எச்சங்களைக் கொண்டு கதிர்காமத்தோடு தொடர்பான ஆதித்திராவிடர் வழிபட்ட முருகத்தலம் இது என்பதை அறிய முடிகிறது.

ஓலைக் குடிசையாய் இருந்த இவ்வாலயம் மார்க்கண்டு முதலாளியால் 1885இல் கட்டப்பெற்றது என்றாலும் அதற்கு முன்பு வேல்மட்டுமே இருந்துள்ளது. ஆதித்திராவிட வழிபாட்டின்படி ஒரு திறந்தவெளிக் கோயிலாகவே இதுவும் காணப்பட்டு பின்பு கந்தழி வழிபாடாக மாறியுள்ளது எனலாம். இங்குள்ள பாரிய ஆலமரத்தின் கீழ் வேல் நடப்பட்டு மேடை காணப் படுகிறது.

## 25. கதிர்காமத் தொடர்புகள்

இதுவரை கூறியவற்றிலிருந்து மட்டக்களப்பின் பழம்பெரும் முருகன் ஆலயங்களுக்கும் கதிர்காமத்துக்கும் ஏதோ ஒரு வகையிலான தொடர்பு இருப்பதைக் காணலாம்.

தமிழகத்திலே முருகன் கோயில்கள் ஆறுபடை வீடுகள் என்று அழைக்கப்படுவது போல மட்டக்களப்பு பிரதேசத்திலும் ஆறுபடை வீடுகளாக மேற்குறித்த

ஆறு ஆலயங்களும் அமைகின்றன. அத்தோடு கதிர்காமப்பதியே இவ்வாலயங்களை இணைக்கும் மூலப்பதியாகத் திகழ்கின்றது. திரைமூடிப் பூசை செய்தல், வாய்மூடிப் பூசை செய்தல், வேடர் சம்பிரதாயங்கள், வேல் வணக்கம், போன்ற பல நடைமுறைகள் மட்டக்களப்பின் முருக ஆலயங்களில் இடம்பெறுவது கதிர்காமத் தொடர்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

கதிர்காமம் அமைந்துள்ள இடம் சப்பிரகமுவா மாவட்டமாகும். ஊவா, சப்பிரகமுவா, விந்தன, வெலிசர பண்டு மட்டக்களப்பு இராச்சியத்தின் இராஜதானியாகிய ரோகனவில் அமைந்திருந்தன. இவை அனைத்தும் பண்டு ஆதித்திராவிடர் வாழ்ந்த இடங்களாகும். கதிர்காமம் தொடக்கம் திருகோணமலை வரையுள்ள பிரதேசம் ஆதிமனிதன் வாழ்ந்த இடமாகவும் லிங்கவழிபாடு வேல்வழிபாடு நிலவிய இடமாகவும் காணப்படுவதுடன் பிராமிக் கல்வெட்டும் கிடைக்கும் இடமாகவும் இவை உள்ளன. இங்கு முதலில் ஆதித்திராவிடர், ஆதி நாகர், பின்னர் இவர்களின் வழிவந்த வேடர் வாழ்ந்த பிரதேசங்களாக இவை உள்ளன. அதற்கான எச்சங்கள் இன்றும் இப்பிரதேசங்களில் காணப்படுகின்றன.

கி.பி. 4ஆம் 5ஆம் நூற்றாண்டுகளில் கதிர்காமப் பிரதேசம் கதிர்காம ஷத்திரியர்கள் என்ற தமிழ் மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. இம்மன்னர்கள் கதிர்காம ஆலயத்தைப் போஷித்து வந்துள்ளனர். கதிர்காமத்தில் பௌத்தமதம் தொடர்பான அரசு

மரக்கிளை நடப்பட்ட போதும் இம்மன்னர்கள் அனுசரணை வழங்கினர். இது ஒரு முக்கியமான வரலாற்றுத் தகவல் ஆகும்.

## 26. முருக வணக்க நம்பிக்கையும் அனுஷ்டானங்களும்

இலங்கையில் உள்ள பெரும்பாலான முருகன் ஆலயங்களில் கந்தசஷ்டி அனுஷ்டிக்கப்பட்டு அக்காலத்தில் கந்தபுராணம் தொடர்ச்சியாக ஆறுநாள்களும் விரிவுரை செய்யப்படும். இதனை "புராண படனம்" என்பர். இந்த ஆறுநாள்களும் முருகபக்தர் ஒருவேளை உணவுடன் (சில வேளை அதுவும் இல்லாமல்) விரதம் அனுஷ்டித்து மேற்படி கந்தபுராண விரிவுரையை பக்தி சிரத்தையுடன் செவி மடுப்பர். 7ஆம் நாள் முருகன் சூரனை வதம் செய்த நிகழ்வு "சூரன் போர்" ஆக நிகழ்த்திக் காட்டப்படும். இவ்வகையில் தமிழகத்தில் உள்ள "திருச்செந்தூர்" ஆலயத்தில் நிகழும் வைபவங்களை ஒத்ததாக இது அமைகிறது.

இது தவிர ஆண்டுதோறும் வருடாந்தர உற்சவம் நடைபெற்று தீர்த்தோற்சவம் அல்லது தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவு பெறும். இவ்வகையில் இவை கதிர்காம உற்சவ கால நடவடிக்கையைப் பின்பற்றுவதாக அமைந்துள்ளன.

ஆதிகால முருகவணக்கத்தில் பூசை செய்பவரை வேலன் என அழைத்தனர். வேலன் வெறியாட்டு முதலியவை பழங்காலத்தில் முருகன் கோயில்களில் இடம் பெற்றதாக முருகவரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இதே முறையைப் பின்பற்றி வேலன் வழிவந்த சமயப் பூசாரிகளே மட்டக்களப்பில் உள்ள முருகன் திருப்படைக் கோயில்களில் பூசை செய்கின்றனர்.

ஆனால் மேற்படி திருப்படைக் கோயில்களுள் உகந்தை முருகன் கோயிலிலும், மண்டூர் மருகன் கோயிலிலும் சூரன்போர் இடம்பெறுவதில்லை. இங்கு கதிர்காமத்தின் நடைமுறை பின்பற்றப்படுகின்றது. மண்டூரில் திரை திறக்காது மௌன பூசை செய்வதும், உகந்தையில் பெட்டிக்குள் வைக்கப்பட்ட வேல் உலா வருவதும் கதிர்காமத்தைப் போன்றே நடைபெறுகின்றன.

*(ஆரையூர்க்கந்தன் 1999)*

*ஆரையம்பதி ஸ்ரீமுருகன் ஆலய மகாகும்பாபிஷேக மலர்)*





# புராதன ஈழத்தில் இந்து மதம்

## 1. இந்து மதத்தின் தொன்மை

தென், தென்கிழக்கு ஆசியாவின் ஆதிமதம் இந்து மதமாகும். கற்காலம் தொட்டு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இன மக்களால் கடைப்பிடிக்கப்பட்ட மத நம்பிக்கைகளின் வளர்ச்சியாகவே இந்துமதம் ஏற்பட்டது. இப்பிரதேசத்தின் ஆதிக்குடிகளை மானுடவியலாளர் ஒஸ்ரலோயிட் (Osterloid) என வழங்குவர். இவர்கள் பேசிய மொழி ஒஸ்ரிக் (Ostric) மொழி எனக் கூறுவர்.[1] இவர்களைத் தொடர்ந்து திராவிடர், ஆரியர் போன்ற மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்து வந்துள்ளனர். ஈழமும் தென்கிழக்காசியாவில் ஓர் அங்கமாக விளங்குவதனால் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட பல மாற்றங்கள் பண்டு தொட்டு இன்றுவரை ஈழத்திலும் ஏற்பட்டன.

## 2. ஈழத்தில் இந்து மதம் பற்றி ஆராய்ந்தோர்

ஈழத்தில் இந்து மதம் பற்றிய ஆராய்ச்சியில் பல அறிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் டாக்டர்

பரணவிதானா, வில்ஹம் கெய்கர், பெச்சேட், அதிகாரம், சரத்சந்திரா, ராகுல, ஆனந்தகுமார சுவாமி முதலிய அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் எல்லோரும் வட இந்திய தாக்கத்தின் அடிப்படையிலேயே தமது ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். தென் இந்திய கண்ணோட்டம் இவ்வாய்வில் விடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஆரியமய நம்பிக்கையே எனலாம்.

ஈழவரலாற்றினை ஆராயும் எவருக்கும் தென் இந்திய வரலாறு ஈழத்தில் எத்தகைய இடத்தினை வகிக்கின்றது என்பது நன்கு விளங்கும். தென் இந்திய வரலாறு மட்டுமல்ல, சமயம் கலை கலாசாரம் பண்பாடு இலக்கியம் முதலிய சகல துறைகளும் ஈழத்து வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளன.

## 3. ஈழத்தின் ஆதிக் குடியேற்றங்களும் இந்து மதமும்

ஈழத்து வரலாற்றில் விஜயன் வருகைக்கு முன்பே ஆதிக்குடியேற்றம் பற்றிக் கூறப்படுகிறது.[2] ஈழநாட்டிலே ஆதிக்குடியேற்றங்கள் நடந்த இடங்களாவன : அனுராதபுரம், உருவேல, திசமகாராம, தம்பபண்ணை, மாதோட்டம், பொனிபரிப்பு மாகம போன்ற பல இடங்களாகும். அண்மைக்கால ஆய்வுகளின் மூலம் இப்பகுதிகளில் எல்லாம் வாழ்ந்த மக்கள் ஒஸ்ரலோயிட், திராவிடர் என அறியப்படுகின்றது. கதிரவெளி, பதவியா, யாப்பகூவ, ஆனைக்கோட்டை, கந்தரோடை போன்ற மேலும் பல இடங்களிலும் இம்மக்கட் கூட்டத்தாரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3] இவை எல்லாம்

யக்ஷ வழிபாட்டுடன் தொடர்புடையவை எனப் பரண விதான கருதுகின்றார். இங்கெல்லாம் பெருங்கற்காலப் பண்பாடும் இந்துமத நம்பிக்கைகளுமே இருந்துள்ளன. மேலும், ஆதிக்குடியேற்றத் தலைவனான விஜயன் கலிங்க நாட்டிலிருந்து வந்தவன் என மகாவம்சம் கூறுகின்றது.[4] ஆனால் கலிங்க நாட்டிலும் இந்து மதமே செழித்தோங்கி இருந்தது.

## 4. ஈழத்து யக்ஷ வழிபாடும் இந்து மதமும்

இயக்க வழிபாடு ஆதிக்குடிகளிடம் மட்டுமல்ல, பண்டைய சிங்கள மக்களிடையேயும் பிரசித்தி பெற்றுக் காணப்பட்டுள்ளது. யக்ஷ தெய்வங்களில் சித்தராஜ, காலதேவ மகேஜ, வைசிராவண, வியாதேவ, பச்சிமராணி, வடவாமுகி போன்ற பல தெய்வங்கள் பேர் பெற்றவை. இத்தெய்வங்கள் குளங்கள், மரங்கள், மலைகள் மற்றும் இயற்கைப் பொருட்களில் 'உறை தெய்வங்களாக' அக்காலத்தில் கருதப்பட்டன. இது ஆரம்ப நிலையையும், பண்டைய சமய நிலையையும் காட்டுகின்றது.

தமிழ் நாட்டில் ஆரம்பத்தில் மரங்கள், மிருகங்கள் தெய்வத்தன்மை பெற்றுக் காணப்பட்டன. ஆரம்பகால கோயில்கள் மரங்களின் கீழ் அமைக்கப்பட்டன. முருகன் கடம்பன் எனவும், சிவன் கொன்றை வேந்தன், ஆல்கெழுகடவுள் எனவும் அழைக்கப்பட்டனர். வேம்பு, கடம்பு, வேங்கை, ஆல், புன்னை போன்ற மரங்கள் வணக்கத்துக்குரியனவாகக் கருதப்பட்டன. இவை ஈழத்து

யக்ஷ வழிபாட்டிலும் இடம் பெற்றன. ஒஸ்ரலோயிட், திராவிட நம்பிக்கைகளை ஒத்ததாகவே ஈழத்து இயக்க நாக வழிபாடுகள் காணப்பட்டன. இதுவே ஈழத்தில் இன்றும் நிலைத்து நிற்கும் வைரவர், ஐயனார், பிடாரி, மாரியம்மன், வீரபத்திரர், போன்ற ஊர்தெய்வங்களின் வழிபாடாகும். அன்று மரங்களின் கீழ் வழிபாடு தொடங்கியது போலவே இன்றும் மரங்களின் கீழ் பந்தலிட்டு வழிபாடு நடைபெறுகிறது. விஜயன் ஈழத்திற்கு வருவதற்கு முன்னரே இவ்வழிபாடு காணப்பட்டது. எனவே ஈழத்தின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் இந்து மதத்தோடு தொடர்பான வழிபாட்டினையே கொண்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது. இவை எல்லாமே திறந்தவெளிக் கோயில்களாகவே காணப்பட்டன எனலாம்.

## 5. ஈழத்து நாகரும் - இந்து மத வழிபாடும்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பகுதியில் இயக்கர் நாகர் இலங்கையில் வாழ்ந்ததாக அறிகிறோம். இதனைப் பல்வேறு ஆதாரங்கள் மூலம் நிறுவ முடிகின்றது. நாக வழிபாடு தொன்மை வாய்ந்த ஒன்றாகும். இன்றும் தமிழ் நாட்டில் மூலை முடுக்குகளிலெல்லாம் நாகர் வழிபாட்டைக் காணலாம். இவர்கள் இலிங்க, மர, இயற்கை வழிபாடுகளையே கொண்டிருந்தனர். ஈழத்தின் ஆதிக்குடிகளான நாகரும் இவ்வழிபாட்டினையே கொண்டிருந்தனர்.

ஆதியில் நாகர் வழிபட்ட பிரசித்தி பெற்ற ஓர் இலிங்கக் கோயில் திருக்கேதீஸ்வரமாகும்.[5] ஐந்து தலை நாகத்தினால் காக்கப்படுகின்ற சிவலிங்கம் நாகர் காலத்துடன் தொடர்புடைய பழமையினை எடுத்துரைக்கின்றது. ஆதித் திராவிடர்களின் கோயில்களை ஒத்த வகையிலே ஆதி நாகர்களும் திறந்தவெளிக் கோயில்களையே அமைத்து வழிபட்டனர். இக்கோயில்கள் மரங்களின் கீழ் கற்பலகைகள் அல்லது நாகக் கற்களைக் கொண்டமைந்தன. யட்டாள விகாரையில் காணப்பட்ட எச்சங்கள் ஆதிநாகர், இயக்கர் வழிபட்ட தலம் என்பதை வலியுறுத்துகின்றன.[6]

## 6. இயக்க நாகர் வழிபாடும் - திறந்தவெளிக் கோயில்களும்

ஈழ மக்கள் சமுதாய, மானுடவியற் கூறுகளை ஆராயுமிடத்து இந்துமத ஆரம்பக் கோயில்கள் ஒரு குறிப்பிட்ட மரம், குன்று அல்லது நீர்நிலை அபூர்வ சக்தி கொண்டதாகக் கருதப்பட்டு வணங்கப்பட்டன. ஆரம்பகாலக் கோயில்கள் இந்தியா போன்று இங்கும் திறந்தவெளிக் கோயில்களாகவே அமைந்தன. ஒரு மரத்தை (தலவிருட்சம் என இப்போது வழங்கப் படுகிறது) ஆதாரமாகக் கொண்டே ஆரம்பிக்கப்பட்டு, கோயில்களிலே திருப்பங்கள் ஏற்பட்ட போதே மக்கள் தங்கள் அபிலாஷைகளுக்கேற்ப தெய்வ வடிவங்களை உருவாக்கினர். ஆதிக் குடிகளான இயக்கர் நாகரும் விஜயன் வருகைக்கு முன்னரே இத்தகைய திறந்தவெளிக்

கோயில்களையே அமைத்து இந்து மத நம்பிக்கைகளைக் கைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது.

இலங்கையில் இன்றும் காணப்படும் வேடர்கள் திராவிடர்களுக்கு முற்பட்ட இலங்கையின் ஆதிக்குடிகள் என மஜும்தார்[7] சட்டர்ஜி போன்ற பிரபல ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பிரபல ஆய்வாளரான செழிமரும்[8] இதனையே வலியுறுத்தியுள்ளார்.

## 7. பெருங்கற்காலப் பண்பாடும் இந்து சமயமும்

ஈழத்தில் அனேக இடங்களில் பெருங்கற்காலப் பண்பாடு காணப்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இப்பண்பாட்டினைப் பேணிய மக்கள் ஆதித் திராவிடரே என்பது ஆய்வாளர்களது முடிவாகும்.[9] ஈழத்தில் மட்டுமல்ல இந்தியாவின் பல்வேறு இடங்களில் எகிப்து மத்திய தரைக்கடல் நாடுகளில் எல்லாம் இப்பண்பாடு காணப்பட்டுள்ளது. பெருங்கற்கால காலம் சுமார் கி.மு. 5000 - 3000 இடைப்பட்ட காலம் ஆகும்.

ஈழத்தில் பல இடங்களில் பெருங்கற்கால சின்னங்களான நீள் சதுரக் கற்பாறைகள் (Doumenold) ஈமத்தாழிகள் (Urns) கல்வட்டங்கள் (Cairn Circles) கல்மேசைகள் (Doimeng Grave) கல்லறைகள் (Cist Grave) போன்றன கண்டுபிடிக்கப்பட்டன. இவை மத்திய, வடமத்திய, தென்கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன.

பண்டதாரா (சுடுமண் சவப்பெட்டி) தப்போவ (யானை உருவ சவப்பெட்டி) தம்மடுவ (மனித - விலங்கு உருவங்களுடன் கூடிய சவப்பெட்டிகள்) பொன்பரிப்பு (ஈமத்தாழிகள், மட்பாண்டங்கள், விலங்கு எச்சங்கள், ஆபரணங்கள்) பதவிகம்பொள கதிரவெளி, குருக்கல்ஹின்னை (கல்மேசை, ஈமத்தாழிகள்) போன்ற இடங்களிலும் காணப்பட்டன.[10] இவை தவிர ஆனைக்கோட்டை, காரைநகர், உகணை, ஹபரணை, பதவியா, யாப்பகூவ, கதிர்காமத்தையண்டிய இடங்களிலும் பெருங்கற்கால சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இப்பண்பாட்டினைக் கொண்டிருந்த மக்கள் கடைப்பிடித்த சமயம் நிச்சயமாக பௌத்தம் இலங்கைக்கு வருமுன் (சங்கமித்தை மூலம்) இருந்த ஒரு சமயமாகும். அச்சமயம் இந்து மத நம்பிக்கைகளைக் கொண்ட ஒரு சமயமாகும் என்பது ஆய்வாளர்களது முடிவாகும்.[11]

ஆகவே, தொல்லியல் பின்னணியில் நோக்கும் போது ஈழத்தில் ஆதியில் காணப்பட்டது இந்து மதம் என்பது மறுக்க முடியாத உண்மையாகின்றது. ஈழத்தில் பெருங்கற்கால பண்பாடு பல இடங்களிலும் சவ அடக்கத்தோடு காணப்படுகின்றது. இவை எல்லாம் அம்மக்களின் சமய நம்பிக்கையினையே காட்டுகின்றன. அச்சமய நம்பிக்கைகள் இந்துமத நம்பிக்கைகளே ஆகும்.

**8. சுட்ட மண் உருவங்கள்** (Terracotta)

ஈழத்தின் பெருங்கற்கால பண்பாடு காணப்பட்ட பல இடங்களில் சுட்டமண் உருவங்கள் கண்டெடுக்கப்

பட்டுள்ளன. பெண் தெய்வங்கள், யானை, குதிரை, போன்ற வடிவிலான இந்த உருவங்கள் தப்போவா, மருதமடு, நவகிரிநகர், அம்பகாரை, மிகுந்தலை முதலாம் பல இடங்களில் காணப்பட்டன.

இப்பெண் உருவங்கள் ஈழத்தில் தாய்த் தெய்வ வழிபாட்டின் ஒரு முக்கியமான கட்டத்தினைக் குறிக்கின்றன. உலக வரலாற்றிலே தாய்த்தெய்வ வழிபாடு முதன்மையானது.[12] இது திராவிடர்க்கே உரியதும் மிகப் பழமையானதுமாகும். ஈழத்தில் காணப்பட்ட இச்சுடுமண் உருவங்கள் பல்வேறு மூர்த்தத்தைக் காட்டுகின்றன. இதுவே பின்பு ஈழத்தில் நிலைத்துள்ளதும் கி.பி. 113இல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதுமான கண்ணகி வழிபாடாகும். இது சிங்கள மக்களிடையேயும் இன்னும் நிலைத்து நிற்பதைப் பார்க்கிறோம். இன்று பெண் தெய்வ ஆலயங்களில் காணப்படும் குரவையிடல், தெய்வமாடுதல், கட்டுச் சொல்லுதல் போன்ற நிகழ்ச்சிகளும் பண்டைய சமய நம்பிக்கைகளையே பிரதிபலிக்கின்றன.

## 9. திறந்தவெளிக் கோயில்களின் வளர்ச்சி

கி.மு. காலப்பகுதியில் காணப்பட்ட இந்துமத வழிபாட்டு நம்பிக்கைகள், வணக்க முறைகள் எல்லாமே திறந்த வெளிக் கோயில்களாக மரங்களின் கீழ் அமைக்கப்பட்டன. மண்ணாலான மேடைகளைக் கொண்டிருந்தன. காலப்போக்கில் இவை எல்லாம் கோயில்களாக உருப்பெற்றன. இவை இலிங்கக்

கோயில்கள், முருகன் ஆலயம், வருணன், உபுல்வன், சந்திரசேகரர், குபேரன், வினாயகர் எனப் பல விதமான முறையில் வளர்ச்சி அடைந்தன.

## 10. இலிங்கக் கோயில்கள்

விஜயன் வருவதற்கு முன்பே ஈழத்தில் ஐந்து ஈச்சரங்கள் இருந்தன என மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[13] அவையாவன: திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முனிசுவரம், தெண்டேசுவரம், திருக்கேதீஸ்வரம் என்பனவாகும்.

இவற்றிலே திருக்கோணமலை கோணேசர் ஆலயம் மூன்றாவது கடற்கோளில் மூழ்கியது என்பர். இக்கடற்கோள் ஏற்பட்டது கி.மு. 3544 எனவும், அப்போது ஈழத்தின் பெரும்பகுதி அழிவுற்றது எனவும் "ராஜா வலிய" என்னும் பாளி நூல் கூறுவதாகவும் அறிகிறோம்.[14]

திருக்கேதீஸ்வரம் நாகர் வழிபாடு நிலவிய இலிங்க வழிபாட்டுத் தலமாகும். மிகப் பழைய ஈசுவரன் கோயிலான முனிசுவரம் கி.மு. காலத்தில் காணப்பட்ட இலிங்கக் கோயில் என அறியப்படுகிறது.

தென்பகுதியில் மாத்தறை நகரின்கண்ணே தெவிநுவர என்னும் இடத்தில் அமைந்துள்ளது தென்டேசுவரம் ஆலயமாகும். இவ்விடம் "தேவந்துறை" "தேவநகர" எனவும் வழங்கப்படும். இந்நகர் கடவுள் இறங்கிய துறை எனப்படும் கோயில் நகரினைச் சுற்றி வணிகர் குழுவினர் வாழ்ந்தனர் எனவும்,

ஆரம்பகாலத்தில் இக்கோயில் மாத்தறை (மாதுறை)யை அண்டி வாழ்ந்த மக்கள் குழுவினால் மரஅடியிலே திறந்தவெளிக் கோயிலாக உருப்பெற்று பின்னர் சந்திரசேகரர் கோயிலாக மாறியது எனவும் அறியப்படுகிறது. கி.பி. 150ல் தொலமி இக்கோயில் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் Daganacicitas Sacra lane என்கிறார். விஜயன் சந்திரசேகரர் ஆலயத்தை நிறுவியதாக யாழ்ப்பாண வைபவமாலையும் குறிப்பிடுகின்றது.[15]

திருத்தம்பலேசுவரர் கோயிலை விஜயன் நிறுவியதாக யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும். இது நகுலேஸ்வரம் எனப்படும் கீரிமலையாகும். திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி, கதிரையாண்டவர் கோயில்களை விஜயன் அமைத்ததாக யாழ்ப்பாண வைபவ மலையில் கூறப்படும் கூற்று கி.மு. 5ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்து சமய நிலையினைக் காட்டுகிறது.

இவை தவிர மட்டக்களப்பில் உள்ள மாமாங்கேசுவரம், கொக்கட்டிச் சோலையில் தான்தோன்றீசுவரம், ஒட்டிசுட்டானில் வவ்வாத்தி மலையின் ஆலயம் என்பன மிகவும் பழமை வாய்ந்த ஈசுவரன் ஆலயங்களாகும்.

## 11. ஏனைய தெய்வங்களின் ஆலயங்கள்

### அ. சிவனுக்கான ஆலயம்

பண்டுகாபய மன்னன் இலிங்கக் கோயில் கட்டியதாக மகாவம்ச மூலம் அறியப்படுகிறது.[16]

ஸிவிகாசாலா, செத்திசாலா எனும் இரு சமயக் கட்டடங்களை கட்டினான் எனவும், புரதேவனுக்கு ஆலயம் அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. ஸிவிகாசாலா என்பது சிவனுக்குரிய ஆலயமாகவும், புரதேவன் என்பது சிவனுக்குரிய மூர்த்தம் எனவும் அறிகிறோம். இது கி.மு.4ஆம் நூற்றாண்டு இந்து சமய வழிபாட்டினைக் காட்டுகிறது.

மகாசேனன் மூன்று பிராமணக் கோயில்களை அழித்து விகாரைகளை நிறுவியதாக மகாவம்சம் மூலம் அறியக்கிடக்கிறது.[17] அவை கோகர்ண, கிழக்கிலங்கையில் எலகெர என்னுமிடம், ரோகணையில் ஒரு இடம் என அறியமுடிகிறது.

இராவணன் காலத்து சிவத்தலங்கள் ஈழத்தில் இருந்தன எனவும், இவன் சிறந்த சிவபக்தன் எனவும் வரலாறு கூறுகின்றது. முனிசுவரம், கோணேசுவரம் என்பன இராவணன் வழிபட்ட திருத்தலங்களாகும். இராவணன் காலம் முதல் ஈழத்தில் இந்துமத நம்பிக்கை காணப்பட்டது என்பது தெளிவாகின்றது.

கந்தசுவாமி மலை என்னுமிடத்திலும் மரக்கோயிலொன்று அமைக்கப் பெற்றிருந்தது. இதனை நவரெட்ணம் அவர்கள் திரியாய் கல்வெட்டில் குறிப்பிடும் கிரிகண்ட சைத்தியத்துடனும், தட்க்ஷண கைலாய புராணம் குறிப்பிடும் கந்தாத்கிரியுடனும் அடையாளம் காண்பர்.[18]

### ஆ. வருண வழிபாடு

பருமந்தர் மலை என்பது வருண வழிபாட்டுடன் தொடர்புடைய ஒரு குன்றாகும். புத்தளத்திற்குக் கிழக்கே உள்ள இவ்விடத்திலே வருணனுக்கு எழுப்பப்பட்ட கோயிலின் எச்சங்கள் இன்றும் காணப்படுகின்றன.

### இ. உபுல்வன் வழிபாடு

தெண்டேசுவரத்திற்கு அருகாமையில் அரைமைல் தூரத்தில் உபுல்வன் கோயில் ஒன்று உள்ளது. விஜயனும் தோழர்களும் இலங்கைக் கரையை அடைந்தபோது சக்க தேவன் (இந்திரன்) விஜயனைப் பாதுகாக்கும் பணியினை உபுல்வனிடம் ஒப்படைத்ததாக மகாவம்சம் கூறும்.[19] எனவே இவ்வழிபாடு கி.மு. காலப்பகுதியில் இருந்துள்ளது.

ஆரம்பத்தில் ஏற்பட்ட முருக, சிவ, வழிபாட்டுத் திறந்தவெளிக் கோயில்கள் பல பிற்காலத்தில் உபுல்வன், வருண, சக்கதேவ, சோமதேவ எனப் பலவாறாக மாற்றமடைந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

### ஈ. முருக வழிபாடு

முருகவழிபாடு பண்டுதொட்டு ஈழத்திலும் காணப்படுகிறது. கதிரை ஆண்டவன் கோயிலை விஜயன் நிறுவினான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும். கிழக்கிலங்கையில் சங்கமான் கண்டிமலை, ஒட்டி சுட்டானில் உள்ள வவ்வாத்திமலை, கதிரைமலை,

போன்றன கி.மு. ஆண்டுகளில் காணப்பட்ட திறந்தவெளிக் கோயில்களாகும்.[20]

### உ. வீரபத்திரர் வழிபாடு

மட்டக்களப்பில் ஏறாவூர் என்னுமிடத்தில் காணப்படும் வீரபத்திரன் கோயில் கி.மு. கால வரலாற்றினை உடையது. மகாசேனன் அழித்ததாகக் குறிப்பிடும் மூன்று ஆலயங்களில் ஒன்றாகும். பிராமணக் கோயில்களை அழித்து அவ்விடங்களில் மூன்று விகாரைகளை நிறுவியதாக அறிகிறோம்.[21] அவை கோகர்ண எனப்படும் கோணேஸ்வரம், எலகர எனப்படும் ஏறாவூர், ஏனைய இடம் ரோகணையில் உள்ளதாக அறிய முடிகிறது.

ஈழத்தின் பல பகுதிகளிலும் மேலும் பல திறந்தவெளிக் கோயில்கள் காலப்போக்கில் கோயில்களாக உருவெடுத்தன.

## 12. கி.மு. கால பிராமிக் கல்வெட்டுகளில் இந்து மதம்

### அ. பெயர்கள்

ஈழத்தின் பல இடங்களிலும் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் நேரடியாக இந்து மதம் பற்றிக் கூறாவிட்டாலும் அவற்றிலே காணப்படும் பல பெயர்களைக் கொண்டு அறியமுடிகிறது.[22] அவற்றிலே காணப்படும் பெயர்ப் பட்டியல்கள் இந்து மதப் பெயர்களாகும். "சிவ", "அய", "புர", "நாக", "வேல", "வேலச", "கண", "கணதத்த", "கணச" எனக்

காணப்படும் பல சொற்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகளிலே காணப்படுகின்றன.

"அய" என்பது "அயன்", "ஆயன்" என்பதன் திரிபாகும். "புரம்" என்றால் கோயில் எனப்பொருள் கொள்ளப்படும். ஆயர்கள் முல்லை நிலக்கடவுளான மாயோனை வழிபட்டவர்கள். எனவே ஈழத்திலும் "சிவ" வழிபாட்டுடன் மாயோன் (உபுல்வன்) வழிபாடும் காணப்பட்டிருக்கலாம். 'கண' 'கணச' எனக் காணப்படும் சொற்களினால் கணநாதனாகிய விநாயக வழிபாட்டினை அறிய முடிகிறது. கி.மு. கால சைத்தியங்களின் சிற்பங்கள், காவற் தூண்களில் கண உருவங்கள் காணப்படுகின்றன.

ஆதி பிராமிய கல்வெட்டுகளில் பிராமணர் பற்றிய குறிப்புகள் பல இடம் பெறுகின்றன. பிராமணர்கள், சடங்குகள், பூசைகள், தர்மசாத்திரங்கள் போன்ற சமய விடயங்கள் அனைத்திற்குமே பொறுப்பாக இருந்தமையினை அறிய முடிகின்றது. மகா வம்சத்தில் கூட பிராமணர் பற்றி அனேக இடங்களில் குறிப்பிட்டுள்ளமை அக்காலத்து இந்து மதச் செல்வாக்கினைக் காட்டுகிறது. இவற்றில் காணப்படும் விணு, கோபால, நாராயண, வாசுதேவ, போன்ற சொற்கள் விஷ்ணு வழிபாட்டை உறுதி செய்கின்றன.

## ஆ. குறியீடுகள்

கி.மு. கால பிராமிக் கல்வெட்டுகளிலே சக்கரம், சூலம், சுவஸ்திகம் போன்ற குறியீடுகள் காணப்படுகின்றன.

இவை ஆதித் திராவிடரின் இந்து மத சின்னங்களாகும். சக்கரம் விஷ்ணு வழிபாட்டையும், சூலம் வயிரவன், வீரபத்திரன், காளி போன்ற இந்துசமய வழிபாடுகளையும் காட்டுகின்றன. கி.மு. கால இப் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 1ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால இந்துமத நம்பிக்கைகளை அறிய முடிகிறது.

## 13. நாணயங்கள்

கி.மு. கால நாணயங்களான லஷ்மி தகடுகளும் இந்து மத நம்பிக்கையினையே வலியுறுத்துகின்றன. இவை விஜயன் கால தங்க நாணயங்களாகும். இவற்றிலே அழகிய லஷ்மியின் உருவம் காணப்பட யானைகள் இருபுறமும் நீர் அபிஷேகம் செய்வதைக் காட்டுகின்றன. மறுபுறம் சுவஸ்திகம் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஈழத்தில் பண்டு நிலவிய இந்துமத நம்பிக்கையுடன் கூடிய தாய்த்தெய்வ வழிபாட்டினைக் காட்டுகிறது.

## 14. கட்டடம், சிற்பம், ஓவியங்கள்

கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 1ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக் கட்டடச் சிற்பங்களில் கண உருவங்கள் காணப்படுகின்றன. மிகுந்தலையின் கண்ட கசைத்தியம் கண உருவ சிற்பங்களைக் கொண்டது. அனுராதபுரகால சேத்தியங்களின் காவல் தூண்கள் (Guard Stone) குள்ளர் உருவ சிற்பங்களைக் கொண்டமைந்தன. இவை எல்லாம்

பௌத்தமதம் ஈழத்தில் கால் கொள்ளு முன்பு நிலவிய இந்துமத சமய நம்பிக்கையின் தொடர்ச்சியினைக் காட்டுகிறது எனலாம்.

**தொகுப்புரை**

இதுவரை கூறிய விபரங்களிலிருந்து பின்வரும் உண்மைகள் நிறுவப்படுகின்றன.

1. ஈழத்தின் ஆதிக்குடிகளான இயக்கர் நாகர் இந்துமத நம்பிக்கைகளையே கைக்கொண்டுள்ளனர்.
2. பௌத்தமதம் கால்கொள்ளு முன்பு ஈழத்தில் இந்துமத நம்பிக்கைகளே காணப்பட்டன.
3. சிங்களவரின் மூதாதை எனக் கருதப்படும் விஜயன் கலிங்க நாட்டவன், இந்து மதத்தவன், பல இலிங்கக் கோயில்களை அமைத்தவன். எனவே கி.மு. காலங்களில் இந்து மத நம்பிக்கைகளே காணப்பட்டன.
4. ஆரம்பத்திலே திறந்தவெளிக் கோயில்களாக உருப்பெற்ற இந்து மத வழிபாட்டு முறைகள் இலிங்கக் கோயில்களாகவும், இயற்கை வழிபாடுகளாகவுமே ஆரம்பிக்கப்பட்டு தற்போதைய கோயில்களாக வளர்ச்சியுற்றன.
5. இதனைப் பல்வேறு ஆய்வுகளும் தொல்லியல் ஆதாரங்களும் உறுதி செய்கின்றன.

*(மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் வெள்ளிவிழா மலர், 1994)*

**அடிக்குறிப்புகள்**


1. *சிந்தனை ஆடி, 1983, கலாநிதி சிற்றம்பலம், கட்டுரை : ஈழத்து யக்ஷ - நாக வழிபாடுகள்.*
2. Mahavamsa Gaiger (Translated), Ch.VII, pp.53, Notes 6.
3. Ceylon Journal of Science, Vol.II, 1928 December, 1933 February, pp. 94-98.
4. Mahavamśa Gaiger (Translated), Ch.VI, pp.51, Notes - 2.
5. *இலங்கையிற் தொல்லியலாய்வும் - திராவிடக் கலாசாரமும், த. குணபாலசிங்கம், 1988, மட்டக்களப்பு, பக். 108.*
6. J.S.B.R AS - New Series, Vol. XX, 1976, pp. 31-41.
7. The History and Culture of Indian People by Majumdar, pp. 8-40.
8. The Veddhas by C.G. Shligman, 1911, Cambridge, pp. 419 - 430.
9. Ceylon Journal of Science, Vo.II, December, February, 1933, pp. 94-98.
10. Ancient Ceylon, Journal of the Archaeological Survey of Ceylon, 1971, January, Ch.I, II.
11. a) Archaeological Survey Annual Report, 1957, pp.12-18.

    b) Ceylon Journal of Science, Vol.II, December 1928, Feb. 1933.

12. *சிந்தனை, ஆடி, 1983, பக். 48, பேராசிரியர் சிற்றம்பலம் கட்டுரை.*

13. P.E. Peris, Nagadepa and Buddhist Ruins of Jaffna, J.R.A.S.C.B., XXVI, No.70, 1917-11, 17, 18.

14. *கோணேஸ்வர ஆலய வரலாறு, கட்டுரை 1963, மாசி 17, 24, 31 வீரகேசரி.*

15. *யாழ்ப்பாண வைபவமாலை, பதிப்பாசிரியர்,* குல *சபாநாதன், 1953, பக். 4, 5.*

16. Mahavamsa, Gaiger (translated), Ch. XXXVII, pp.270, Notes 40-61, 1950, Colombo.

17. - do -

18. A Short History of Hinduism in Ceylon by C.S. Navertnae, 1964, pp.88.

19. Mahavamsa Gaiger (translated), 1950, Colombo, pp.55, Ch. VII, Notes 06.

20. Hinduism is Ceylon, by Rc. James Cartman, Colombo 1957, p. 5.

21. Mahavamsa Gaiger, Ch. XXXVII, p. 270. Notes 40-61.

22. *சிந்தனை ஆடி, 1988, கட்டுரை, பேராசிரியர் சிற்றம்பலம், பக். 39.*

# சித்தர்கள் வாழ்வும் வழிகாட்டுதலும்

*சித்தர்கள் என்போர் –*

*வேதத்தை அனுபவமூலம் கண்டு ருசித்து வாழ்ந்தவர்கள்.*

*சித்தத்தை சிவன் பால் வைத்தவர்கள்.*

*பேய் போல் திரிந்து, பிணம் போல் கிடந்து –*

*பிறர் இட்டதை நாய்போல் தின்று, நரிபோல் உழன்று,*

*நங்கையரைத் தாய் போல் நினைந்து, தமர்போல், உறவாடி,*

*சேய் போலிருப்பான் உண்மைச் சிவநாமம் உணர்ந்தவரே.*

*இந்தச் சித்தர்கள் தாயின் கருணையும் குழந்தையின் உள்ளமும் கொண்டவர்கள். துறவிக்கு வேந்தன் துரும்பு என்றபடி துணிச்சல் கொண்டவர்கள். பசி, நோய், புகழ், பழி, விருப்பு, வெறுப்பு, பகை, நட்பு இவை எல்லாமே ஒப்பு நோக்கும் தெய்வப் பண்பு உடையவர்கள்.*

உடலை உருப்பதற்குத் துளியும் அசையாத மன உறுதி கொண்டவர்கள். தம்மைத் தாமே கட்டுக்குள் வைத்திருக்கும் தனிப்பேராண்மை இவர்களுக்குண்டு. மேலும் இவர்கள் அட்டமாசித்திகளும் கைவரப் பெற்றவர்கள். ஆனால் நன்மைக்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்துவர்.

சித்தர்கள் உலகெங்கும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் சித்தர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் பொதுவானவர்கள். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே அவர்கள் நோக்கு.

**சித்தர் நெறி**

சித்தர்கள் யாவரும் மனித நேயம் மிக்கவர்கள். சாதி சமய வேறுபாடுகள் அற்றவர்கள். சமரச சன்மார்க்கத்தை நோக்கமாகக் கொண்டவர்கள். சடங்குகள், சம்பிரதாயங்களை மதியாதவர்கள். மனித வாழ்க்கை நிலையற்றது, மனிதன் தனக்குள் உறையும் இறைவனைக் காண வேண்டும் எனப் போதிப்பவர்கள்.

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" எனும் வாழ்க்கை பயனற்றது. எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த இறைவனை மனமொழி மெய்களால் போற்ற வேண்டும். மனிதர்கள் வாழ வேண்டும். இத்தகையோர் வாழ்வே சிறந்தது. இவையே சித்தர்கள் பின்பற்றிய நெறிகள். இவையே இவர்கள் உலகிற்கு உணர்த்திய நெறிகள்.

அவர்களுடைய பாடல்கள் குழுஉக்குறி, ஆகவே அமைந்திருக்கும்.

மூன்று வளையம் இட்டு முளைத்தெழுந்த கோணத்தில்
தோன்றும் உருத்திரனைத் தொழுது நிற்பது எக்காலம்?
வட்ட வழக்குள்ளே மருவும் சதாசிவத்தை
கிட்ட வழிதேட கிருபை செய்வதெக்காலம்?

எனப் பத்திரகிரியார் கேட்கிறார். தனக்குள்ளேயே இருக்கும் இறைவனைத் தரிசிக்க வேண்டியதை அவர் இவ்வாறு கூறுகிறார்.:

பொன்னின் ஒளி போலவெங்கும் பூரணமதாய்
பூவின் மணம் போல; தங்கும் பொற்புடையதாய்
மன்னும் பல உயிர்களில் மன்னிப் பொருந்தும்
வள்ளலடி வணங்கி நின்று ஆடு பாம்பே

எனப் பாம்பாட்டிச் சித்தர் பாடுகிறார்.

பாம்பை ஆட்டுவித்துப் பாடுவதால் பாம்பாட்டிச் சித்தர் என இவர் பெயர் பெறுகிறார். அடிப்படையில் ஆழ்ந்த தத்துவம் கொண்ட இப்பாடல்கள் பாம்பு வடிவமாக உள்ள குண்டலினி சக்தியை எழுப்பி ஆன்ம தரிசனம் பெறுவதைக் குறிப்பிடுகின்றன.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலரே, சித்தர் பரம்பரையின் முன்னோடியாக விளங்குகின்றார். அவருக்குப் பின் தோன்றிய பலர் சித்தர்களாக விளங்கியுள்ளனர். சைவ அடியார்கள் பலர் சித்து கைவரப் பெற்றவர்களாக உள்ளனர். திருவிசைப்பா

பாடிய கருவூர் தேவர், ஞான நூல்களை இயற்றிய நக்கீரர், கபிலதேவர், பட்டினத்தடிகள் போன்றோரும் சித்தர்களே.

இந்துக்கள் பரம்பரையில் மிக நீண்ட நெடுங்காலமாகவே சித்தர் மரபு தொடர்ந்து வந்திருக்கிறது.

சித்தர்கள் பெரும்பாலானவர்கள் தம் இயற்பெயரை இழந்து தாம் வாழ்ந்த இடத்தின் பெயராலே அழைக்கப்பட்டனர். கருவூரார், கொங்கணர், இடைக்காடர் ஆகியோர் இடப்பெயரையே தம் பெயராகக் கொண்டவர்கள். அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழகுண்ணிச் சித்தர், பழனிமுனி கோரக்கர், யூகிமுனி, பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச் சித்தர், கமலமுனி, சட்டைமுனி, மச்சமுனி, சுந்தரானந்தர், பத்திரகிரியார், இராமதேவர் எனப் பதினெண் சித்தர்கள் முக்கியமானவர்கள். இந்தப் பதினெட்டு பேரே வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்கள்.

சித்த வைத்தியத்திற்கு இவர்கள் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது. நிகண்டு, வைத்திய சிந்தாமணி போன்ற வைத்திய மாந்திரீக முறைகளை ஆக்கியோரும் இச் சித்தர்களே.

## சித்தர்கள் பற்றிய விளக்கம்

சித்தர்களின் பாடல்களின் கருத்துகள் நாடு, மொழி, இனம் ஆகிய எல்லைகளைக் கடந்து சென்று உலகெங்கும் பரவும் ஆற்றல் கொண்டவை. அவற்றில் பட்டினத்தார் பாடல்களுக்கு தனிச் சிறப்புண்டு. பட்டினத்தார் வாக்கு யாராலும் போற்றப்படுவது.

உடல், பொருள், ஆவி, சுற்றம் எல்லாமே நிலையற்றவை. உலக இன்பம் நிலையற்றது என இவரது பாடல்கள் பறை சாற்றுகின்றன.

வேளைக்கு உணவு உண்பதோ, உடை உடுத்துவதோ, அடுத்த நேர உணவைப் பற்றி சிந்திப்பதோ இவர்களால் நினைத்துக் கூட பார்க்க முடியாது. கையில் ஓடு கொண்டிருப்பதைக் கூட சிலர் வெறுத்தனர். உறைவிடம் பற்றியோ மழை, வெயில் பற்றியோ சிந்திக்கவே மாட்டார்கள். இருளோ, ஒளியோ, காடோ, நாடோ கால்போன போக்கிலே போய்க் கொண்டே இருப்பார்கள்.

உலகப் பழக்க வழக்கங்கள், சாதி சமயப் பிளவுகள், செல்வம், செல்வாக்கு, பதவி, மண், பொன் இவை எல்லாம் சாராத திருவடிவமே சித்தர்கள்.

தொடர்ந்து ஞானப் பயிற்சியிலும் தியானத்திலும் இவர்களுக்கு அட்டமாசித்தி கிடைப்பதாக நம்பப் படுகிறது. அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, வசித்துவம், பிரகாம்யம், இசித்துவம் என்பன அட்டமா சித்திகள்.

அணிமா - அணுவளவு உருக்கொள்ளக் கூடிய சக்தி

மகிமா - அதிபலத்துடன் பெருமலை போல் மாறக்கூடிய சக்தி.

லகிமா - காற்றைப் போல பரவெளியில் பறந்து போகும் சக்தி.

கரிமா - தங்கத்தைப் போல் மாற்றுக் குறையா உறுதி.

பிராப்தி - ஏழு உலகமும் புகுந்து வரக்கூடிய சக்தி.

வசித்துவம் - கடவுளரையும் வேந்தரையும் கட்டுப்படுத்தும் சக்தி.

பிரகாம்மியம் - இருக்கும் உடலை விட்டு இன்னோர் உடல் புகும் சக்தி.

இசித்துவம் - விரும்பியதை விரும்பியவாறு செய்யும் பேராற்றல்.

## சித்தர்கள் விக்கிரக வணக்கத்தை வெறுத்தவர்கள்

கற்சிலைக்கு அளிக்கும் நமது படையலை விட அன்பின் சின்னம் தான் மானுட வடிவு என்கிறார் சிவவாக்கியார். அறிவிலி அன்பையும் சிவத்தையும் பேதமிட்டுப் பார்க்கிறான். ஆண்டவன் அன்பே உருவானவன். ஆண்டவனை வேறெங்கும் தேட வேண்டியதில்லை. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதோடு எல்லாம் கடந்த ஆண்டவனை வைத்துக் கொண்டு நடக்கும் மதப் பூசல்களை நையாண்டி செய்வர்.

அறிவிலிகளே உங்களுக்குள்ளே தெய்வம் இருக்கையில் உங்களுக்கு வெளியே புனிதத் தலமும் புண்ணிய தீர்த்தமும் இருக்கிறதா? என்று கேட்கிறார் சிவவாக்கியர்.

நட்ட கல்லைத் தெய்வ மென்று
நாலு புஷ்பம் சாத்தியே
சுத்தி நின்று முணுமுணென்று

சொல்லு மந்திரம் ஏதடா
நட்ட கல்லு பேசுமா?
நாதன் உள்ளிருக்கையில்

மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மீன் இருக்கும் நீரலோ மூழ்குவதும் குடிப்பதும்
மான் இறைச்சி தின்றதில்லை இன்றும் அன்றும் வேதியர்
மான் உரித்த தோலலோ மார்பு நூல் அணிவதும்

ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
ஆட்டிறைச்சி அல்லவோ யாகம் நீங்கள் ஆற்றலே
மாட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்
மாட்டிறைச்சி அல்லவோ மரக்கறிக் கிடுவது

## சித்தர்கள் எமக்கருளிய வைத்திய நூல்கள் - பாடல்கள்

*சித்தர் நூல்களில் தலை சிறந்தது திருமந்திரம் - இது திருமூலர் இயற்றியது. சித்த வைத்திய முறையை வகுத்தவர்களில் தலையாயவர் அகத்தியரே எனப்படுகிறது.*

*காலங்கி நாதரின் மாணவர் போகர். இவர் பழனி மலையிலே வாழ்ந்தவர். யோகம் எழுநூறு, வைத்தியம் ஏழாயிரம், நிகண்டு பதினேழாயிரம், போகர் திருமந்திரம் என்பன போகரால் இயற்றப் பெற்றன. பழனி மலையில் ஒரு குகைக்குள்ளே சென்ற போகர் இதுவரை திரும்பி வரவில்லை என்ற ஒரு கதையும் உண்டு. புலிப்பாணி சித்தரும் பழனிமலைச் சாரலில் வாழ்ந்தவர். சிதம்பரம் இருபத்தைந்து, சாவாத்திரட்டு நூறு, பல திரட்டு நூறு, வைத்தியம் ஐந்நூறு முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.*

அகத்தியரின் மாணவர் எனப்படும் தேரையர் நோய் அணுகாவிதி என்னும் நூலையும் அவரது மாணவர் யூகிமுனி வைத்திய சிந்தாமணியையும் இயற்றி உள்ளனர். தன்வந்திரி என்னும் சித்தர் தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி, கலைஞானம் என்பவற்றையும் இயற்றியுள்ளார்.

சித்தர் பாடல்கள் இன்றும் எம்மிடையே புகழ்பெற்று விளங்குகின்றன.

நாதர் முடி மேலிருக்கும் நாக பாம்பே
நச்சுப் பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே

என்ற பாடல் பாம்பாட்டிச் சித்தர் பாடலாகும். மருத மலையில் இவருடைய வாழ்க்கைச் சின்னங்கள் இன்றும் காணப்படுகின்றனவாம்.

மனத்தைப் பேயாக கருதி அதற்குப் பெண் உருக்கொடுத்து பாடிய பாடல்கள் அகப்பேய் சித்தரின் அகப்பேய் சித்தர் பாடல் ஆகும். அகப்பேய் என்பது மருவி அகப்பைச் சித்தர் என வழங்குதலும் உண்டு.

குதம்பை என்பது "காதணி." இதை அணிந்த பெண்ணை முன்னிலைப்படுத்திப் பாடிய பாடல்கள் குதம்பைச் சித்தர் பாடல்கள் எனப்படும். இவை எளிமையானவையும் ஆழ்ந்த பொருள் கொண்டவையுமாகும். இச்சித்தர்கள் இன்றும் பழனிப் பகுதிகளில் உள்ள மலையின் அடியில் வாழ்வதாகவும் நம்பப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் கூட பல சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். புரட்சிக் கவிஞர் பாரதி கூட தன்னை

ஒரு சித்தர் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார். "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தனர். அப்பா, யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்நாட்டில்" என்கிறார்.

பாரதி அறுபத்தாறு என்னும் பாடலில் இவ்விதம் தன்னையும் சித்தர்களில் ஒருவர் எனக்கூறிய பாரதி, குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணச்சாமி முதலிய துறவிகளின் சிந்தை பற்றியும் கூறுகிறார்.

இவர்கள் எல்லோருக்குமே முன்பு வாழ்ந்த அகத்தியர், புலதியர், திருநந்திதேவர், போகர் கூட சித்தர்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். அகத்தியர் பொதிகைமலையில் வாழ்ந்தவர். அகத்தியமாமுனிவர் என்றே அறிகிறோம். ஆனால் அந்த அகத்தியர் கூட ஒரு சித்தரே. பதஞ்சலி முனிவர் கூட ஒரு சித்தராகவே அறியப்படுகிறார்.

ஏன் நமது நாட்டில் வாழ்ந்த யோககுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள், செல்லப்பா சுவாமி போன்றோரும் சித்தர்களே. சிந்தானைக் குட்டியார் என்றே ஆனைக்குட்டி சித்தர் அழைக்கப்படுகிறார்.

வரலாற்றுப் பெருமை கொண்ட சித்தாண்டி முருகன், திருப்பதியை நிறுவியவரே சித்தாண்டி என்னும் சித்தரே என அறிகிறோம். சித்து + ஆண்டி = சித்தாண்டி என இவர் பெயராலே சித்தாண்டி முருகன் ஆலயம் இன்றும் அழைக்கப்படுகிறது.





# சுவாமி விவேகானந்தரின் சமய சமத்துவம்

## 1. சர்வசமய சமரசம்

சுவாமி விவேகானந்தர் தனது சிக்கசோ பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மையாலே
தங்குமத நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றினாலும்
அங்கு அவைதாம் எம் பெரும் ஈற்றில் உன்னை.
அடைகின்ற ஆறேயன்றோ

*(ஆங்கில மூலத்தின் தமிழாக்கம்)*

பல ஊற்றுகள் வாயிலாக உருவாகி எழும் நதிகள் எவ்வாறு சமுத்திரத்தில் சங்கமமாகி விடுகின்றனவோ அவ்வாறே, வெவ்வேறு மார்க்கத்தின் வாயிலாக, வெவ்வேறு மார்க்கத்தில் பக்குவப்படும் மாந்தர்கள், தமக்குள் மாறுபடுபவர்களாகத் தென்படினும், ஈற்றில், உன் திருப்பாதத்தினையே வந்தடைகின்றனர்.

பிரிவு மனப்பான்மை, மூடநம்பிக்கை, ஆகியவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இந்த அழகிய உலகை, நெடுநாளாக வன்முறைகளால் நிரப்பி உள்ளது. அடுத்தடுத்து இவ்வுலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து, நாகரிகங்களை மூழ்கடித்து மனித சமுதாயத்தை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டது. அவ்வாறில்லாவிடின் மனிதசமுதாயம், இன்றிருப்பதைவிடப் பன்மடங்கு உயர்ந்த நிலையை எய்தியிருக்கும் (சுவாமிஜியின் சிக்காகோ சொற்பொழிவுகள்).

## 2. அனைத்துச் சமயங்களும், உண்மையானவையே

பிற சமயங்களுடன் சமரச உணர்வு கொள்ளுதல் என்பதோடு, அச்சமயங்களும், உண்மையானவை என ஏற்றுக் கொள்வதுதான் சர்வசமய நெறியின் ஆதாரசுருதி. இந்தச் சுருதியைச் சிதைக்கும் மதச்சண்டைகளின் பேய் ஓலம் ஒழிக்கப்பட வேண்டும் என்பது சுவாமிஜியின் கொள்கை.

சமய இணக்கம் வேண்டும் என்பதினை சுவாமிஜீ தனது முதலாவது ஆங்கிலக்கவிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

எங்கள் கடவுளே, பழம்பெரும் தீர்க்கதரிசிகளே
அனைத்துச் சமய நெறிகளும் உங்களிடமிருந்தே வருகின்றன.

வேதங்கள், பைபிள், குர்ரான், யாவும்
துணிந்து இணைந்து, உங்கள் புகழ் இசைக்கின்றன.

என்று பேராசிரியர் ரைட்டிற்கு எழுதிய கடிதத்திலும் இதனை அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வமத சபையிலே சுவாமியினது பேச்சு, பிற சமயங்களை மதிப்பதாக அமைந்தது, பிற சமயங்களுக்கு, உரிய மரியாதையைத் தரவேண்டும், அவ்வாறு செய்யாதவன், தனது சொந்த சமயத்தையும், மதிப்பற்றதாக்குகிறான். தன்னுடைய சமயத்தைப் பெருமைப்படுத்துவதற்காக, பிற சமயங்களை இழிவுபடுத்துபவன் தனது சொந்த சமயத்திற்கும் தீங்கிழைக்கிறான் என்கிறார் சுவாமிஜீ. இச்செய்தியை, பகவத்கீதை பின்வருமாறு கூறுகிறது.

யார் என்னை எவ்வாறு வேண்டுகிறாரோ
அவ்வாறே நான் அவர்களைச் சார்கிறேன்

(பகவத்கீதை, ஞான-11)

எனவே, இறைவனை, எந்த வடிவத்தில் எந்தச் சமயம் மூலம் வழிபட்டாலும், அது ஒரே இறைவனையே சார்கிறது.

## 3. கிறிஸ்தவ சமயமும் சுவாமி விவேகானந்தரும்

வரலாற்றுப் புகழ்பெற்ற சிகாகோ சர்வசமய மாநாடு (1893) றோமன் கத்தோலிக்க திருச்சபையின் மிக

உயர்ந்த சமயகுரு கார்டினல் கிப்ளிங், அவர்களது தலைமையில் கூடியது. இம்மாநாட்டில், கிறிஸ்தவ சமயத்திற்குச் சமமாக, பிற சமயங்கள் அனுமதிக்கப்பட்டதை, சில கிறிஸ்தவப் பாதிரிகள் எதிர்த்தனர். இப்படியான எதிர்ப்புகளின் மத்தியில், சுவாமி விவேகானந்தரின் பேச்சு, பின்வருமாறு அமைந்தது. ஆனால் இவை புனித பைபிளை ஆதாரமாகக் கொண்டவை.

i. உங்கள் அக்கிரமங்களே, உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் இடையே பிரிவினையை உண்டாக்கின. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடி, செய்தது. உங்களுடைய பாவங்களே அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. (எசாயா : 56-21)

ii. எல்லோரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களாகி (ரோமர் : 4-25)

iii. இப்படியாக ஒரே மனுஷனாலே, பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவம் செய்தபடியால் மரணம் எல்லோருக்கும் வந்ததுபோல, இதுவுமாயிற்று. (ரோமர் 6-12)

கிறிஸ்தவ சமயத்திலே 'original sin' என்று குறிப்பிடப்படும் முதல் பாவம், கிறிஸ்தவ சமயத்திலிருந்து பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளது. யேசு கிறிஸ்துவின் அருளால் சாப

விமோசனம் பெற்று வீடு பேறு எய்துவதோ, நரகத்தில் வீழ்வதோ "முதல் பாவம்" என்ற கொள்கையோடு தொடர்புடையதாகக் கூறப்படுகிறது.

*(சிகாகோ சொற்பொழிவு, பெ.சு. மணி, பக் : 120-2)*

இந்த முதல் பாவம் பற்றிய கொள்கைக்கு ஆதாரம் பைபிளின் பழைய ஏற்பாட்டிலோ அல்லது இயேசுவின் போதனைகளிலோ இல்லை என பைபிள் ஆய்வாளர் பலர் கருதுகின்றனர். இதனை சுவாமி சிரத்தானந்தா ஒரு கட்டுரையில் கூறியுள்ளார் (வேதாந்தமும் முதல் பாவமும், வேதாந்த கேசரி, பொன் *விழா மலர், 1964-பக். 61).*

இந்த "முதல் பாவம்" என்ற கருத்தை தொடக்கம் இல்லாத அறியாமை என வேதாந்தம் கூறுகிறது. நம்முடைய உண்மைத் தன்மையை, தெய்வத்தன்மையை மறைத்திருக்கும் மேற்படி அறியாமை என்பது ஆத்ம ஞானம் பெற்றவுடன் மறைந்து போகிறது.

வழிபாடு, பிரார்த்தனை, தியானம் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளால் ஆத்ம ஞானம் ஏற்படுகிறது. இதன் மூலம் மனிதன் பூரணத்துவம் அடைகிறான். எல்லையற்ற பேரின்பத்தையும் ஞானத்தையும் பெறுகிறான். இது வேதாந்தம் காட்டும் விமோசனம். இவ்வாறு சுவாமி சிரத்தானந்தா கூறுகிறார்.

இதை, யேசுகிறிஸ்துவும் வேறு வார்த்தைகளில் கூறுகிறார். பூரணத்துவம் பெறுங்கள். சொர்க்கத்தில்

பரிபூரணமாக இருக்கும் உங்கள் பரமபிதாவைப் போல் பூரணத்துவம் பெறுங்கள்.

இந்தப் பின்னணியில், சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார்: அமுதமயமாகிய ஆனந்தத்தின் குழந்தைகளே மனிதனுள், ஏற்கனவே உறைந்துள்ள தெய்வத்தன்மையை விகசிக்கச் செய்வதே சமயம்... "Religion is the manifestation of the divinity within the man" என்றும் "manifest the divinity within yourself; the rest within harmoniously surround it" என்றும் சுவாமிஜீ கூறுகிறார். உங்களுக்குள் உறைந்திருக்கும் தெய்வத்தன்மையை விகசிக்கச் செய்யுங்கள். ஏனைய யாவும் மிகச் சுமுகமாக அதை நடாத்திச் செல்லும் என சுவாமிஜீ கூறுகின்றார்.

**4. தியாசாபிகல் சபை** (Theosophical Society)

இச்சபை, சுவாமி விவேகானந்தர் காலத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருந்த ஒரு சமய நிறுவனமாகும். ஆனால் இதில் அங்கத்தவர்களாக இருந்த பிரமுகர்கள், ஆன்மீகத் தேடலை விட்டு தத்துவ விசாரங்களில் பொழுதைப் போக்கினர். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் பயணமான போது இச்சபையின் தலைவரிடம் சென்று ஒரு அறிமுகக் கடிதம் கேட்டார். தமது சபையில் உறுப்பினராகச் சேராவிட்டால் அறிமுகக் கடிதம் தரமுடியாது எனத் தலைவர் மறுத்துவிட்டார்.

இச்சங்கத்தினர் பின்னர் அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தருக்கு எல்லையில்லாத தொல்லை கொடுத்தனர். சுவாமிஜீக்கு எதிரான கிறிஸ்தவப்

பாதிரிமாருடன் சேர்ந்து கொண்டு அவரை அவதூறாகப் பேசினர். அவர் தங்கியிருந்த வீடுகளிலிருந்து அவரை வெளியேற்ற மறைமுகமான சூழ்ச்சிகளைச் செய்தனர். சுவாமீஜியுடன் நட்புக் கொண்டிருந்தவர்களை அவருக்கு எதிராகத் திருப்பிவிட முயன்றனர்.

சுவாமிஜீயின் ஆன்மீகப் பயணத்தில், இத்தகைய மறைமுகமான முயற்சிகள் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சுவாமிஜீ அவற்றைப் பொருட்படுத்தவும் இல்லை. ஆனால் மூன்று வருடங்களுக்குப் பின் இவர்கள், இந்தியாவில் சுவாமிஜீ புகழ் பெற்றிருந்தபோது, தாங்களே அவருக்கு அமெரிக்காவில் சகல உதவிகளும் செய்ததாகப் பொய்ப்பிரசாரம் செய்தனர். அதை முறியடிப்பதற்கும், உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவதற்கும் சுவாமிஜீ இவற்றைப் பகிரங்கமாகக் கூறவேண்டியிருந்தது.

கிறிஸ்துவின் மனித நேயப் போதனைகளை மறந்து ஒரு சில கிறிஸ்தவர்கள் இப்படியெல்லாம் செய்தபோதும் சுவாமிஜீ யேசு கிறிஸ்துவைத் தனது இதயத்தில் வைத்துப் போற்றியவர். "தேவகுமாரன் இப்போது வந்தால் கண்ணீரால் அல்ல என் இதய ரத்தத்தால் அவருடைய திருவடிகளைக் கழுவுவேன்" என்று கூறியவர்.

சிக்காகோவில் நடைபெற்ற சர்வசமய மாநாடு முடிந்த பின்னரும், ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த அழைப்புகளை ஏற்று, சுவாமிஜீ அங்கெல்லாம் சென்று உரையாற்றினார்.

இவரைக் கண்டது முதல் அமெரிக்க மக்கள், இதற்கு முன் கிறிஸ்தவப் பாதிரிமார் இவரைப் பற்றிக் கூறிய கதைகளெல்லாம் பொய் என்பதை அறிந்து கொண்டனர். இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டதற்குக் காரணம், சுவாமிஜீயின் சத்திய நேர்மையும் கிறிஸ்தவ மதத்திற்கும், இந்து மதத்திற்கும் உள்ள ஒருமைப்பாடுகளை ஒளிவு மறைவின்றி அவர் எடுத்துக்கூறியதுமாகும்.

அதுமட்டுமல்ல, சகல சமயங்களிலும் இழையோடும் பொதுத்தன்மையை ஏற்று, சமயங்களுக்குள் சில மதவாதிகள் கற்பிக்கும் ஏற்றத் தாழ்வுகளை நிராகரித்து, சகல சமயங்களும் உண்மையானவை என்பதை அவர் மக்களுக்குத் தெளிவுபடுத்தியதும் கிறிஸ்தவப் பாதிரிமாரின் பொய்ப் பிரசாரத்தை முறியடிக்க உதவியது எனலாம்.

## 5. இங்கிலாந்தின் கிறிஸ்தவப் பாதிரிகள்

இங்கிலாந்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்களுடன் தனக்கு ஏற்பட்ட சில அனுபவங்களையும் சுவாமிஜீ கூறுகிறார். அமெரிக்காவில் பாதிரிமார் அந்தக் காலத்தில், சமயத்தின் பெயரால் எதையும் செய்வார்கள்.

ஆனால் இங்கிலாந்தில் அவர்கள் எதுவுமே செய்யவில்லை. சுவாமிஜீயுடன் வாதாடவுமில்லை. இங்கிலாந்தின் clergy யைச் சேர்ந்தவர்கள் பெருந்தன்மையுடையவராகக் காணப்பட்டனர். அவர்கள் தம்முடன் கருத்து மாறுபட்ட போதும் புறங்கூறவில்லை. மறைந்திருந்து தாக்கவும் இல்லை.

சில பாதிரிமார் மேற்கொண்ட பொய்ப் பிரச்சாரம், சுவாமிஜீ மேற்கொண்ட ஆன்மீக முயற்சிகளை வெற்றி பெறவும் செய்தன, என சுவாமிஜீ கூறுகிறார்.

இறைவனை கிறிஸ்தவ சமயத்தில் "தந்தையே" என்றும் இந்து சமயத்தில் "தாயே" என்றும் அழைப்பர். கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களில் சாதி வேற்றுமை இல்லை. இந்து சமயம் இந்த நல்ல கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்றும் சுவாமிஜீ மனம் திறந்து கூறியுள்ளார்.

சமயங்களுக்குள் உள்ள அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டால் மத மாற்றத்திற்கோ, மதபேதத்திற்கோ இடமில்லை என்பதை சுவாமிஜீ அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறினார். கிறிஸ்தவ மதப்பிரசாரமும், மத மாற்றமும் உச்சத்தில் இருந்த ஒரு காலகட்டத்தில் சுவாமிஜீ இவ்வாறு கூறியது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

### 6. உலகத்துக்குப் பொதுவான ஒரு சமயம்

உலகத்திற்குப் பொதுவான ஒரு சமயம் நடைமுறைச் சாத்தியமற்றது போலத் தோன்றும். இருப்பினும் சுவாமிஜீ அதுபற்றிச் சிந்தித்துள்ளார். *1900*இல் கலிஃபோர்னியாவில் அவர் ஆற்றிய இரு சொற்பொழிவுகள் இக்கருத்தைக் கூறுகின்றன. அவை:

i. The ways to the realisation of a universal religion
(உலகளாவிய ஒரு சமயத்தை மெய்யாகக் காண்பதற்குரிய வழிமுறைகள்)

ii. The ideals of universal religion
*(உலகளாவிய சமயத்தின் கொள்கைகள்)*

முதலாவது பேச்சு - கடந்த கால மதங்கள் அனைத்தையும் ஒப்புக் கொள்வதுடன் வழிபடவும் செய்கிறேன். அச்சமயங்கள் எந்த வடிவத்தில் இறைவனை வணங்குகின்றனவோ அதே வடிவத்தில் நானும் வணங்குகின்றேன். மசூதி, கிறிஸ்தவ தேவாலயம், பௌத்தபள்ளி, இந்துக்கோயில் எல்லாவற்றுக்கும் சென்று அவ்வாறே வழிபடுவதுடன், எதிர்காலத்தில் தோன்றப் போகும் சமயங்களுக்கும், என் இதய வாசலைத் திறந்து வைத்திருக்கிறேன்.

கடவுளுடைய புத்தகம் ஞானக் காட்சிகளை வெளிப்படுத்தும் அற்புதமான புத்தகம், வேதம், பைபிள், திருக்குரான் முதலிய அனைத்துப் புத்தகங்களின் பல பக்கங்கள் - எண்ணிறந்த பல பக்கங்கள் இன்னும் திறந்து வைக்கப்படாமல் இருக்கின்றன. அவை அனைத்தையும் திறந்து வைக்க நான் விரும்புகிறேன்.

உலகளாவிய ஒரு பொதுச் சமயத்தை விரும்பி நிற்போர் எவ்வாறு சிந்திக்க வேண்டும்? எனது சமயம், உனது சமயம் என்று ஊறிப்போன எண்ணங்களை விட்டு, முற்று முழுதான சமரச நோக்குடன் சிந்திக்க வேண்டும் என சுவாமிஜீ கூறுகிறார்.

(கலைச்செல்வி பொன்விழாமலர், ஆசிரியர் கலாசாலை,
மட்டக்களப்பு)



# சுவாமி விவேகானந்தரின் உலகப் பொதுமறைக் கருத்துகள்

"அனைத்து உள்ளங்களும்" ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமயத்தைக் காண விரும்புகிறேன். அது உண்மைத் தத்துவங்களாக, சமமான உணர்வுடையதாக சமமான அனுபூதியுடையதாக சமமான செயலூக்கம் உடையதாக அமைய வேண்டும். கடவுள் அருள் இத்தகைய சிந்தனையையுடைய மனிதர்களை உருவாக்கட்டும். அவர்கள் உள்ளங்களில், தத்துவம், அனுபூதி உணர்வு, உழைப்பு என்பவை மூலக் கூறுகளாக அமையட்டும் - இதுவே "எனது பரிபூரண மனிதன் பற்றிய லட்சியம்."

இவ்வாறு ஒரு முறை சுவாமி விவேகானந்தர் உரைத்தார்.

இத்தகைய ஒரு எண்ணம் சுவாமிகளின் இதயத்தில் தோன்றுவதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம்? அவை-

(அ) சமயங்களுக்குள்ளே இருக்கும் அடிப்படை ஒற்றுமை.

(ஆ) அனுஷ்டான பேதங்களால் ஏற்படும் வன்முறைகள், யுத்தங்கள்

(இ) மத பேதங்களால், சிதைந்து போகும் மனித நேயம்.

இவை மட்டுமல்ல, அனுஷ்டானங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அடிப்படையான தத்துவங்கள் ஒன்றாக இருந்தால், மத பேதங்களுக்கு இடமிருக்காது என அவர் கருதினார். இப்போதும் மதங்களுக்கிடையேயான அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றுதான். ஆனால் அதைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் இன்னும் மனிதர்களிடம் ஏற்படவில்லை. அந்தப் புரிந்துணர்வை மக்களிடம் ஏற்படுத்தினால், உலகத்துக்குப் பொதுவான ஒரு சமயம் உதயமாகலாம் என அவர் நம்பினார். அதன் காரணமாகவே அவர் இத்தகைய சிந்தனைகளை வெளியிட்டார் எனலாம்.

**வேதாந்தக் கொள்கைகள் :**

சுவாமிஜி ஏனைய சமயங்களை மதிக்கவும் அவற்றிடையே ஒரு பொதுத் தன்மையைக் காணவும் காரணமாக அமைந்தது, வேதாந்தக் கொள்கைகள்

பற்றிய அவரது தெளிவாகும். வேதாந்தக் கொள்கைகள் பௌதீக அடிப்படையில் அமைந்தவை. இவை அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்பதற்குப் பின்வரும் காரணங்களை அவர் கூறுகிறார்.

* இந்து மதம் தவிர்ந்த ஏனைய மதங்கள் யாவும், அவற்றை நிறுவியவர்கள் பெயரால், அவர்களுடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவையாக அமைந்துள்ளன.

* மக்களை ஒன்றுபடுத்தி ஒரு சமயத்தின் கீழ் கொண்டு வருவதானால், அச்சமயம் அனுஷ்டானங்களை அடிப்படையாகக் கொள்ளாது, கொள்கைகள், கோட்பாடுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

* வேதாந்தம் என்பது இந்து சமயமல்ல, அது ஒரு தத்துவம். அது உலகெலாம் ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அக்கொள்கைகள் தற்கால ஆய்வாளர்கள் காணும் விஞ்ஞான தத்துவங்களை ஒத்திருக்கின்றன.

*(தமிழகத்தில் சுவாமி விவேகானந்தர், பெ.சு. மணி, பக்.19)*

மக்களை ஒரு மதத்தின் மூலம், ஒன்றுபடுத்துவதானால் அம்மதம், தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு அமைய வேண்டும். தனிப்பட்ட மனித வாழ்வை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது.

பெரியோரைப் போற்றலாம். அவதார புருஷர்களை இஷ்ட தெய்வமாகக் கொள்ளலாம். ஆனால் உண்மையான அடிப்படைத் தத்துவங்களை விட்டு விலகக் கூடாது.

புறவுலக ஆராய்ச்சி செய்து தற்கால விஞ்ஞானம் கூறும் உண்மைகள், வேதாந்த உண்மைகளை முற்றும் ஒத்திருக்கின்றன. வேதாந்தம் எல்லோருக்கும் ஏற்றதாக இருப்பதற்குக் காரணம் அது புத்தி பூர்வமாக இருப்பதாகும். வேதாந்தம் கூறும் இரு தத்துவங்கள் வருமாறு :

* மதங்கள் அனைத்தும் அடிப்படையில் ஒன்று.
* உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும், ஒரு மூலப் பொருளின் வெவ்வேறு தோற்றங்களே.

இதனையே இந்தியாவில் தோன்றிய மகாபுருஷர்கள் உண்மை ஒன்றே. மக்கள் அதைப் பலவாறாகப் பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளனர். இந்த வேதாந்தக் கொள்கைகளின் சாரம் உபநிடதங்களில் அடக்கமாகி உள்ளன.

## உபநிடத விளக்கம்

மேல் நாட்டவர்கள் அறிவுக்குப் பொருத்தமானவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். தத்துவ வாதங்களையும், ஒழுக்க நெறிகளையும், தகுந்த காரணத்தோடுதான் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு மகான் எவ்வளவு பெருமைக்குரியவராக இருந்தாலும் அவர் சொல்கிறார் என்பதற்காக, அவர் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர் கூற்று தர்க்க ரீதியாக உண்மையின் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். ஏன், எதற்காக என்ற கேள்விகளின் மூலமே உண்மையைத் தரிசிக்க முடியும். எனவே, உலகில் உள்ள எல்லாப் பொருட்களும், ஒரு மூலப் பொருளின் வெவ்வேறு தோற்றங்களே என்பதை விளங்கிக் கொள்வதற்கும், அனுபவவாயிலாக உணர்வதற்கும், வேதாந்தமே ஏற்றதாக உள்ளது.

தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்பி, ஆன்மீகத்தின் மகிமையை உணரச் செய்வதற்கு அத்வைத வேதாந்தக் கோட்பாடுகள் அவசியமாகின்றன. அது எந்த மதப் பிரிவையும் சாராதது. வேதாந்தத்தைப் புரிந்து கொண்ட எல்லா தத்துவஞானிகளும் ஆன்மாவின் தூய்மையையும் ஆன்மீகத்தின் சக்தியையும் பூரணத்துவத்தையும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சாதாரண மனிதர்களுக்கு இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதபடி மனத்தின் அழுக்குகள் - காம, குரோத லோபமோக மத, மாற்சரியம் என்னும் திரைகள் அதை மறைத்திருக்கின்றன. மக்களில் எவ்வித பேதமுமின்றி, உயர்ந்தவர், தாழ்ந்தவர், வலியார், மெலியார், அறிஞன், மூடன் என்ற பேதமின்றி அனைவருள்ளும் நிறைந்திருப்பது ஆத்ம சொரூபம்.

தியானப் பயிற்சி மூலம் அதை உணரவும், மக்களை வழிநடத்தவும் முடியும். இவ்வாறு புனித நிலை அடைந்த மகான்கள் பலர் சாதி வேறுபாடின்றி அனுபூதிமான்களாக விளங்கியதை வரலாற்றில் நாம் பார்க்கிறோம்.

“பகவத் கீதை”யில் வரும் இரண்டு சுலோகங்கள் இதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

- எல்லா உயிர்களிடத்திலும் பரமாத்மன் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்பவனும்,
- அழியும் பொருட்களிலும் அழியாத பரம் பொருள் இருப்பதை காண்பவனும் தான்

உண்மையை உள்ளபடி காண்கிறான்.

வேதங்களின் சாரம் உபநிஷத்துகளில் பொதிந்துள்ளது. இவை அழிவற்ற உண்மைகள். இயற்கை நியதியோடு இயைந்த உண்மைகள்.

**விக்கிரக ஆராதனை**

விக்கிரக ஆராதனை செய்வது தவறானது என்பது சில மதங்களின் கொள்கையாகும். ஆழ்ந்து சிந்தித்தால் அதில் எவ்விதத் தவறும் இல்லை என்பது தெரியவரும். இறைவனை எந்த வடிவிலும் காணலாம். உருவத்திலும், உருவம் இல்லாமலும், அரு உருவமாகவும் காணலாம். இதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. மேலும், மனதை ஒருமுகப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு உருவம் அவசியமாகிறது.

சுவாமி விவேகானந்தரும் ஆரம்பத்தில் விக்கிரக வழிபாடு தவறானது என்றே கருதினார். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் தொடர்பு ஏற்பட்டபின் அக்கொள்கையை மாற்றிக் கொண்டார். அவதார புருஷரான ஸ்ரீபரமஹம்சர் தாமே விக்கிரக வழிபாட்டில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அறிந்த பின் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டார்.

இப்பூவுலகவாசிகளின் வாழ்வு பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் அறிவோம். சூரியன் இல்லாவிட்டால் உலகமே இல்லை. நாம் உண்ணும் உணவு, நாம் பெறும் சக்தி, நீர், நெருப்பு முதலிய சகலமும் சூரியனிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன.

இவ்வாறே இவ்வுலகில் உள்ள சகல மூலப்பொருட்களும் ஐந்து முக்கியக் கூறுகளில் அடங்குகின்றன. நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி ஆகிய அந்த ஐந்து பொருட்களையும் உருவகப்படுத்தி வணங்குவதில் என்ன தவறு? ஒரு நாமம் ஓருருவம் இல்லாத இறைவனை ஆயிரம் திருநாமம் கொண்டு போற்றுவதிலும், பக்தனுக்குப் பிடித்த உருவத்தில் வழிபடுவதிலும் என்ன தவறு? பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தி, முருகன், கணபதி, லட்சுமி, சரஸ்வதி என்பதெல்லாம் ஒரே பொருளின் பல்வேறு உருவங்களே என்பதை விளங்கிக் கொண்டால், உருவ வழிபாடு எவ்வகையிலும் தவறாகாது என்பதை உணர்ந்து கொள்ளலாம். மேலும், வேதாந்தக் கொள்கைகளைப் புரிந்து கொண்டால் ஒவ்வொருவரது மனப் பக்குவத்திற்கேற்ப வழிபாடுகள் அமைகின்றன

என்பதைப் புரிந்து கொள்ளலாம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஆனந்த பூர்த்தியாகி நிற்கும் இறைவன் வெளியில் இல்லை. அவன் நமக்குள்ளேயே இருக்கிறான். நாமே இறைவன்.

'தத்துவமஸி' (நீயே அது) அஹம் பிரஹ்மாஸ்மி (நான் பிரமனாக இருக்கிறேன்) என்ற வேதாந்தக் கோட்பாடுகள், பைபிளில் சொல்லப்படும், "இறைவனது ராஜ்ஜியம் உனக்குள்ளே இருக்கிறது" மற்றும் "நானும் எனது தேவனும் ஒருவரே" எனும் கோட்பாடுகளுடன் ஒத்துப்போவதைக் காணலாம்.

இவ்வாறு எங்கும் நிறைந்த பரம்பொருளாக இறைவனைக் கண்ட அதே இந்து சமயத்தில்தான் உருவ வழிபாடும் உள்ளது என்றால் அதற்கொரு அர்த்தம் இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களின் மனப்பக்குவம் வெவ்வேறு நிலைகளில் உள்ளது. யாருக்கு, எத்தகைய ஆராதனை முறை அவசியமோ அதை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தாய் ஒருத்தி தன் குழந்தைகளின் ஜீரண சக்திக்கேற்ப, வெவ்வேறு ஆகாரவகைகளைக் கொடுப்பது போல, வெவ்வேறு ஆராதனை முறைகள், பாமர மக்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றன என்பது சுவாமி விவேகானந்தரின் கூற்று.

ஒரு விக்கிரகத்தை நாம் வழிபடும்போது என்ன நடக்கிறது? கண் விக்கிரகத்தைப் பார்க்கிறதே தவிர பிரார்த்தனை மனதிலேதான் நடக்கிறது. நமது உள்ளத்தில் நிறைந்திருக்கும் இறைவனையே நாம்

வழிபடுகிறோம். ஒரு நாட்டின் இறைமைக்கு அதன் கொடி ஒரு குறியீடு ஆவது போல, ஒரு நாட்டின் மன்னனின் உருவம், வெறும் படத்தில் இருந்தாலும், அது அந்த மன்னனை நினைவூட்டுவது போல் விக்கிரகங்கள் இறைவனை நமக்கு நினைவூட்டும் குறியீடுகளாக அமைகின்றன.

## லௌகீக வாழ்க்கையில் கர்மாவே சிறந்த மார்க்கம்

ஒரு காலத்தில் யாகங்களும், கடும் தவங்களும் வழிபாட்டு முறைகளாக அமைந்திருந்தன. கிருத, திரேத, துவாபர யுகங்கள் முடிந்து இன்று கலியுகம் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கலியுகத்தில் கர்மா (அனுஷ்டானங்களே) சிறந்த வழிபாட்டு முறையாக அமைகிறது. சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார் :

"யாகங்களும், கடுந் தவங்களும் இக்காலத்துக்கு ஏற்றவையல்ல. வாழ்நாள் மிகவும் குறுகியது. பெரும் காரியம் ஒன்றின் பொருட்டு அதனைத் தியாகம் செய்துவிட்டு, பணிபுரிவீர்களாக! உயிரே போவதானாலும் கூட, உங்கள் பணி நேர்மையாக இருக்கட்டும். இதற்காக, அறிவாற்றல் மிக்க, தூய்மைமிக்க, ஒரு நூறு இளைஞர்கள் முன் வருவார்களானால் இந்த உலகையே மாற்றி அமைக்கலாம். இன்று எமது சமுதாயம் உள்ள நிலையில், அத்தகைய கடமை உணர்ச்சிமிக்க வீர இளைஞர்களும், அவர்களது சேவையுமே இந்த நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.

நம்மிடத்து உள்ளதை, பிறருக்கு எடுத்து வழங்கும் சீரிய செயலை மேற்கொள்ள வேண்டும். இச்செயல், இக்காலத்துக்கேற்ற சேவையும், தர்மமுமாகிறது.

தானங்களுள் உயர்ந்தது ஆத்மதானம்; அதற்கு அடுத்தது அபரவித்தையைக் கொடுக்கும் வித்தியாதானம். அதற்கு அடுத்தது தக்க தருணத்தில் ஒரு உயிரைக் காப்பாற்றும் ஜீவதானம்; அதற்கு அடுத்ததாகவும் இறுதியானதாகவுமே அன்னதானம் அமைகிறது என்பது சுவாமிஜியின் கூற்று.

எனவே ஆத்மதானமே, எல்லாத் தானங்களிலும், மிகச் சிறந்த தானம் ஆகிறது.

சமய சமரசத்தின் அடி நாதமாக ஆதார சுருதியாக சுவாமிஜி கண்டது மனித நேயமே. அதனால் மனித குல சேவையை விடச் சிறந்த பிரார்த்தனை வேறு இல்லை என, மிக அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக அவர் கூறுகிறார்.

நமது பிரார்த்தனையில், இறைவனை நம் அனைவருக்கும் தந்தையாகக் காண்கிறோம். அவ்வாறாயின் தினசரி வாழ்க்கையில் நாம் காணும் ஒவ்வொரு மனிதனையும் நமது சகோதரனாக நடத்தாமல் போனால், இறைவனைத் தந்தையாகக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று சுவாமிஜி கேட்பதில் நிறைய அர்த்தம் இருக்கிறது.

தொகுத்து நோக்கினால் சுவாமி விவேகானந்தரின் உலகப் பொதுமறைக் கொள்கை பின்வருமாறு அமைகிறது:

1. அனைத்து சமயங்களும் உண்மை. அவை அனைத்தும் ஒரே இறைவனையே காண்கின்றன.

2. இந்த ஏகத்துவத்தைப் புரிந்து கொண்டால், மத மாற்றத்துக்கும், மத பேதங்களுக்கும் அவசியம் இல்லை.

3. வேதாந்தக் கொள்கைகளின் அடிப்படையில் தத்துவங்களை மட்டும் கொண்ட ஒரு உலகப் பொது சமயத்தை உருவாக்க முடியுமானால், சமய வெறியினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கலாம்.

4. இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள், ஒவ்வொரு மனிதனும் ஆத்ம சொரூபி. எனவே இறைவனும் மனிதனுள் இருக்கும் ஆத்மனும் ஒன்றே.

5. இறைவனைத் தந்தையாகக் கொண்டால் உலகில் உள்ள அனைவரும் சகோதரர்களாகின்றனர். மனித நேயமே இந்தச் சகோதரத்துவத்தை வளர்க்க முடியும்.

(கொழும்பு விவேகானந்த சபை, சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு விழா மலர், 1998)



# அன்னை சாரதாதேவியார்

உலகில் புகழ் பெற்ற பல பெண்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆன்மீகத் துறையைப் பொறுத்தவரை அன்னிபெசன்ட் அம்மையார், நிவேதிதா, அன்னை தெரேசா, அரவிந்த் ஆசிரமத்தின் அன்னை போன்றவர்களைப் பற்றியெல்லாம் உலகம் நன்கு அறியும்.

ஆனால் இவர்கள் எல்லோரையும் விட முக்கியத்துவம் பெற்ற ஒரு பெண்மணி இந்தியாவின் ஞான ஒளியாக ஆன்மீகத் தாயாக வாழ்ந்திருக்கிறார். அவரைப் பற்றி உலகம் அறிந்தது மிகவும் சொற்பமே. அவர் யார்? ஒவ்வொரு இந்துப் பெண்மணியின் இதயத்திலும் அன்னை பராசக்தியாகக் குடியிருக்க வேண்டிய அந்தப் பெண்மணி யார்? அவர்தான் அன்னை சாரதாதேவி.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்தவர்களுக்கு, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவியார் ஆகியோரைப் பற்றி நன்கு தெரியும்.

இறைவனே மனித உருவெடுத்து வந்தவர்தான் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். இதை அவரே தன் வாயால் சுவாமி விவேகானந்தருக்குக் கூறியிருக்கிறார்.

சுவாமி விவேகானந்தருக்கு பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரையிட்டு ஒரு சந்தேகம் மனதில் தோன்றியது. "இப்போதும் இவர்தான் இறைவன் என்பதைக் கூறுவாரானால் அதை நான் ஏற்றுக் கொள்ளுவேன்" என்று விவேகானந்தர் மனதில் நினைக்க உடனே ராமகிருஷ்ணர் "ராமனாகவும் கிருஷ்ணனாகவும் யார் பூமியில் அவதாரம் செய்தார்களோ அவரே இன்று ராமகிருஷ்ணராகப் பூமியில் அவதரித்துள்ளார்" எனக் கூறினார்.

அன்று முதல் விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரை இறைவனின் அவதாரமாக ஏற்றுக் கொண்டார்.

## தெய்வத்தின் தெய்வம்

பகவான் ஏன் ராமகிருஷ்ணராகப் பூமியில் அவதரித்தார்? உலக மக்களுக்கு உடனடியாகச் சொல்ல வேண்டிய முக்கியமான ஒரு செய்தி அவரிடமிருந்தது. அதாவது உலகத்துச் சமயங்களெல்லாம் ஒன்று, அவை நாடிச் செல்லும் இறைவனும் ஒன்று. எனவே சமயத்தின் பேரால் வேறுபாடு கற்பிப்பதும் சண்டை சச்சரவு செய்வதும் அறியாமை.

இந்தச் செய்தியை ராமகிருஷ்ணர் நேரே உலகமக்களுக்குச் சொல்லமுடியாத சூழ்நிலை இருந்தது.

அதற்காகவே சுவாமி விவேகானந்தர் அவதாரம் செய்தார். சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டிலும் அதைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் சூறாவளிப் பயணம் செய்தும் அவர் பகவான் ராமகிருஷ்ணரின் இந்தச் செய்தியை எடுத்துச் சொன்னார். உலக மக்கள் மிகுந்த தாகத்துடன் அச்செய்தியை ஏற்று தங்களைத் திருத்திக் கொண்டனர்.

அதுமட்டுமல்ல. இந்தியப் பெண்களே பெண்மையின் பூரணத்துவத்தைப் பெற்றவர்கள். அவர்களே உலகப் பெண்களுக்கெல்லாம் வழிகாட்டி என்று எடுத்துக் கூறினார். அதையும் உலகமக்கள் ஏற்றுக் கொண்டனர்.

இவ்வாறு உலக மக்களுக்கு ஆன்மீகத்தைப் போதித்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் அன்னை பராசக்தியாக ஒரு பெண்ணைப் போற்றி வணங்கினார்கள். அவர்தான் நமது அன்னை சாரதாதேவியார் என்றால் இதற்கும் மேலாக அவரைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

**அன்னை பராசக்தி**

இந்த அன்னை சாரதாதேவியார் உலகப் புகழ்பெற்ற பெண்மணிகளைப் போல் படித்துப் பட்டம் பெற்றவர் அல்ல. உயர்பதவிகளை வகித்துப் புகழ் பெற்றவரும் அல்ல.

கல்கத்தாவிலே ஒரு குக்கிராமத்திலே பிறந்த, ஒன்றும் அறியாத ஒரு பட்டிக்காட்டுப் பெண். இந்தப்

பட்டிக்காட்டுப் பெண் சிறுமியாக இருந்தபோது இறைவனின் அவதாரமான ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவரைத் தேடிப் பெற்றார். அவர்களுக்குப் பால்ய விவாகம் நடைபெற்றது. பாமரர் கண்களுக்கு அது திருமணம். ஆனால் உண்மையில் அது சிவமும் சக்தியும் இணைந்த ஒரு நிகழ்வு. காலக்கிரமத்தில் அந்த உண்மை வெளிப்பட்டது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரே அன்னை சாரதாவை சுவாமி பீடத்தில் ஏற்றிவைத்துப் பூசை செய்திருக்கிறார். ஷோடோபசாரம் செய்திருக்கிறார். அதுமட்டுமல்ல, சுவாமி விவேகானந்தர் ஐரோப்பிய நாடுகளில் ஆத்மீகப் பயணம் மேற்கொண்டிருந்தபோது நிவேதிதா சுவாமி பிரம்மானந்தர் (ராக்கால்) சாரதானந்தர் முதலியோருக்கு எழுதிய கடிதங்கள் அன்னை சாரதா தேவியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றைப் படிக்கும்போது சாரதாதேவியாரை விவேகானந்தர் அன்னை பராசக்தியாகவே பாவனை செய்தார் என்பது தெளிவாகிறது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் மறைவுக்குப் பின் அன்னை சாரதாவின் ஆத்மீக சக்தியே அவரது சீடர்களையும் பக்தர்களையும் வழிநடாத்தி வந்துள்ளதென்றால் அது மிகையாகாது.

### கிராமத்துச் சிறுமி

அன்னை சாரதாதேவியார் உலகுக்களித்த செய்தியை விவரிப்பதற்கு முன்னர், அவருடைய வாழ்க்கை பற்றிச் சுருக்கமாக அறிந்து கொள்ள வேண்டும்.

கல்கத்தாவுக்கு மேற்கே 60 மைல் தொலைவில் உள்ள பங்குரா மாவட்டத்தில் ஜயராம்பட்டி என்னும் ஒரு குக்கிராமம் உள்ளது. சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் நமது பக்கத்துக் கிராமங்கள் எப்படி இருந்தன என்று ஒரு கணம் கற்பனை செய்து பாருங்கள். எங்கும் நிலத்தோடு ஒட்டிய ஓலைக்குடிசைகள் - களிமண் குடிசைகள்.

இவ்வாறுதான் ஜயராம்பட்டிக் கிராமம் அன்று இருந்தது. கல்கத்தாவிலிருந்து அக்கிராமத்துக்குச் செல்வதாயிருந்தால் அந்த நாளில் இரண்டு நாள் பயணம் மேற்கொள்ள வேண்டுமாம். அவருடைய தந்தை பெயர் ராமச்சந்திரன். ராமச்சந்திர முகர்ஜி என்று அழைப்பார்கள். முகர்ஜி என்பது குடும்பப் பெயர். தாயார் பெயர் சியாமசுந்தரி தேவி. இது ஒரு ஏழைப்பிராமணக் குடும்பம். ஆனால் தெய்வத்தின் அருள் பெற்ற தெய்வீகக் குடும்பம்.

சாரதாதேவி இவர்களுக்கு முதற்குழந்தையாக 1853ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் தேதி பிறந்தார். அந்தக் காலத்தில் வங்காளத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு பெயர்கள் வைப்பது வழக்கமாம். அதன்படி சாரதாதேவியின் ஜாதகப் பெயர் 'தாகூர்மணி' என்று வைக்கப்பட்டது. கூப்பிடும் பெயர் 'ஷேமங்கரி' என்று இருந்தது. சாரதாதேவியாரின் மாமியாருக்கு சாரதாதேவி என்று ஒரு குழந்தை இருந்தது. இது இறந்ததும் அந்தச் சோகத்தை மறைக்க இக்குழந்தைக்கு சாரததேவி என்று பெயர் வைத்தார்களாம்.

பிறக்கும்போது இவ்வாறு திருவுடையவராகப் பிறந்திருக்கிறார்.

## படிப்புக்குள் அடங்காத பண்புகள்

அந்தக் காலத்தில் பெண்கள் படிப்பது கூடாது என்று கருதப்பட்டது. அதனால்தானோ என்னவோ அவரது கல்வி வெறும் அரிச்சுவடியுடன் நின்று விட்டது. பிற்காலத்தில் அன்னையார் தட்சிணேஸ்வரத்தில் வாழ்ந்தபோதுதான் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. குருதேவரின் சிகிச்சைக்காக சியாம்புக்கூர் சென்று விட்டபின் அவரது பக்தர்களில் ஒருவரான பவமுகர்ஜியின் வீட்டிலிருந்து ஒரு பெண் அடிக்கடி வந்து அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்ததாக அன்னையார் கூறுகிறார்.

அன்னையார் புத்தகக் கல்வியைப் பெறாவிட்டாலும் மக்களை வழிநடத்தும் அளவு ஞானக் கல்வியைப் பெற்றிருந்தார் என்பதை நாம் இப்போது காண்கிறோம். சிறுவயதில் அவர் கேட்ட சொற்பொழிவுகள் மூலமும், தெருக்கூத்து நாடகங்கள் மூலமும், பல சுலோகங்களையும் பாடல்களையும் கேட்டு அவரது அறிவு வளர்ந்தது.

இதில் ஒன்றும் புதுமையில்லை. இன்றும் கூட நமது கிராமங்களில் உள்ள பெண்கள் கோயில் நிகழ்ச்சிகளையும் கூத்துகளையும் பார்த்தே பண்புள்ளவர்களாக வளர்ந்திருக்கிறார்கள். அவர்கள்

பட்டினத்தில் உள்ள பெண்களைவிட அன்பு, தியாகம், பாசம், பதிபக்தி முதலிய நற்பண்புகளில் மேலோங்கி இருப்பதை இன்று நாம் பார்க்கிறோமல்லவா?

இந்தக் குக்கிராமத்துப் பெண்ணுக்கு, அன்றைய சமூகத்தவர்களால் "பைத்தியம்" என்று கருதப்பட்ட ராமகிருஷ்ணன் மணமகனாக வாய்க்கிறார். 1859ஆம் ஆண்டு மே மாதத்தில் இத்திருமணம் நடைபெற்றது. ராமகிருஷ்ணர் 1836ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிறந்தவர். கிட்டத்தட்ட 17 வயது வித்தியாசம் திருமணத்தின் போது ராமகிருஷ்ணருக்கு 23 வயது, சாரதாவுக்கு 6 வயது. ஆனாலும் என்ன இது தெய்வத் திருவருளால் ஏற்பட்ட சங்கமம் அல்லவா?

## அன்னை அளித்த செய்தி

சாரதாதேவியார் உலகுக்கு விட்டுச் சென்ற செய்தி என்ன? அது பகவான் ராமகிருஷ்ணரின் வாயிலிருந்து வெளிப்படுகிறது. அதைப் படிக்கும்போது இறைவன் காரைக்கால் அம்மையாரைப் பார்த்து "அம்மையே" என்று அழைத்தமை நினைவுக்கு வருகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியது இதுதான். "இறைவனின் தாய்மை என்னும் அன்புத் தத்துவத்தை உலகிற்குப் போதிக்க அவதரித்தவர் அன்னை" - இவ்வாறுதான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்னை சாரதாவின் பிறவிநோக்கம் பற்றிக் கூறுகிறார். அதை சாரதாதேவியார் எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை அவரது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பார்க்கிறோம்.

பகவான் ராமகிருஷ்ணர் சாரதாவிடம் கண்ட "தாய்மை" பற்றி சுவாமி விவேகானந்தரின் மேலைநாட்டு சிஷ்யை சகோதரி நிவேதிதா என்ன கூறுகிறார் தெரியுமா? "என் இன்னுயிர் அன்னையே! உண்மையில் தாங்கள் இறைவனின் வியத்தகு படைப்பாகும். உலகிற்கென பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அளித்த அன்புக் கிண்ணம்!" இவ்வாறு நிவேதிதா அழைக்கிறார்.

ஏனெனில் நிவேதிதா அன்னை சாரதாவின் ஆசிரமத்தில் பல வருடங்களாக அவருடன் வாழ்ந்து அவரது ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாக அவதானித்தவர். அவருடைய பாதாரவிந்தங்களில் அமர்ந்து இந்தியப் பெண்களின் மகிமையையும், மகத்துவத்தையும் அறிந்தவர். அமெரிக்க நாட்டுப் படிப்பறிவுமிக்க பெண்ணான நிவேதிதா, பட்டிக்காட்டுப் பெண்ணான அன்னைசாரதாவில் தெய்வத் தன்மையைக் கண்டார் என்றால் - தெய்வத்தின் தாய்மையைக் கண்டார் என்றால், அன்னையின் தெய்வீகத் தாய்மைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை.

### கீழைத்தேயப் பண்பு

இவ்விடத்தில் கீழைத்தேய, மேலைத்தேய பண்பாடு பற்றிய ஒரு விளக்கத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அன்று மட்டுமல்ல இன்றும் கூட மேல் நாட்டவரைப் பார்த்து நம்மவர்கள் வேஷம் போடும் வழக்கம் தீவிரமாக உள்ளது. அதிலும்

பெண்கள் இதில் முன்னணி வகிக்கின்றனர் என்பதை நாம் அனைவரும் அறிவோம். மேல் நாட்டவரின் உடை, நடை, பாவனை ஆகியவற்றைக் கொப்பியடித்து விட்டால், அது உயர்ந்த நாகரிகம் என்று கொள்ளும் 'மூடநம்பிக்கை' இன்றும் நம்மிடையே உலவுகிறது. அந்தவகையில் அண்மையில் மேல்நாட்டுப் பெண்களிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கொள்கை "பெண்ணிலை வாதம்" என்பதாகும்.

உண்மையில் உலகத்துக்கே பெண்ணிலை வாதத்தைப் போதித்தவர்கள் நமது இந்துப் பெண்கள். உலகிலேயே மிக உன்னதமான பெண்மை, நமது இந்துப் பெண்மை. இதை ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பே உலகப் பெண்களுக்கு எடுத்துக் கூறி அதை ஏற்றுக் கொள்ளச் செய்தவர் நமது சுவாமி விவேகானந்தர். பெண்மை என்பது வெறும் வடிவம் அல்ல - அது தாய்மை - தோழமை - தியாகம் - பண்பு - பாசம் என்ற பல்வேறு விழுமியங்களின் உருவம் - பல்வேறு பண்பாடுகளின் சங்கமம்.

தாயாக, தாதியாக, தோழனாக, ஆசானாக, அமைச்சனாக குடும்பத் தலைவனுடன் இணைந்து, தாம்பத்தியத்தின் புனிதத் தன்மையைக் கட்டிக்காப்பவள் இன்றும் நமது இந்துப் பெண்தான். அத்தகைய இந்துப் பெண்களில் ஒருத்தியாக அனைத்துப் பெண்களுக்கும் தாயாக - அனைத்து உயிர்களுக்கும் தெய்வீகத் தாயாக வாழ்ந்தவர் நமது அன்னை சாரதாதேவியார் என்றால் அது மிகையாகாது.

**இறைவனின் அவதாரமே தாய்**

இறைவன் தான் படைத்த ஒவ்வொரு உயிரிலும் அருகில் இருக்க வேண்டும் என்பதற்காகவே தாயாக அவதாரம் செய்கிறான். இதை மூடநம்பிக்கை என்று இன்றைய விஞ்ஞானம் கூறலாம். ஆனால் உலகின் தொன்மை வணக்கமான தாய்வணக்கம் இதை நிரூபிக்கிறது. "தாயினும் நல்ல தலைவர்" என்றும் "தாயின் நேர் இரங்கும் தலைவரே" என்று நமது சமயக் குரவர்கள் இந்த உண்மையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையில் இறைவனைத்தான் தாய்க்கு ஒப்பிடுகிறார்களேயன்றி தாயை இறைவனுக்கு ஒப்பிடவில்லை. இது ஒரு முக்கியமான செய்தி.

அந்த வகையிலும் அன்னை சாரதாதேவியின் "தாய்மை" முக்கியத்துவம் பெறுகிறது. அன்னை, தன்னைப் பற்றிக் கூறும்போது "கடவுள் தாய்மை எப்படிப்பட்டது என்பதை செயல் முறையில் காட்டுவதற்காகவே ஸ்ரீராமகிருஷ்ணர் தன்னை உலகில் விட்டுச் சென்றிருக்கிறார்" என்று பலமுறை கூறியிருக்கிறார் (அன்னை ஸ்ரீசாரதாதேவியர் வரலாறு, பக். 362).

அன்னையார் தனது ஆசிரம வாழ்க்கையின் போது இதை ஒவ்வொரு கட்டத்திலும் நிரூபணம் செய்தார். தீட்சை பெறுவதற்காக, ஆஸ்ரமத்திற்கு வரும் பக்தர்களில் தீயவர்களை, பிரம்மானந்தர், அன்னையிடம் அனுப்பி விடுவார். அன்னையாரோ அவர்களிடம் எவ்வித வேறுபாடும் காட்டாது அனைவருக்கும் தீட்சை

கொடுத்ததுடன் அதன் விளைவாகத் தன் உடல் மேல் குவிந்த கர்ம வேதனைகளையும் முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

அவ்வாறே பாவிகள் தனது பாதங்களைத் தொடுவதன் மூலம் தன்னிடம் சேரும் பாவச்சுமைகளை, முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொண்டார்.

**அன்னையின் பணிகள்**

அன்னையார் படிப்பறிவற்றிருந்த போதும் தன்னுடைய ஆத்மீக சக்தியால் ராமகிருஷ்ணருக்கு உதவியாக ஆசிரமத்தில் பல பொறுப்புகளை மேற்கொண்டார். ஆசிரமத்திற்கு வருபவர்களுக்கும், அங்கு தங்கியிருப்பவர்களுக்கும் உணவு அளிக்கும் கடமை சாரதாதேவியாரைச் சார்ந்திருந்தது. அவருக்கு உதவியாகச் சில சீடர்கள் இருந்தபோதும், இந்த வேலைகளில் எவ்வித குறைவும் ஏற்படாத வகையில் அன்னையாரின் நிர்வாகம் இருந்தது.

1886 ஆகஸ்ட் 16ஆம் தேதி ஸ்ரீராமகிருஷ்ணர் மறைந்தார். அப்போது சாரதா தேவியாருக்கு 33 வயது. அதுவரை காசிப்பூர் என்னுமிடத்தில் தங்கியிருந்த அன்னையும்-சீடர்களும் பலராம் போஸ் என்பவரின் வீட்டுக்குச் சென்றனர். பின் அன்னையார் வட இந்தியாவின் பல புண்ணியதலங்களுக்கும் யாத்திரை செய்தார். அவருடன் முக்கிய சீடர்களான யோகானந்தர், அபேதானந்தர், அற்புதானந்தர், லட்சுமி, கோலாப்மா ஆகியோரும் சென்றனர். இப்பயணத்தின் போது

பிருந்தாவனம் என்னும் இடத்தில் ஓராண்டைக் கழித்தனர். புனித யாத்திரையின் பின் அனைவரும் 1887இல் கல்கத்தா திரும்பினர்.

1888 முதல் அவர் இறக்கும் வரை (1920) 33 ஆண்டுகள், கல்கத்தாவில் 6 மாதம் அவர் பிறந்த ஜெயராம்பாடியில் 6 மாதம் என அவர் காலம் கழிந்தது. 1893இல் அவர் "பஞ்சதவம்" என்னும் கடுமையான தவத்தை மேற்கொண்டார். இந்தக் காலத்தில்தான் அன்னையின் ஆத்மீக வளர்ச்சி உச்ச நிலையடைந்தது. உலக மக்களிடம் ஆத்மீக விழிப்பை ஏற்படுத்தும் குரு தேவரின் பணியைத் தொடர்ந்து செய்வதற்கான தகுதியை அவர் இந்தக் காலத்தில் தான் பெற்றார்.

## ஆன்மீக வளர்ச்சி

கல்கத்தாவில் அன்னையாருக்கு யோகின்மா என்னும் சிஷ்யை துணையாக இருந்தார். அவர் எப்போதும் அன்னையின் கூடவே இருந்தார். இக்காலத்தில் அன்னையார் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போலவே அடிக்கடி சமாதியில் மூழ்கிப்போனார். தான் வேறு, ராமகிருஷ்ணர் வேறு இல்லை, இருவரும் ஒருவரே என்பதை அவர் உணர்ந்தார். அதை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தினார். சுருங்கச் சொன்னால் ஸ்ரீராமகிருஷ்ணர் விட்ட இடத்திலிருந்து அவரது பணிகளை அன்னையார் தொடர்ந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மறைவுக்குப்பின் சுவாமி விவேகானந்தர் ராமகிருஷ்ண சங்கத்தை அமைத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடி சீடர்கள் 15 பேருடன் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சுவாமி விவேகானந்தர் பரிவிராஜகராக (பரதேசியாக) இந்தியா எங்கும், இமயமலை வரை யாத்திரை செய்தார். அதன் பின் சற்றும் எதிர்பாராத வகையில் 1893இல் சிகாகோவில் நடைபெற்ற உலகசமய மாநாட்டில் கலந்து, அதைத் தொடர்ந்து, மேற்கு நாடுகள் எங்கும் பயணம் செய்து ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீகச் செய்தியை உலகெங்கும் பரப்பினார்.

அதேபோல அன்னை சாரதாதேவியார் கல்கத்தா ஆசிரமத்தில் தான் இருந்த இடத்தில் இருந்து கொண்டே முன்பு ஸ்ரீராமகிருஷ்ணர் எவ்வாறு ஆன்மீக ஒளியைப் பரப்பி, தனது ஆன்மீக சக்தியால் பல காரியங்களை நிறைவேற்றினாரோ, அவ்வாறே பல காரிய சாதனைகளைச் செய்தார். ஆசிரமத்தைத் திறம்பட நிர்வகித்தார். வெளிநாட்டிலிருந்து வந்த பலருக்கு ஆன்மீக வழிகாட்டியானார். உலகின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆன்மீக உபதேசத்திற்கும் தீட்சைக்கும் கூட்டம் கூட்டமாக வந்தபோது அவர்களுக்கு ஆன்மீக விளக்காக விளங்கினார்.

## அன்னையின் இறுதிக்காலம்

இவ்வாறு 33 வருடங்கள் (1887-1920) ஸ்ரீராமகிருஷ்ணரின் பணியைத் தொடர்ந்த அன்னையார், தனது இறுதிக்காலத்தில் அவரைப்

போலவே, பக்தர்களுக்குத் தீட்சை வழங்கியதன் மூலம் கிடைத்த பாவச்சுமையைக் கரைப்பதில், சில நாள்கள் துன்புற்றார்.

இந்த இறுதிநாள்களில் அன்னையார் பெரும்பாலும் சமாதி நிலையிலேயே இருந்தார். யாராவது அவரை அணுகினால் எரிச்சலுற்றார். பல டாக்டர்கள் வந்து பார்த்தனர். யோகின்மா என்ற சிஷ்யையும் சாரதானந்தர் என்ற சீடரும் அவரது தேவைகளைக் கவனித்துக் கொண்டனர்.

கடைசி மூன்று நாள்கள் அவர் சுயநினைவு இழந்த நிலையில் இருந்தார். ஒரு முறை சுவாமி சாரதானந்தரை அழைத்து "சரத்" நான் போகிறேன். யோகின்மா, கோலஸ்மா மற்றும் எல்லோரும் இருக்கிறார்கள். "அவர்களைக் கவனித்துக் கொள்" என்றார். கண்ணை மூடினார்.

1920 ஜூலை 20ஆம் தேதி பகல் அவர் உயிர் பிரிந்தது. அன்னை மகா சமாதி அடைந்தார்.

இன்று அன்னையின் ஒளிமயமான வாழ்க்கையையும், பணிகளையும், உபதேசங்களையும் நினைவு கூரும் வண்ணம் மூன்று நினைவாலயங்கள் உள்ளன. அவை, பேலூர்மடம், உத்பாதன் மாளிகை, ஜெயராம்பாடி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

அவருடைய தாய்மையைக் குறித்து சுவாமி அபேதானந்தர் இயற்றிய பாடல்களில் ஒன்று :

இருவிழிப் பார்வையில் யோகம் இலங்க
எழில்முகம் தன்னில் கருணை விளங்க
வருந்தும் உயிர்பால் மனம் மிக உருக
வளரொளி பொழியும் தூய்மையின் விளக்காய்
பெருங் கொடை வழங்கும், திருவுடை வடிவாய்
பேருல குயிர் நலம் கருதி வந்துற்றுப்
பரம ஹம்சரின் நினைவிலே இன்பம்
பருகிய தாயை வணங்கிடுவோமே

**நாம் உணர வேண்டியது**


பகவான் ராமகிருஷ்ணர் சுவாமி விவேகானந்தர் அன்னை சாரதா ஆகிய மூவரைப்பற்றியும் ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. விஞ்ஞானத்திலும், அஞ்ஞானத்திலும் மூழ்கியிருந்த மேற்கத்திய உலகுக்கு மெய்ஞ்ஞான வழியைக் காட்டியவர்கள் நாங்கள். வாழ்க்கை என்பது வெறுமனே உலோகாயதமான செல்வங்களில் தங்கியிருக்கவில்லை. அது நமக்குள்ளே நிறைந்திருக்கின்ற ஆன்மீகத்திலேயே தங்கியிருக்கிறது என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் நாங்கள். போட்டி, பொறாமை, புகழ், பணம் இவையெல்லாம் வாழ்க்கை அல்ல. அன்பு, பாசம், தியாகம் இவையே உண்மையான வாழ்க்கை என்ற உண்மையை உலக மக்களுக்கு எடுத்துக் கூறியவர்கள் நாங்கள்.

இன்று அந்த உண்மையை உணர்ந்து கொண்ட மேல் நாட்டு மக்கள், நாங்கள் காட்டிய ஆன்மீக

வாழ்க்கையை நோக்கி, ஆயிரக்கணக்கில், லட்சக்கணக்கில் வந்து கொண்டிருக்கிறார்கள். உலகெங்கும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கிளைகள் ஆல்போல தழைத்து அருகுபோல் வேரூன்றி உள்ளன. நம்மை விட மேல்நாட்டவர்களே, இன்று ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் நூல்களை அதிகம் படிக்கிறார்கள். இந்தப் பாரிய பணியில் அன்னை சாரதாதேவியின் பங்களிப்பு அளப்பரியது.

இந்த நிலையில், மீண்டும் ஒரு முறை மேல் நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் போலித்தனமான மார்க்ஸிஸம், பெண்ணியம் போன்ற வேஷங்களை அணிந்து கொண்டு ஆர்ப்பரிப்பது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். நமது பெருமையை நாமே நமது காலின் கீழ் போட்டு மிதிப்பதாகும். எனவே, இவ்வாறான அந்நிய மாயைகளை உதறித்தள்ளிவிட்டு, அன்னை சாரதா, பகவான் ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் காட்டிய பாதையில், சுயகௌரவத்துடன் ஏறு நடை போடுவோம்.

(இந்து ஒளி, தை - பங்குனி - 2002,
அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு)



# ஈழத்தில் பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்கள்

காளியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகியம்மன், துர்க்கையம்மன், திரௌபதியம்மன் எனப் பல பெயர்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண் தெய்வங்கள் தமிழ் இந்துக்களால் வழிபடப்படுகின்றன. இவற்றுள் ஈழத்தில் பிரபல்யமாக விளங்குவது கண்ணகியம்மன் வழிபாடு ஆகும். கிழக்கிலங்கையில் இவ்வழிபாடு மிகவும் பிரபல்யம் பெற்றது. பத்தினி வழிபாடு என்பது கண்ணகி வழிபாட்டினையே குறிக்கும். பத்தினி வழிபாடு நெடுங்காலப் பழமையுடையது.

## 1. ஈழத்தில் பத்தினி வழிபாடு

ஈழத்தில் பத்தினி வழிபாட்டினைக் கொண்டு வந்தவன் முதலாம் கஜபாகு மன்னனாவான். இது பற்றி சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது :

கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந்நாட்டாங்கண் இமய வரம்பனின்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்

மகாவம்சம், இராஜாவலிய முதலிய பாளி வரலாற்று நூல்களாலும் இதை அறிய முடிகிறது. சிங்கள மக்கள் மத்தியில் கண்ணகி "பத்தினி தெய்யோ" என அழைக்கப்படுகிறாள். தமிழ் மக்களிடையேயும் பத்தினி வழிபாடு என்றே இன்றுவரை இது நிலைத்து நிற்கிறது.

## 2. பத்தினிக் கோயிலில் இடம்பெறும் சடங்குகள்

கஜபாகு மன்னன் காலத்தில் ஆடிப்பூரணை தோறும் "பெரஹரா" என்னும் விழா எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் புத்த சமயச் சடங்குகளும் இவ்வழிபாட்டு முறையோடு சேர்ந்து கொண்டன. ஆனால் தமிழர் பாரம்பரியங்களோ பல்வேறுபட்டதாகத் தொடர்கின்றன. கோயில் கதவு திறப்பதற்கு முன்னர் "வண்ணான்கூய்" சொல்லுதல் தொடக்கம் ஊர்காவல் பண்ணுதல், கதவு திறத்தல், பறை அடித்தல், மடை வைத்தல், கலியாணக் கால் வெட்டுதல், மடிப் பிச்சை எடுத்தல், நெல்லுக் குற்றல், தோரணம் கட்டுதல், விநாயகப் பானை ஏற்றுதல், ஏடுபடித்தல், பூப்பந்தல் கொண்டு வருதல் முதலாம் குளிர்ச் சடங்கு வரை பல சடங்குகள் தமிழக வழிபாட்டு முறையில் இடம்பெறுகின்றன.

இவற்றிடையே காவடி எடுத்தல், அலகு குத்துல், அங்கப் பிரதட்சணம் செய்தல், மடைப்பெட்டி கொடுத்தல், அடையாளம் கொடுத்தல் போன்ற நேர்த்திக் கடன் நிகழ்ச்சிகளும் கூத்து, கும்மி, கரகம், வசந்தன், கொம்புமுறி, குரவைக் கூத்து முதலாம் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஊருக்கு ஊர் வேறுபட்டாலும் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகவே காணப்படுகின்றன. சக்தி வழிபாட்டின் பாரம்பரியங்களை அவை நினைவூட்டுகின்றன.

### 3. "வண்ணான் கூய்" அறிவிப்பு

கதவு திறப்பதற்கு முன்னே ஊர் மக்கள் கூடி சகல ஏற்பாடுகளையும் தீர்மானிப்பர். கதவு திறப்பதற்கு மூன்று நாள்களுக்கு முன்பே இரவு வண்ணான் "கூய்" போடுதல் இடம்பெறும். பிரசவம் ஆனோர், பூப்படைந்தோர், வீட்டுக்குத் தூரமானோர் ஊரைவிட்டு வெளியேறும்படி கூறி கூப்பாடு போடப்படும், அவர்கள் ஊரை விட்டு வேறிடம் செல்வார்கள். இந்நிகழ்வுடன் புலால் உணவு உண்ணுதலும் விலக்கப்படும். இதனால் ஊரே சுத்தமடையும். ஊர் மக்கள் கூடி ஆலய வளவு தொடக்கம் அயல் முழுவதையும் சுத்தம் செய்வர். வெளியிடங்களில் தங்கியுள்ள சகலருமே கண்ணகை அம்மன் சடங்கு என்றவுடன் ஊர் திரும்பி விடுவது மரபாகும். இன்றும் கூட பெரும்பாலானோர் இதனைக் கடைப்பிடிக்கின்றனர்.

### 4. ஊர் காவல் பண்ணுதலும் கதவு திறத்தலும்

வைகாசி மாதப் பூரணையிலே அம்மன் குளிர்த்தி இடம்பெறும். குளிர்த்திச் சடங்கு 'கதவு திறத்தல்' நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கும். பெரும்பாலான

இடங்களில் ஒரு ஞாயிறு இரவு கதவு திறத்தல் இடம்பெறும். சில ஊர்களில் வெள்ளி இரவும் ஆரம்பமாகும். ஒன்பது நாள்கள் அல்லது பதினொரு நாள்கள் சடங்கு நடைபெறும். சில கிராமங்களில் கதவு திறத்தல் சடங்கிற்கான சாப்பாடு முதலியன தலைமை வண்ணக்கர் வீட்டிலும் இடம்பெறும். கதவு திறப்பதற்கு முன்பு கட்டாடியார் என்று அழைக்கப்படும் பூசகர் முழுகி 'மாத்து' உடுத்தி ஊர் முழுவதும் புனிதமான தீர்த்தம் தெளித்து ஊரைக் காவல் பண்ணும் சடங்கினைச் செய்வார். இதன் பின்பே பூசைப் பொருட்களை தட்டத்தில் வைத்து கோயில் திறப்பையும் அதில் வைத்துப் பயபக்தியுடன் வெளிப் பூசை செய்வார். அப்போது மடையும் வைப்பார். சில கிராமங்களில் கதவு திறக்காதவிடத்து ஏழு தரம் முழுகி ஏழு மாற்று உடுத்தி திறப்பதாகவும் பேசப்படுகிறது. சில ஊர்களில் கலியாணக்கால் வெட்டி, கடல் நீர் கொண்டு வந்து தெளித்து கதவு திறக்கும் மரபும் உண்டு.

## 5. கட்டாடிகளும் பூசை முறைகளும்

### (அ) கட்டாடிகள்

அம்மனுக்குப் பூசை செய்பவர் கட்டாடியார் என அழைக்கப்படுவர். வெண்பட்டை இடுப்பிலே உடுத்திப் பட்டுச் சால்வையினால் மார்பிலே ஏகாவடம் போட்டு, பட்டுச் சால்வையிலே தலைப்பாகையும் கட்டிக் கொள்வார். கழுத்திலே உருத்திராக்கம் மாலையும், கையிலே சிலம்பும் அணிந்து மேனியெங்கும் திருநீறும்,

மஞ்சளும் பூசி பொட்டும் இட்டு அம்மன் போலவே திகழ்வார். இடுப்பிலே வேப்பிலை சொருகியிருப்பார். கட்டாடியார் எனப்படும் இவர் சில இடங்களில் கப்புறாளை எனவும் அழைக்கப்படுவார். இவ்விரு சொற்களும் சிங்களச் சொற்கள். சிங்கள மக்கள் மத்தியில் இருந்து பத்தினி வழிபாடு பரவியது என்பதற்கு இது ஒரு சான்று ஆகும்.

### (ஆ) புறக்கட்டாடியார்

கட்டாடியாருக்கு உதவியாக புறக்கட்டாடியார் எனப்படும் உதவி செய்வோர் இருப்பர். இவர்கள் கோயில் நிர்வாகிகளான வண்ணக்குமாருடன் மடை வைத்தல் தொடக்கம் சகல கோயில் தொண்டுகளிலும் ஈடுபடுவர்.

### (இ) சடங்கு வழிபாடு

ஆகமங்களில் கண்ணகி வழிபாடு பற்றிக் கூறப்படவில்லை. கி.பி.3ஆம் நூற்றாண்டு தொடக்கம் ஏற்பட்ட இந்த வழிபாடு மந்திர சுலோக வேதகிரியைகள் எதுவுமற்ற முறையிலே பத்ததி முறைப்படி செய்யப்படும் சடங்கு ஆக விளங்குகிறது. இது சடங்கு என்றே அழைக்கப்படும். இச் சடங்கில் உடுக்கு அடித்தல், காவியம் பாடல் என்பன இடம்பெறும்.

பலவகை பழங்களை நிவேதனமாக படைப்பர். இது மடை எனப்படும். வேப்பிலை, கமுகம்பாளை, தாமரைப்பூ முதலியவற்றைக் கொண்டு மடையை

அலங்கரிப்பர். கற்பூரதீபம் ஏற்றிய பின்பு கதவு திறக்கப்படும்.

மந்திரமின்றி தீபாராதனை இடம்பெறும். பூசகர் வாய்க்கு சீலை கட்டியே பூசை செய்வார். அவரது கையிலே இருக்கும் மணி ஒலிக்கும், அவர் உருவேறி ஆடிக்கொண்டே பூசை செய்வார். மாதர் 'குரவை' ஒலி எழுப்புவர். அரோகரா சத்தம் உடுக்கு அடித்து உடுக்குச் சிந்து பாடுதல், சிலம்பு, அம்மன் காய் கிலுக்குதல் ஆகியன பேரொலியாக ஒலிக்கப் பூசை நடைபெறும். பூசை முடிவுற்ற பின் உடுக்குச் சிந்து பாடப்படும். பூசை முடிவில் மக்களுக்கு திருநீறும், தீர்த்தமும் (பாணக்கம்) வழக்கப்படும். பத்தினி கோயில்களில் மஞ்சளை அரைத்துப் பொட்டிடுவர். மஞ்சளும் குங்குமமுமே உபயோகிப்பர், சந்தனம் உபயோகிப்பதில்லை.

## 6. கலியாணக்கால் வெட்டுதலும் கலியாணச் சடங்கும்

கதவு திறத்தல் முதலாக ஒவ்வொரு நாளும் மத்தியானம், இரவு என இரு நேரம் மட்டுமே சடங்குகள் நடைபெறும். திருக்குளிர்த்திக்கு முன்பு கலியாணச் சடங்கு நடைபெறும். சில கிராமங்களில் கலியாணக்கால் வெட்டுதலுடனே சடங்கு தொடங்குதலும் உண்டு.

பெரும்பாலான கோயில்களில் கலியாணக்கால் வெட்டு நிகழ்வு குளிர்த்திக்கு முதல் நாளே இடம் பெறும். கட்டாடியார் பெண் போல சேலை உடுத்தி முக்காடிட்டு பறைமேளம் ஒலிக்க பெண்களின் குரவை ஒலிக்க 'அரோகரா' சத்தத்துடன் கலியாணக்கால் வெட்டும்

இடத்திற்குச் செல்வார். முன்பே பார்த்துத் தீர்மானித்த மரத்தடியிலே மடை வைத்து பூசை செய்யப்படும். பின்பு அம்மரம் கட்டாடியாரால் வெட்டப்படும். வெட்டிக் கொண்டு திரும்பும்போது கட்டாடியார் உருவேறிய நிலையிலே ஓட்டமாகவே ஆலயம் செல்வார். இவ்வாறான கல்யாணக்கால் வெட்டும் சடங்கு பௌத்தர்களின் பத்தினி வழிபாட்டிலும் கடைப்பிடிக்கப் படுகிறது.

## 7. கல்யாணச் சடங்கு

கொண்டு வரப்பட்ட கலியாணக்கால் மூலஸ்தானத்திற்கு முன் உள்ள கலியாண மண்டபத்திலே நடுவே இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் சிறு மேடையிலே நடப்பட்டு அலங்கரிக்கப்படும். அழகான சரிகைச் சேலையினால் அக்கலியாணக்கால் அலங்கரிக்கப்படும். பெண் போன்ற தோற்றம் தரும் வகையில் கலியாணக்கால் அமைக்கப்பட்டிருக்கும்.

கலியாணக்காலுக்கு முன் பூரண கும்பம் வைக்கப்படும். கலியாணக்காலைச் சுற்றி மடைகளும் வைக்கப்படும். இம்மடைகள் பூரண கும்பம், வெற்றிலை, பாக்கு, கமுகம்பாளை, தாமரைப்பூ, வாழைப்பழம், வேப்பிலை கொண்டு அலங்கரிக்கப்படும். பெரும்பாலான கோயில்களில் இரவு வேளைகளில் பூசை தொடங்கி விடியும் போது முடிவுறும். பகலில் பூசை நடைபெறும் கோயில்களும் உண்டு. உடுக்கு ஒலி, பெண்களின் குரவை அரோகரா ஒலி, பூசகரின் மணி ஒலி

என்பன ஒன்று சேர்ந்து பேரொலியாக ஒலிக்கும். நேர்த்திக்கடன் வைத்தோர் கல்யாணக்காலைச் சுற்றிவர பூசை நடைபெறும். திருநீறு, தீர்த்தம் வழங்கும்போது மணம் கமழும் வெற்றிலை பாக்கும் கல்யாணப் பலகாரமும் மக்களுக்கு வழங்கப்படும்.

## 8. கும்பச் சடங்கு

ஆலயத்திற்கு முன் மண்டபத்திலே கால்கள் நாட்டி அழகான மண்டபம் அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்படும். இம்மண்டபக் காலில் கல்யாணக்கால் போன்று அழகான கொய்தகம் வைத்து சேலை உடுத்தப்படும். இது பெண் உருப்போன்று காணப்படும். இக்கால்களிலே கமுகம் பாளை, வேப்பிலை வைத்து அலங்கரிக்கப்படும். மண்டபத்தின் நடுவே பூரண கும்பம் எனப்படும் கும்பத்தில் நெல் குவியலாகக் கொட்டப்படும். நெல் குவியலின் மேல் அழகான கும்பம் ஒன்று வைக்கப்படும். சில ஆலயங்களில் மூலஸ்தானத்தில் நெல் கொட்டப்பட்டு கும்பங்கள் வைக்கப்படும். அம்மனுக்கு ஒரு கும்பம் வைக்கப்பட்டு, அக்கும்பத்துடன் திருக்குளிர்த்திக்கு அம்மன் வருவது மரபு.

## 9. தோரணம் ஏற்றுதல்

கிராம மக்கள் சேர்ந்து தோரணம் கட்டுவர். புதிதாக கம்புகள் வெட்டப்பட்டு விதிமுறைப்படி திட்டமிடப்பட்டு அனுபவம் வாய்ந்தோரால் அழகாக கட்டப்படும். வேறு கிராமங்களில் இருந்து கட்டப்பட்டு

ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டு ஏற்றப்படும் வழக்கமும் உண்டு. அங்கேயே கட்டப்பட்டு ஏற்றும் நிகழ்ச்சியும் உண்டு. தோரணம் ஏற்றும் போது மடைவைத்து பூசை செய்து அம்மன் ஆலய முன்முகப்பில் ஏற்றி வைக்கப்படும். மூன்று தோரணங்களும் ஏற்றப்படும்.

## 10. ஏடு படித்தல்

அம்மனின் வரலாறு கூறும் ஏடு, கலியாண ஏடு, குளிர்த்தி ஏடு என மூவகைப்படும் ஏடுகள் உள. ஆலயத்திலேயே ஒரு புறத்தே பூசை தவிர்ந்த நேரங்களில் வரலாறு கூறும் ஏடு படித்தல் தினமும் இடம்பெறும். மடைவைத்து முறைப்படி பூசை செய்து தொடங்கப்பட்ட இவ்வைபவம் தொடர்ந்து நடைபெறும். பக்தர்கள் பயபக்தியுடன் குழுமி இருந்து கேட்பர். கலியாணச் சடங்கின்போது அம்மனின் கலியாண ஏடு படித்தல் இடம்பெறும். கலியாணச் சடங்கு முடிவுற ஏடு படித்தவுடன் கலியாணச் சடங்கு நிறைவுறும். குளிர்த்தியின் போது குளிர்த்தி ஏடு படிக்கப்படும். இதற்கென சோடிக்கப்பட்ட மண்டபத்திலே அம்மனைக் கொண்டு வந்து தீர்த்தச் சட்டியின் மேல் அமர்த்தி குளிர்த்தி ஆடும்போது இந்த ஏடு படிக்கப்படும், இருவர் மாறி மாறிப் படிப்பர். குத்து விளக்கு ஒளியிலே சீர் பொருத்தும் ஐங்கரனே என்ற விநாயகர் காப்புப் பாடலுடன் தொடங்கும் குளிர்த்தி ஏடு இசையோடு பாடப்படும்.

## 11. மடிப்பிச்சை எடுத்தல்

அம்மன் சடங்குகளில் அம்மன் தொண்டாகவும், நேர்த்திக்கடனாகவும் பெண்கள் இதைச் செய்வர். முழுகி மாத்து உடுத்தி பெண்கள் தலையிலே வேப்பிலை சூடி மடி கொய்து சீலை உடுத்துவர். அம்மடியிலே தம் வீட்டிலிருந்து சிறிது நெல்லும், வேப்பம் பத்திரத்தையும் போட்டு வீடு வீடாகச் சென்று மடிப்பிச்சை எடுப்பர். "கண்ணகி அம்மன் பேராலே மடிப்பிச்சை போடு" என்று கேட்டுப் பெறும் நெல்லை அம்மன் ஆலயத்திலே கொடுப்பர்.

## 12. நெல்லுக் குத்துதல்

மடிப்பிச்சை நெல், நேர்த்திக் கடன் நெல் என்பன ஆலய வீதியிலே காயவிடப்பட்டு உரல் நாட்டிக் குத்தப்படும். குளிர்த்திப் பூசை அன்று பின்னேரம் இந்நிகழ்ச்சி இடம் பெறும். பெண்கள் கூடி குற்றி புடைத்து அரிசி ஆக்கிக் கொடுப்பர். இந்நிகழ்ச்சியும் மடைவைத்து பூசை வைத்தே ஆரம்பிக்கப்படும். இந்த அரிசி விநாயகப் பானை பொங்கும் போது சேர்த்துக் கொள்ளப்படும்.

சில கிராமங்களில் இவ்விதம் குற்றப்பட்ட அரிசி, மரக்கறி சமையல் பொருட்கள் எல்லாம் ஒன்றாகப் போட்டுச் சமைத்து அம்மனுக்கு படைத்து பிரசாதமாக வழங்கும் வழக்கமும் உண்டு.

## 13. விநாயகப் பானை எழுந்தருளல் (ஏற்றுதல்)

மேலே கூறியவாறு குற்றி எடுக்கப்பட்ட அரிசியினை அம்மனுக்காக பொங்கும் நிகழ்வே இது. விநாயகப் பானை என்னும் இந்நிகழ்வு குளிர்த்தி சடங்கின் போது முக்கியமான ஒரு வைபவமாகும். புதிதாக வாங்கிய வேலைப்பாடுகளுடன் ஆலய முன்றிலிலே புதிதாக அடுப்பு மூட்டி மடைவைத்து தீபாராதனை செய்து பானைகளை அடுப்பில் ஏற்றுவர். மூன்று பானைகள் வைத்தல் மரபு. பானையில் பால் பொங்கும் வேளையில் நடுவில் உள்ள பானைப் பாலை மூலஸ்தானத்திற்குக் கொண்டுபோய் அம்மனுடைய மடையில் பக்குவமாக வைப்பர். ஆண்டுதோறும் விநாயகப் பானை புதிதாக வாங்கப்படும்.

மாட்டுப்பட்டி உள்ள கிராமங்களில் மக்கள் பாலைக் கறந்து கோயிலுக்குக் கொடுப்பர். ஆலயத்தில் இதற்கெனப் பெரிய பானைகளும் அண்டாக்களும் வைக்கப்பட்டிருக்கும். பக்தர்கள் தத்தமது பட்டியின் பாலைக் கொண்டு வந்து ஊற்றிப் போவார்கள். இப்பாலைக் கொண்டே விநாயகப் பானை பொங்கப்படும். நேர்த்திக் கடனில் பொங்கும் எல்லோருக்குமே இப்பால் பகிர்ந்தளிக்கப்படும். இறுதியில் எல்லோரினதும் பானையிலுமே மூன்று அகப்பை அள்ளப்பட்டு அம்மனுக்கு படைக்கப்படும். இதில் பொதிந்துள்ள சமத்துவக் கருத்து கவனத்திற் கொள்ளத்தக்கது.

## 14. நேர்த்திக் கடன்கள்

சடங்கு காலத்தில் பக்தர்கள் பல விதமான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். தீச்சட்டி ஏற்றல், மடிப்பிச்சை எடுத்தல், காவடி எடுத்தல், அலகு குத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், மடைப்பெட்டி கொடுத்தல், பிள்ளை விற்றல், அடையாளம் கொடுத்தல் என அவை பலவிதமாக அமையும்.

### அ. காவடி எடுத்தல்

இது பால் காவடி, முள்ளுக்காவடி, தேர்க் காவடி எனப் பல வகைப்படும். சிறுவர்கள் பால் காவடி எடுப்பர். முழுகி காவியுடுத்தி உருத்திராட்ச மாலை அணிந்து தயாரானதும் பெரியவர்கள் காவியம் பாடி உடுக்கு அடித்து உருவேற்றுவர், பின் காவடியை தோளில் வைத்து அரோகரா சத்தத்துடன் பலர் தொடர்ந்து வர காவடி ஆலயத்திற்குள் செல்லும்.

இவ்விதமே முள்ளுக்காவடி எடுப்பவர் முதுகிலே பல முட்கள் குத்தி எடுக்கப்படும். ஒருவர் செடில் பிடித்து இழுக்க காவடி தாங்கியவர் தாளத்திற்கேற்ப ஆடுவர், தனியேயும் கூட்டமாகவும் மத்தளம் சல்லாரியுடன் தாளத்திற்கேற்ப ஆடியபடி காவடி ஆலயத்தை அடையும்.

இவ்விதமே தேர்க்காவடி, பறவைக் காவடி போன்றவையும் எடுப்பவரின் உடலை வருத்துவனவாய் இருக்கும். தேர்க்காவடி தேரை இழுப்பதாகவும், பறவைக் காவடி தேரிலே தொங்குவதாகவும் அமையும்.

### ஆ. அலகு குத்துதல்

அலகு குத்துபவரின் வாயில் ஊசி ஏற்றி அலகினைப் பொருத்துவர். மந்திர உச்சாடனத்துடன் அலகு குத்தும் போது பக்தர் உருவேறிய நிலையில் காணப்படுவார். பெரும்பாலும் பெண்களே அலகு குத்துவதுண்டு. அலகு குத்திய பெண்கள் ஊர்வலமாக கோயிலை நோக்கிச் செல்வர்.

### இ. அங்கப் பிரதட்சணம்

காவியுடுத்தி உருத்திராட்சமணிந்து கையில் தேங்காயுடன் பக்தர்கள் அம்மன் ஆலயத்தினைச் சுற்றிவருவர். இது கிராமப் புறத்தில் நமசிவாயம் உருளல் எனப்படும். இவர்கள் எல்லோருமே காலை முதல் உபவாசம் இருந்து நேர்த்தி முடிவுற்ற பின்னரே இளநீர் அருந்துவர்.

### ஈ. பிள்ளை விற்றல்

நேர்த்திக் கடன்களில் இதுவுமொன்று. பெற்றோர் தமது சிறு குழந்தைகளைப் பூசாரியிடம் கொடுத்து விலை கூறச் செய்து பின் தாமே அக்குழந்தையைப் பெற்றுக் கொண்டு காணிக்கை செலுத்துவர்.

### உ. அடையாளம் கொடுத்தல்

ஆலயத்திலே அடையாளப் பொருட்கள் விற்கப்படும். குறிப்பிட்ட நேர்த்திக் கடனுக்குரிய பொருட்கள் வெள்ளி, தங்கம் போன்றவற்றிலும் செய்தும்

கொடுக்கப்படும். ஆலய முகப்பிலே அடையாளப் பொருட்கள் பாக்கு, பழம், வெற்றிலை போன்றவற்றுடன் வழங்கப்படும். வழங்கிய பின் பெட்டியில் வைத்து வெள்ளைத் துணியால் மூடி தலையில் வைத்து கோயிலை வலம் வந்து கொடுத்தவுடன் தீர்த்தம் தெளித்துப் பெற்றுக் கொள்ளும் பூசகர் விபூதிப் பிரசாதம் கொடுப்பார்.

இவை தவிர ஆடு, மாடு, கோழி, தென்னங்கன்று, கமுகம்கன்று போன்ற பலவும் நேர்த்திக் கடனுக்காகக் கொடுக்கப்படும்.

## 15. கதவு திறத்தல் தொடக்கம் குளிர்த்திச் சடங்கு வரை இடம் பெறும் பாரம்பரிய ஆடல்கள்

கதவு திறத்தல் நிகழ்வின் பின்பு குளிர்த்தி முடியும் வரை இரவிலும் பகலிலும் பல பாரம்பரிய ஆடல்கள் இடம் பெறுகின்றன. கூத்து, கொம்பு விளையாட்டு, குரவை கூத்து; கரகம், கும்மி, வசந்தன், கோலாட்டம் எனப் பல வகையான கலை நிகழ்ச்சிகள் கோயில் முன்றலில் அல்லது விசேடமாக அமைக்கப்பட்ட மேடைகளில் நடைபெறும்.

### அ. கூத்து

வடமோடி, தென்மோடி என இரு வகையான கூத்துகள் பண்டு தொட்டு இன்று வரை இடம் பெற்று வருகின்றன. இவை விடியும் வரை ஆடப்படும். ஆலய முன்றலிலே இதற்கென விசேட களரி கட்டப்படும்.

வடமோடி, தென்மோடி இரண்டு கூத்துகளும் தாளம், பாடல், ஆட்டம், உடை என்பனவற்றால் வேறுபடும். இவை வட்டக் களரியிலே மேடையேற்றப்படும். மக்கள் விடியும் வரை இருந்து பார்ப்பர். களரி தோரணம் கட்டி மடை, கும்பம் வைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். வடமோடி பாரமான உடை அலங்காரங்களைக் கொண்டது, தென்மோடி இலகுவான உடையாகவும் மணிகள் பூக்கள் பாரமற்றமுடி என்பன கொண்டதாயும் அமையும். வரவுப்பாடல் சபையோரால் பாடப்படும். இக்கூத்துகள் பெரும்பாலானவை பாரதக் கதைகளைக் கொண்டதாகவே அமையும்.

### ஆ. கொம்பு விளையாட்டு

பத்தினி வழிபாட்டுப் பாரம்பரியங்களில் பழமையான சிலப்பதிகாரக் காலம் முதல் தொடர்ந்து வருவதும் சிறப்பானதுமான ஒரு கலையாடல் கொம்பு விளையாட்டாகும். இதனை கொம்புமுறி என்றும் குறிப்பிடுவர். இக் கொம்புமுறி போர்த் தேங்காய் அடித்தல் போன்ற விளையாட்டுகள், சிங்களவர் மத்தியிலும் பத்தினி வழிபாட்டோடு தொடர்புபட்டு நிலவி வருகிறது. கொம்பு முறி விளையாட்டின் விபரம் வருமாறு : கிராம மக்கள் வடசேரி, தென்சேரி என இரண்டாகப் பிரிந்து கொள்வர். வடசேரி கோவலன் கட்சியாகவும், தென்சேரி கண்ணகி கட்சியாகவும் கருதப்படும். கரையாக்கன் மரத்தின் வேர்களிலிருந்து கொம்பு செதுக்கப்படும். பில்லி எனப்படும் குறுந்தடிகளினால் கொம்பு இணைத்து இறுக்கி வரிந்து

கட்டப்படும், மந்திர உச்சாடனம் செய்யப்படும். ஒரு மரத்தில் பூட்டிய அரிப்பு (வடம்) எனும் கயிற்றில் தென்சேரிக் கொம்பு தொங்கவிடப்பட்டு அதில் வடமோடிக் கொம்பினையும் பிணைத்து அவ் வட்டத்தினைப் பிடித்து இழுப்பர்.

### இ. போர்த் தேங்காய்

கொம்பு விளையாட்டின் முதற் கட்டமாக கொம்புகளை எடுத்து பிரார்த்தனை செய்து போர்த்தேங்காய் அடித்தலுடன் ஆரம்பிப்பர். கொம்புகள் கொண்டு வரும் போது மக்கள் நிறைகுடம் வைத்து வரவேற்பர், கொம்பு இழுத்து முறித்த பின்னர் உடைத்த ஓடகத்துக்குரிய முடியைக் கழற்றி வெற்றிக் கொம்பிற்கு மாலை அணிவித்து அதை ஊர்வலமாகக் கொண்டு செல்வர். அதனை மஞ்சள் நீராட்டி மக்கள் வரவேற்பர்,

ஆற்றோரம் போது மயில் அது
ஆண் மயிலோ பெண் மயிலோ
பார்த்து பாடவா வடசேரியான் உனக்கு
பாவற்பழம் போல மாலை தானே

எனப் பல கொம்புமுறிப் பாடல்கள் உள.

கொம்பு முறி விளையாட்டு நடாத்தப்படுவதனால் அம்மன் நோய்கள் பரவாது என நம்பப்படுகிறது. குளிர்த்திச் சடங்கு முடிவடையும் முன் இடம்பெறும் ஒரு முக்கிய நிகழ்ச்சி இதுவாகும்.

**ஈ. கரகம்**

பத்தினி கோயில்களில் இடம் பெறும் பிறிதோர் மரபுக் கலையாடல் கரகமாகும். இது காத்தவராயன் கதைப் பாடல்களையே கொண்டது. வேப்பிலைகள், மலர்கள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்ட செம்பினை மந்திரித்து தலையிலே வைத்து ஆடுவர். செம்பு விழாமல் சுழன்று சுழன்று ஆடுவர். இதுவும் ஒரு வித அற்புதமே.

**உ. கும்மி**

குரவைக் கூத்தைப் போன்று அம்மனைக் குளிர்விக்க ஏற்பட்ட ஒரு ஆடல் இது. பெண்கள் கூடி கும்மி கொட்டுவர். பாடலுக்கும் தாளத்திற்கும் ஏற்ப கைகொட்டி வட்டமாக ஆடி வருவர்.

**ஊ. வசந்தன் ஆட்டம்**

இது ஆண்கள் ஆடுவது. பன்னிருவர் வட்டமாக நின்று கோல் கொண்டு தாளம் பிசகாது ஆடுவர். வெவ்வேறான சத்தங்கள் கொண்ட பாடல்கள் பாடப்படும். மத்தளம் சல்லரி இசைக்கப்படும். வேளாண்மை வெட்டு வசந்தன், அம்மன் பள்ளு வசந்தன், முசுற்று வசந்தன் எனப் பல பாடல்கள் உள. இப்பாடல்கள் கண்ணகி வரலாற்றினைக் கூறும் வகையில் அமைந்திருக்கின்றன. இவ்வசந்தன் ஆடல் நிகழ்ச்சி வயல் வெட்டி முடியும் காலங்களிலும் இடம் பெறும்.

### எ. குரவைக் கூத்து

சிலப்பதிகாரத்தில் குரவைக் கூத்து 'ஆச்சியர் குரவை', 'குன்றக் குரவை' எனப் பல வகைகளில் இடம் பெற்ற குரவை இன்று பத்தினி கோயில்களில் சடங்கின் போதும், பிற மங்கள நிகழ்ச்சிகளிலும் இடம் பெறுகிறது.

## 16. பூம்பந்தல் கொண்டு வருதல்

கலைநிகழ்ச்சிகள் எல்லாம் முடிவடைந்த பின் இறுதி நாளன்று காவடி, அலகு குத்துதல், மடைப்பெட்டி, நேர்த்திக் கடன் போன்றனவே அதிகமாக இடம் பெறும். வேறு ஒரு கோயிலிலிருந்து அல்லது வேறு கிராமங்களிலிருந்து பூம்பந்தல் கொண்டு வரப்படும். சில ஆலயங்களிலும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்து மக்கள் கொண்டு வருவர். சில கோயில்களில் இறுதிநாள் விசேடமான முறையிலே அலங்கரிக்கப்பட்டு கொண்டு வரப்படும். அம்மன் இதன் கீழ் வந்து அமர்ந்தே குளிர்த்தி ஆடுவார்.

இதை ஊரவர் கூடி அமைப்பர். சரிகைச் சீலைகள், கண்ணாடி, மாவிலை, பூக்கள், வேப்பிலை வேறும் பல அலங்கரிப்புப் பொருட்களைக் கொண்டு இது அமைக்கப்படும். நான்கு கால்களையும் நால்வர் தாங்கி வர, நடுவே பூசாரியார் கும்பத்துடன் வருவார். மடைவைத்து பூசை செய்த பின்பே பூம்பந்தல் தூக்கப்படும். நடு இரவிலே ஆரம்பித்து ஆலய வீதியை அடைய வெகு நேரமாகும். பறை மேளம் அடிக்க

பெண்கள் குரவை போட 'அரோகரா' சத்தம் முழங்க உடுக்கடித்து சிந்துபாட ஊர்லமாக நகரும். முன்னே கற்பூரச் சட்டிகள் ஏந்தியோர் செல்வர். இதனைத் தூக்கி வருவோர் முதல் கட்டாடியார் வரை உருவேறி ஆடுவது வழக்கமாகும்.

## 17. பாளை விற்றல்

பாளை விற்பனை அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்வாகும். குளிர்த்திற்கு முதல் நாள் இரவு மடை வைத்து பாளை விற்பனையை கட்டாடியார் ஆரம்பித்து வைப்பார். பின் பொதுமக்கள் தமக்கு விரும்பிய பணம் கொடுத்து பாளையின் விலையை அதிகரித்துக் கொண்டு போவார்கள். குளிர்த்திச் சடங்கு அன்று இறுதியாக விலை கூறப்படும். இறுதி விலை கொடுத்து வாங்குவோர் இதனை சகல சம்பிரதாயங்களுடனும் கோயிலுக்குள் கொண்டு போய் அம்மனுக்கு சாத்துவார்.

## 18. திருக்குளிர்த்தி ஆடல்

"வருடம் ஒரு முறை வைகாசித் திங்களில் வருவேன்" என்று கண்ணகை அம்மன் வாக்கு கொடுத்தபடி வைகாசிப் பூரணையில் திருக்குளிர்த்தி ஆடல் இடம்பெறும். திங்கட்கிழமை பின் இரவு இது நிகழும். பூம்பந்தலின் கீழே உரல்கள் வைக்கப்பட்டு அதன் மேல் பெரிய பானைகள் வைக்கப்பட்டு தீர்த்தம் கரைக்கப்படும். இது கரும்பு, கற்கண்டு, பால், பலவிதப் பழங்கள், தேன், சர்க்கரை, நெய் முதலான பதார்த்தங்கள் சேர்ந்ததாகும். பானைகள் வெள்ளைத் துணியால்

மூடப்பட்டு இருக்கும். பூசாரி பெண் வேடமுற்று முக்காடிட்டு அம்மனைக் கொண்டு வருவார். குளிர்த்தி ஏடு படிக்கப்படும். இருவர் மாறி மாறி குளிர்த்திப் பாடலைப் பாடுவர்.

ஆழியுடை சூழ் காவிரிப்பூம்
பட்டிணத்தில்
வாழ் வணிகன் தம்குலத்து மாதே
குளிர்த்தருள்வாய்

என்ற அடி பாடும் போது முதலாவது தடவையாக தீர்த்தம் அம்மனுக்குத் தெளித்து மக்களுக்கும் தெளிக்கப்படும். இடையிடையே வேப்பிலைக் கட்டினால் அள்ளி மக்களும் வீசுவர். கடைசியாக வாழி பாடி குளிர்த்தி முடிவுறும்.

திருக்குளிர்த்தி பாடி முடிவடையும் நேரம் மாலைப் பொழுது முடிந்து இருள் சூழ்ந்து விடும். அவ்வேளை அம்மனை ஆராதனைகளுடன் கோயிலுக்குள் கொண்டு செல்வர். குளிர்த்தி என்னும் பாணக்கம் எல்லாருக்கும் வழங்கப்படும்.

இறுதி நிகழ்வாக நேர்த்திக் கடன் பொருட்கள் விலை கூறி ஏலத்தில் விற்கப்படும். மூலஸ்தான கருமங்கள் முடிவடைந்ததும் கட்டாடியார் உள்ளே தூண்டா மணி விளக்கை எரியவிட்டு பயபக்தியோடு கதவை மூடுவார். பின் ஒவ்வொரு கதவாக அடைக்கப்படும்.

## 19. எட்டாஞ் சடங்கு

கதவு மூடிய பின்னரும் பெரும்பாலான கோயில்களில் சிலம்புச் சத்தம், மேளச்சத்தம், உடுக்குச் சத்தம் போன்றன கேட்பதாயும் கூறுவர். எட்டாம் நாள் காலையில் கட்டாடியார் கோயிலுக்குச் செல்வார். பெரும்பாலும் எட்டாம் நாள் திங்கட்கிழமையாகவே அமையும். முழுகி மாத்து உடுத்தி மடைவைத்து பக்தியோடு கதவு திறக்கப்படும். மூலஸ்தான படியிலே விசேட மடை வைத்து கழுவி சுத்தப்படுத்தி இரவு எட்டாம் சடங்கு நடைபெறும். இதனோடு அடைக்கப்படும் கதவு மீண்டும் அடுத்த வருடமே திறக்கப்படும்.

## 20. வேறு சில பொதுவான பாரம்பரியங்கள்

சடங்கு நாள்களில் பொதுவாக மஞ்சள் இடிப்பது, அரிசி இடிப்பது, பொரிப்பது, பலகாரம் சுடுவது போன்றன தவிர்க்கப்படும். கலியாணச் சடங்கன்று மாவிடித்து பலகாரம் சுட்டு அம்மனுக்குக் கொடுப்பது வழக்கம்.

உடுக்கு, சிலம்பு, அம்மானைக் காய், பறைமேளம் என்பன பத்தினி கோயில்களில் இடம் பெறுவது வழக்கமாகும்.

உடுக்குச் சிந்து, மழைக் காவியம், அம்மன் காவியம் என்பன பாடப்படுவதும் வழக்கமாகும்.

திருநீறு, மஞ்சள், பாணக்கம், வேப்பிலை என்பன வழங்கப்படுவதும் வழக்கமாகும்.

ஆலயக் கதவு திறந்தது தொடக்கம் திருவிழா முடிவுறும் வரை குத்துவிளக்குகள் எல்லாவிடத்தும் தொடர்ந்து எரிந்து கொண்டே இருக்கும். விளக்கு அணைந்து போகாமல் எண்ணெய் விடுவர். நேர்த்திக் கடனாக மக்கள் எண்ணெய் கொடுப்பதும் மரபாகும்.

கோயில் வருமானத்திற்கான நிலங்கள் நிவந்தம் என வழங்கப்படும். இவை குத்தகைக்கு கொடுக்கப்பட்டு வருமானம் பெறப்படும். வண்ணார் போன்றோர் சீலைகட்டல், துணி துவைத்தல் போன்ற விவகாரங்களுக்கு வழங்கப்படும் கூலி "இலவிகம்" எனப்படும்.

**தொகுப்புரை**

கண்ணகி வழிபாடு, வெளிநாட்டு ஆய்வாளர் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது. இது பற்றி ஆங்கில நூல்கள் சிலவும் வெளிவந்துள்ளன. இக்கட்டுரையில் 'பத்தினி வழிபாடு' தொடர்பான சடங்குகளையும் பாரம்பரியங்களையும் மட்டும் விபரித்துள்ளேன்.

மேலே விபரித்துள்ள சடங்குகளை அல்லது பாரம்பரியங்களை ஆழ்ந்து நோக்கும் போது சில முக்கியமான வரலாற்றுச் சமூகவியல் பண்புகளை நாம் அவதானிக்கலாம். அவற்றுள் சில வருமாறு :

(அ) சிங்கள மன்னன் கஜபாகு மூலம் இலங்கைக்கு வந்த கண்ணகி வழிபாடு, கிழக்கிலங்கையில் மட்டுமே ஆழமாக வேரூன்றியுள்ளது.

(ஆ) கிராமத்தில் உள்ள அனைவரும் இவ்வழிபாட்டில் மிகுந்த பயபக்தியுடன் ஈடுபடுகின்றனர். சம்பிரதாயங்களைப் பேணுகின்றனர்.

(இ) ஆண்டுக்கொரு முறை இடம்பெறும் உற்சவமாக இது அமைந்தாலும், மிக நீண்ட காலமாக வழிபாட்டு முறைகள் நலிவடையாமலும், சம்பிரதாயங்கள் மாற்றமடையாமலும் தொடருகின்றன.

(ஈ) கிராமத்து மக்களிடையே இவ்வழிபாடு, சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் நிலை நிறுத்துகிறது. சாதி வேறுபாடுகள் இவ்வழிபாட்டில் பாராட்டப்படுவதில்லை.

(உ) மழை பொழியவும், வளம் பெருகவும், நோய் நொடிகள் நீங்கவும், கிராமத்து மக்கள் அனைவரும் ஒன்றித்து மேற்கொள்ளும் வழிபாடாக இது அமைகிறது.

## உறுதுணை நூல்கள்

(1) நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், டாக்டர் துளசி இராமசாமி, 1985, பக். 11.

(2) சிந்தனை - ஆடி, 1983, பக்கம் 48, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கட்டுரை.

(3) சிலப்பதிகாரம் - வரந்தரு காதை, 155-164 வரிகள்.

*(4)* *வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும், அ.மு. பரமானந்த சிவம், 1999, பக்.79, 82, 86.*

*(5)* *"பண்பாடு" - இந்து சமய கலாசார திணைக்கள காலாண்டிதழ்,* Published by Dept. of Hindu Religion Cultural Affairs, Colombo - 4.

*(6)* *சிலப்பதிகாரம், பக்கம் 450 - 60.*

*(7)* *சிலப்பதிகாரம், பக் 80, 461, 460, வரி 21, 515, வரி 20.*

*(8)* Mahavamsa, Translated Gaiger, pp. 254 - 255, Ch. XXXV, Notes 110-122.

## இந்நூலாசிரியர் பற்றி...



க. தங்கேஸ்வரி

கணனிப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் (சிறப்பு) பட்டதாரியான க. தங்கேஸ்வரி, கடந்த பல வருடங்களாக தொல்லியல் ஆய்வின் கட்டுரைகளை எழுதி வருகிறார். தகுந்த சான்றாதாரங்களுடன் இவை எழுதப்படுகின்றன என்பதை ஒவ்வொரு கட்டுரையின் நிறைவிலும் இடம்பெறும் நீண்ட அடிக்குறிப்புகளிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

திருக்கோணேஸ்வரம், கந்தளாய் தம்பலகாமம், வெருகல் திருக்கோயில், புத்தங்கல, சங்கமண் கண்டி, குசலன் கந்த, கொக்கட்டிச் சோலை, தீகவாபி, மொட்டையாகல், கொழும்பு மியூசியம் முதலிய இடங்களுக்கு அடியேனும் உடன் சென்றதால், நூலாசிரியையின் 'தேடல்' பற்றி நான் நன்கு அறிவேன்.

எந்த ஒரு விடயத்தையும் துருவி ஆராய்ந்து உண்மையைக் கண்டறிவதில் அவர் முனைப்பாக உள்ளவர். இதற்கு உதாரணமாக, திருக்கோணேஸ்வர மலையின் அடிவாரத்தில், கடலடியில் உள்ள கட்டுமானங்களைப் பார்வையிடுவதற்காக, ஆலயத் தலைவர் மு.கோ. செல்வராசா அவர்களுடன் சென்ற பயங்கர அனுபவத்தைக் குறிப்பிடலாம். (இவ்வாறு பலவுள).

இக்காலத்தில் நுனிப்புல் மேய்ந்து விட்டு ஆய்வு நூல்கள் எழுதுவோர் பல உளர். அவர்களுக்கு மத்தியில், தொல்லியல் ஆய்வு முறையில் மேலாய்வு (Exploration) அகழ்வாய்வு (Excavation) கடல்கீழ் ஆய்வு (Under - Sea) முதலிய ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில், ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் தங்கேஸ்வரி தனித்துவமானவர்.

அவர் ஏற்கனவே எழுதியுள்ள (அ) விபுலானந்தர் தொல்லியல் (ஆ) தளக்கோட்டன் தரிசனம் (இ) மாகோன் வரலாறு நூல்களும் தற்போது வெளிவரும் (ஈ) மட்டக்களப்புக் கலைவளம் (உ) கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள் (ஊ) கிழக்கிலங்கைப் பூர்வீக வரலாறு நூல்களும் அவரது ஆய்வுத் திறனுக்குச் சான்றாகும். "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு." (திருக்குறள்)

- அன்புமணி